# இழப்பதற்கு ஏதுமில்லை

**[1.மதக்கலவரத் தடுப்புச் சட்டம் 2.இந்துத்துவத்தின் பாசிசத் தொடர்புகள் 3.பெரியாரும் இஸ்லாமும் 4.ஜிகாத், 5.அவர் (நபிகள் நாயகம்) என்கிற ஐந்து குறு நூல்கள்}**

**1. மதக் கலவரத் தடுப்புச் சட்டத்தின் தேவைகளும் உருவாகும் எதிர்ப்புகளும்**

திருத்தப்பட்ட மதக்கலவரத் தடுப்பு மசோதாவை பா.ஜ.கவும், ஜெயலலிதாவும் மட்டுமே எதிர்த்துள்ளனர். இரண்டு எதிர்ப்புகளுமே ஓரளவு எதிர்பார்க்கக் கூடியதே. பிற கட்சிகள் குறிப்பாக இடதுசாரிக் கட்சிகள் ஏதும் கருத்துச் சொல்லாமல் மௌனம் காப்பது வருந்தத்தக்கது. கட்சிகள் தவிர இத்தகைய ஒரு சட்ட வரைவுக்காகத் தொடர்ந்து போராடியும் திருத்தங்கள் முன்மொழிந்தும் வந்துள்ள மனித உரிமை ஆர்வலர்களும், நாட்டின் பன்மைத்துவத்தில் நம்பிக்கையுடையவர்களும் தமது கருத்துகளை முன்வைத்துள்ளனர். இக்கருத்துகள் பெரும்பாலும் வரைவை ஆதரித்தும். கூடவே ஒரு சில ஐயங்களை முன்வைத்தும் அமைகின்றன.

**தேவை:**

மிகப் பெரிய மதக் கலவரத்துடன்தான் இந் நாட்டிற்குச் சுதந்திரம் விடிந்தது. பல்லாயிரக்கணக்கான மக்களை மட்டுமின்றி பன்மைத்துவத்தின் குறியீடாக உலக வரலாற்றில் என்றென்றும் போற்றத்தக்க நிலையில் விளங்கும் காந்தியடிகளையும் அது பலி கொண்டது. அதற்குப் பின் 1961 வரை பெரிய மதக் கலவரங்கள் இல்லை. ஈடாக புதிய அரசுக்கு சிறுபான்மையினரின் குறிப்பாக முஸ்லிம்களின் நிபந்தனையற்ற விசுவாசம் கோரப்பட்டது. முஸ்லிம் தலைவர்களும் அதை நிறைவேற்றினர். எனினும். 1961 முதல் தொடர்ந்து மதக் கலவரங்கள் நடைபெறத் தொடங்கின. இதன் கொடுமுடியாக 1992-93 கலவரங்களும். 2002 குஜராத் படுகொலைகளும் அமைந்தன.

இவற்றை மதக் கலவரங்கள் எனச் சொல்வதைக் காட்டிலும் உண்மையில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் என்று சொல்வதே பொருத்தம். மதக்கலவரங்கள் குறித்து ஆய்வு செய்துள்ள ஸ்டீவன் வில்கின்சன். 1947 லிருந்து நடைபெற்ற இத்தகைய கலவரங்களில் சுமார் 40.000 பேர்

கொல்லப்பட்டுள்ளனர் என்கிறார். இவர்களில் தொண்ணூறு சதத்திற்கும் மேலானோர் முஸ்லிம்கள் என்பது குறிப்பிடத்தக்கது,

இத்தகைய மதக் கலவரங்கள் ஒருவகையான ‘ணிஸீtக்ஷீமீஜீக்ஷீமீஸீமீuக்ஷீsலீவீஜீ’ தொழில் முனைவுத் தன்மையுடன் விளங்குகின்றன என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். கலவரங்களை முன்னின்று நடத்தும் இவர்களைக் கலவரத்தொழில் முனைவர்கள் எனலாம். இதற்கான திட்டங்களைத் தீட்டி செயற்படுத்தி லாபங்களையும் குவிக்கின்றனர். கலவரங்களினூடாகச் சமூக விரோத சக்திகள் ஒரு அரசியல் அந்தஸ்தைப் பெறுகின்றனர். (பார்க்க: டெஹல்கா பதிவுகள். தமிழில் அ.மா. பயணி வெளியீடு).

முஸ்லிம்கள் பெரிய அளவில் மன, உடல் துயரங்களுக்கு அப்பால் சொத்திழப்புகளையும், வருமானம் ஈட்டும் குடும்பத் தலைவர்களையும் இழக்கின்றனர். இக்கலவரங்களைப் பின்நின்றோ, முன்நின்றோ இயக்கும் அரசியல் கட்சிகள் மத ரீதியான ஓட்டு வங்கியைக் கைவசப்படுத்தி தேர்தல் வெற்றியைக் குவிக்கின்றன.

உ.பி.யின் உயர் காவல்துறை அதிகாரியாகவும், எல்லைக்காவல் படையில் உயர் பதவியில் இருந்தவரும். 2002இல் அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவோம் எனக் கூடியிருந்த கரசேவகர்களைத் திறமையாகக் கையாண்டவருமான விபூதி நாராயணராவ் எழுதியுள்ள ஆய்வு நூலில், “இந்தியாவில் நடைபெறுகிற எந்த மதக் கலவரமும் அது உருவாகி 24 மணி நேரத்திற்கும் மேலாகத் தொடர்கிறது என்றால் அது நிர்வாகத்தின் ஒத்துழைப்புடன் நடைபெறுகிறது என்பதே உண்மை” எனக் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது, இதை விரிவாக விளக்க வேண்டிய அவசியமில்லை. குஜராத் 2002ஐ நேரில் கண்டவர்கள் நாம். இரண்டு நாட்களுக்கு எதையும் கண்டு கொள்ளாதீர்கள் என உயர் காவல்துறை அதிகாரிகளுக்கு முதல்வர் மோடி நெறிமுறை வழங்கியதற்கு அடுத்தடுத்து பல உயர் அதிகாரிகள் இன்று சாட்சியம் பகன்று கொண்டுள்ளனர். சுதந்திரத்திற்குப் பிந்திய மதக் கலவரங்களை ஆய்வு செய்ய நியமிக்கப்பட்ட 31 விசாரணை ஆணையங்களும். இக்கலவரங்களில் சிவில் நிர்வாகம் மற்றும் காவல்துறையின் ஒத்துழைப்பைச் சுட்டிக்காட்டி கண்டித்துள்ளன. ஆயுத சேகரிப்பு, ஆள்திரட்டல், கைதானவர்களுக்கான சட்ட உதவிகளை ஏற்பாடு செய்தல், அவர்களின் குடும்பங்களைப் பாதுகாத்தல், சாட்சிகளை மிரட்டுதல், குற்றப் பத்திரிகைகளையும் முதல் தகவல் அறிக்கையையும் குற்றவாளிகளைக்

காப்பாற்றும் நோக்கில் தயாரித்தல் என்பதாக சிவில் மற்றும் காவல்துறை நிர்வாகமும் ஆளும் கட்சி அமைச்சர்கள் மற்றும் சட்ட/நாடாளுமன்ற உறுப்பினர்களும் செயற்பட்டதை நாம் மறந்துவிட முடியாது,

எல்லா பெரு மதக் கலவரங்களும் குறைந்தபட்சம் சில நாட்கள் முன்னதாகவேனும் திட்டமிட்டே செயல்படுத்தப்படுகின்றன. உளவுத்துறை மூலம் இதைக் கண்டுபிடித்துத் தடுக்க முடியும், கலவரத்தைத் தூண்டும் வெறுப்புப் பேச்சை உமிழ்பவர்களைக் கைது செய்து நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால் அப்படிச் செய்வதில்லை, சட்ட ஒழுங்கில் பொறுப்பிலுள்ள மாநில அரசுகள் மனம் வைத்தால் மதக் கலவரங்களைத் தடுத்துவிட முடியும் என்பதற்கு லாலு பிரசாத் காலத்திய பீகார் ஆட்சியும், இடது முன்னணியின் தலைமையிலிருந்த மே. வங்க ஆட்சியும் சான்றுகள். முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு கைது செய்தல், கலவரங்களின்போது வன்முறையாளர்களைக் கட்டுப்படுத்துதல், குற்றவாளிகளைத் தப்பவிடாமல் உரிய சட்டப் பிரிவுகளின்கீழ் கைது செய்தல் என்கிற வடிவில் இதை மாநில அரசுகள் செய்ய முடியும். தொடர்ந்து வழக்கைச் சரியாக நடத்தி குற்றவாளிகளைத் தண்டித்தல், சாட்சிகளை மிரட்டிப் பணியவைக்க இயலாது பாதுகாத்தல், பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய வகையில் மறு வாழ்வு அளித்தல் என்கிற வடிவங்களில் அரசு நடவடிக்கைகள் அமைய வேண்டும்.

ஆனால், நீரோ மன்னனைப்போல நாடு பற்றி எரிவதை வேடிக்கை பார்த்தவர்கள் எனவும், குற்றவாளிகளைத் தண்டிக்கும் நோக்கில் வழக்கை நடத்த வேண்டிய பிராசிகியூஷன் அவர்களைத் தப்பவிடும் நோக்கில் செயல்பட்டிருக்கிறது எனவும் அரசுகளை உச்சநீதிமன்றம் கண்டிக்கும் வகையில்தான் இங்கே நடைமுறைகள் இருந்துவந்துள்ளன.

காவல்துறையினரோ. மேலதிகாரிகள் அல்லது ஆட்சியிலுள்ள வர்கள் கூறினார்கள் என நடவடிக்கை எடுக்காமலிருந்திருக்கிறார்கள். ஊரடங்கும் சட்டத்தை ஒழுங்காக நடைமுறைப்படுத்தாமல் கலவரக்காரர்களுக்கு உதவியிருக்கின்றனர். கலவரக்காரர்களை விட்டு விட்டு பாதிக்கப்பட்டவர்களைச் சுட்டிருக்கின்றனர். வதந்திகளை ஊக்குவித்திருக்கின்றனர். கலவரங்களுக்குப் பின் பாதிக்கப் பட்டவர்களுக்கு ஒழுங்கான பாதுகாப்பு அளிக்காமை. மத்திய அரசு அளித்த உதவி களைக்கூட ஒழுங்காக விநியோகிக்காமை. வன்முறையாக அவர்களைப் பாதுகாப்பு முகாம்களிலிருந்து வெளியேற்றுதல் முதலான நடவடிக்கைகளில் அரசும் நிர்வாகமும் ஈடுபட்டிருக்கிறது.

காவல்துறையினரை மூன்று வகையாகப் பிரிக்கலாம் 1) கலவரக்காரர்களுடன் ஒத்துழைப்போர். 2) ஒத்துழைக்காவிட்டாலும் சிறுபான்மையினருக்கு எதிரான மனநிலையின் விளைவாக உரிய நடவடிக்கைகளை விரைவாக எடுக்காதோர். 3) நேர்மையாகவும் சார்புகளின்றியும் செயல்படுவோர், இந்த மூன்றாமவரில் வருவோர்தான் ஆர்.பி. ஸ்ரீகுமார் போன்ற உயர் அதிகாரிகள். இவர்கள் பின்னால் ஓரங்கட்டப்படுவார்கள், பழிவாங்கும் நடவடிக்கைகளுக்குள்ளாவார்கள். இது தானே 65 ஆண்டுகால வரலாறாக இருந்திருக்கிறது,

ஒன்றைச் சொல்லவேண்டும் : இதுபோன்ற சந்தர்ப்பங்களில் வன்முறையாளர்களின் மீது நடவடிக்கை எடுப்பதற்கு நிலவும் சட்டங்களிலேயே பல வழி முறைகள் உண்டு. இந்தியத் தண்டனைச் சட்டம் 153 மற்றும் 153 அ ஆகிய பிரிவுகளின் கீழ் ஒரு குறிப்பிட்ட சமூகப் பிரிவின்மீது வெறுப்பைத் தூண்டுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம். அதேபோல நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் மீது வழக்குத் தொடர்வதற்கும் இடமுண்டு. எனினும் பெருந்திரள் வன்முறை கலவரங்களை எதிர்கொள்வதற்குப் போதுமான வழிமுறைகள் நடைமுறைச் சட்டங்களில் இல்லை. எடுத்துக்காட்டாக. சாட்சிகளைப் பாதுகாப்பதற்குப் போதிய வழிமுறைகள் இன்றில்லை. தவிரவும் வெறுப்பைத் தூண்டும் பேச்சுகளைப் பேசுபவர்கள் மீது நட வடிக்கை எடுக்க அரசுக்கு உண்மையான அரசியல் விருப்புறுதி இருக்கவேண்டும். தொகாடியாக்களையும், பால்தாக்கரேகளையும், சுப்பிரமணிய சாமிகளையும் அனுமதித்து வருபவைதான் இன்றைய காங்கிரஸ் பா.ஜ.க. அரசுகள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. தவிரவும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமானால் அரசு அனுமதி பெறவேண்டும். பொதுவாக அரசுகள் இத்தகைய அனுமதியை வழங்குவதில்லை. எனவேதான் மதக் கலவரங்களைத் தடுக்க சிறப்புச் சட்டங்கள் தேவையாக உள்ளன.

**பின்னணி:**

இந்நிலையில்தான் எப்படி தாழ்த்தப்பட்டவர்களின் மீதான வன்கொடுமைகளைத் தடுப்பதற்கான சட்டம் இங்கே இயற்றப்பட்டுள்ளதோ அதேபோல மதக் கலவரங்களையும் தடுக்கக் கூடிய சட்டம் ஒன்று வேண்டும் என்கிற கோரிக்கை மனித உரிமை ஆர்வலர்களால் எழுப்பப்பட்டு வந்தது. குஜராத் 2002க்குப் பின் இதற்கு அதிக அழுத்தம் கொடுக்கப்பட்டது. 2004 பாராளுமன்றத் தேர்தலின் போது இத்தகைய சட்டம் ஒன்றை இயற்றுவதற்கு காங்கிரஸ் வாக்குறுதி அளித்திருந்தது. 2005இல் முதல் வரைவை அன்றைய ஐக்கிய முற்போக்குக்

கூட்டணி அரசு வெளியிட்டது. அதில் பல ஓட்டை உடைசல்கள் இருந்ததால் மனித உரிமை அமைப்புகளால் கடுமையாக விமர்ச்சிக்கப்பட்டதையொட்டி அதன் திருத்தப்பட்ட வடிவம் பின்னர் வெளியிடப்பட்டது. அதனை வரவேற்று அன்று ‘தினமணி’யில் (ஜன. 2006) நான் கூட ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். (பார்க்க: நெருக்கடி நிலை உலகம்),

எனினும் திருத்தப்பட்ட வடிவத்திலும் பல குறைபாடுகள் இருந்தன. குறிப்பாக எந்த ஒரு கலவரச் சூழலிலும் இச்சட்டத்தைப் பிரயோகிக்க வேண்டுமானால் அப்பகுதியை ‘கலவரப் பகுதியாக’ அறிவிக்க வேண்டும். இதை அரசியல்வாதிகளும் கட்சியிலுள்ளோரும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்புள்ளதால் அப்பிரிவை நீக்க வேண்டும் என்றோம். இப்படி மேலும் சில விமர்சனங்களும் முன் வைக்கப்பட்டன. இதனடியாக 2009ல் வைக்கப்பட்ட வரைவும் பல விமர்சனத்திற்குரிய கூறுகளைக் கொண்டிருந்தன.

இன்றைய ஐ.மு.கூ. அரசு தேசிய ஆலோசனைக் குழு (ழிகிசி) ஒன்றை நியமித்தது. இதில் சில மனித உரிமை ஆர்வலர்களும் இடம்பெற்றனர். பின்னர் 2010இல் இக்குழுவால் உருவாக்கப்பட்ட மத வன்முறை (தடுப்பு) வரைவின் மீதும் பல விமர்சனங்கள் வைக்கப்பட்டன. இது தொடர்பாக தேசிய அளவிலான குழு ஒன்றை (ழிணீவீஷீஸீணீறீ சிஷீஸீsuறீtணீtவீஷீஸீ ஷீஸீ tலீமீ சிகூஷி ஙிவீறீறீ) அமைத்து மனித உரிமை ஆர்வலர்கள் செயற்பட்டனர். இந்நிலையில்தான், 49 திருத்தங்களுடன் இன்றைய “மதக்கலவரம் மற்றும் குறிவைத்து மேற்கொள்ளப்படும் வன்முறை (நீதி மற்றும் மறுவாழ்வு பெறுதல்) வரைவு” வெளியிடப்பட்டுள்ளது. கூடுதல் அரசுத் தலைமை வழக்குரைஞர் (கிஷிநி) இவ்வரைவை மேலும் கூர்மைப்படுத்தித் தருவதற்காக இப்போது அது காத்துள்ளது. இத்தகைய ஒரு சட்டம்: 1) மதக் கலவரத்தைத் தூண்டிச் செயற்படுத்தும் வன்முறை வலைப்பின்னலை அறுத்தெறிவதாகவும் 2) ஆயுதங்களைச் சேகரிப்பது, வதந்திகளைப் பரப்புவது முதலியவற்றைத் தடுப்பதாகவும் 3) கலவரத்தைத் தடுக்காத அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கத்தக்கதாகவும். 4) சாட்சிகளைப் பாதுகாப்பதாகவும். 5) பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய மறுவாழ்வை உறுதி செய்யக்கூடியதாகவும் அமைய வேண்டும்,

**வெளியிடப்பட்டுள்ள சட்ட வரைவு:**

மேற்கூறிய அம்சங்களை ஓரளவு நிறைவேற்றக் கூடியதாக இது அமைந்துள்ளது. இதில் கலவரத்தைத் தடுக்காமல் பார்த்திருந்த அதிகாரிகள்

மற்றும் அவர்களது உயரதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்க வாய்ப்புள்ளது. பாதிக்கப்பட்டவர்களை உடனடியாக உரிய வசதிகளுடன் கூடிய முகாம்களில் தங்கவைத்து ஏழு நாட்களுக்குள் அவர்களிடம் உயர் காவல் அதிகாரி ஒருவரால் வாக்குமூலம் பெற்று வழக்குப் பதிவு செய்யவேண்டும். அவர்களைக் கட்டாயமாக வெளியேற்றக் கூடாது. வழக்கு விசாரணையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு எல்லா வாய்ப்புகளையும் வழங்க வேண்டும். வழக்கு முடியும்வரை சாட்சிகள் உரிய முறையில் பாதுகாக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்களை மீண்டும் குடியமர்த்தும்போது அவர்களது இழப்பீடுகளை மதிப்பிட மாநில மதிப்பீட்டுக் குழு ஒன்றை அமைத்து அம்மதிப்பீடுகள் அடிப்படையில் இழப்பீடுகள் வழங்கவேண்டும். புதிய இடங்களில் குடிய மர்த்தினால் அங்கு அவர்களுக்கு முன்பிருந்த பழைய வசதிகள் செய்து தரப்பட வேண்டும்.

இச்சட்டத்தின் ஏழாம் பிரிவு பாலியல் வன்முறையை கற்பழிப்பு என்கிற வடிவில் வரையறுக்காமல் எல்லாவிதமான பாலியல் தொந்தரவுகளையும். ஆடையை நீக்குதல், நிர்வாணமாக நடத்திச் செல்லுதல், ஆடையை அவிழ்த்துக்காட்டி அவமானம் செய்தல் மற்றும் எல்லாவிதமான தொடுகைகள் வன்முறைகள் எல்லாம் இதில் உள்ளடக்கப்படுகின்றன. தவிரவும் பாதிக்கப்பட்டவர்களின் அச்சம் நிலவிய சூழலையும் மனநிலையையும் கருத்தில் கொண்டு அவர்களது தாமதமான புகார்கள், புகார்களில் உள்ள முரண்கள் ஆகியவற்றைப் பெரிதுபடுத்தாமலிருப்பது முதலியவை ஏற்கப்பட்டுள்ளன.

எட்டாம் பிரிவு வெறுப்புப் பிரச்சாரத்தையும், 10ஆம் பிரிவு இதற்கான நிதி உதவி செய்தல் முதலானவற்றையும் தண்டனைக்குரிய குற்றங்களாக்குகின்றன. 11 ஆம் பிரிவு இந்தியத் தண்டனைச் சட்டத்தில் இது தொடர்பாக உள்ள சில குற்றவகைகளை இச்சட்டத் தின்கீழ் கொண்டுவர அனுமதிக்கிறது, காவல்துறையாலோ, இல்லை வன்முறையாளர்களாலோ இலக் காக்கப்பட்ட மக்கள் சித்திரவதை செய்யப்படுவதைக் குற்ற மாக்குகிறது,

ஒன்பதாம் பிரிவு தனிநபர்கள் இவ்வாறு வன்முறையில் ஈடுபடுவது என்பதிலிருந்து பெருந்திரள் கலவர வன்முறைகளைப் பிரித்து வரையறுக்கிறது,

**சில விமர்சனங்கள்:**

இந்த வரைவில் சிற்சில குறைபாடுகள் உள்ளதை மனித உரிமை ஆர்வலர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். அவை:

1. ஆணையிடும் பொறுப்பிலுள்ளவர்கள் கடமை தவறும்போது நடவடிக்கை என்பதைப் பொறுத்தமட்டில் சிறிய குற்றங்களில் (எ-டு தடயங்களை அழித்தல்) மட்டுமே அரசு அனுமதியின்றி நடவடிக்கை எடுக்கலாம். பிற குற்றங்களாயின் அதிகாரிகள்மீது நடவடிக்கை தொடர அரசு அனுமதி பெற வேண்டும். எனவே அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க அரசு அனுமதி பெறுதல் என்கிற நிலை தொடர்கிறது. தவிரவும் மாநில அளவிலான உயர் அதிகாரிகள், அமைச்சர்கள் மீது இவ்வகையில் நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதற்கு விளக்கமில்லை.

2. நடவடிக்கை எடுப்பதற்கான அனுமதியை அரசு மறுக்குமானால் அதை பாதிக்கப்பட்டவருக்கு 30 நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும். தெரிவிக்காவிட்டால் அனுமதி கொடுக்கப்பட்டதாகக் கருதி நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் அனுமதி கொடுக்காவிட்டால் மேல்முறையீடு செய்வதற்கு இவ்வரைவில் வழி இல்லை. இது மாற்றப்பட வேண்டும். ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவர் தலைமையில் இது தொடர்பான குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

3. சித்திரவதை, பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளித்தல் தொடர்பாக இந்திய அளவிலும், சர்வதேச அளவிலும் பல புதிய கருத்தாக்கங்கள் உருவாகியுள்ளன. அவை இச்சட்டத்தில் உள்வாங்கப்படவில்லை.

4. கைது செய்யப்பட்டவர்களின் சொத்துக்களை அவை கலவரத்துடன் தொடர்புடையதாக இல்லாத போதும் அரசு கையகப்படுத்தல், காவல்துறை பாதுகாப்பில் வைத்திருக்கும் காலத்தை அதிகப்படுத்துதல் முதலான கறுப்புச் சட்டக் கூறுகள் இவற்றில் சேர்க்கப்பட்டுள்ளதையும் ஏற்க இயலாது. இப்படியான பிரிவுகள் தவறாகப் பயன்படுத்தப்படுவதற்கும் மதக்கலவரம் மட்டுமின்றி பிற அம்சங்களிலும் இதுபோன்ற சட்டங்களை இயற்றுவதற்கும் வழிவகுக்கும்.

5. சாட்சிகளை வழக்கு முடியும் வரை பாதுகாத்தல் போதாது. அதற்குப் பின்னும்கூட அவர்களுக்குப் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

6. மதக்கலவரங்களையும் எதிரான நடவடிக்கைகளையும் கண்காணிக்க மத்திய அளவிலும் மாநில அளவிலும் இரு அமைப்புகளை உருவாக்குவது குறித்து இச்சட்டம் விரிவாகப் பேசுகிறது. நடவடிக்கை அதிகாரமில்லாத மத்திய, மாநில

மனித உரிமை ஆணையங்களைப் போலவே இவையும் அமையக்கூடிய வாய்ப்பு உள்ளது.

**ஜெயலலிதா கவனிக்க:**

எனினும் மனித உரிமை ஆர்வலர்களின் விமர்சனங்களை ஏற்று பழைய வரைவில் பல திருத்தங்களும் செய்யப்பட்டுள்ளன. அவை:

1. கலவரப்பகுதி என அறிவித்த பின்பே இச்சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற நிபந்தனை நீக்கப்பட்டுள்ளது.

2. மதக்கலவத்தைத் தூண்டுதல், செயல்படுத்துதல் தொடர்பான செயல்கள் “நாட்டின் மதச்சார்பின்மைச் சூழலை அழிப்பதாக இருக்கும்போதே” குற்றமாகக் கருதப்பட வேண்டும் என்கிற நிபந்தனை நீக்கப்பட்டுள்ளது. ஏனெனில் குஜராத் 2002 போன்ற நிகழ்வுகளில்கூட ஒவ்வொரு குற்றத்தையும் இந்த நிபந்தனைக்குட்பட்டதாக நிறுவ இயலாது.

3. தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக்கேட்டும் அதிகாரத்தை அரசுக்கு அளிக்கும் பிரிவு நீக்கப்பட்டுள்ளது.

4. திருத்தப்படுவதற்கு முன்னிருந்த வரைவுச் சட்டத்தின் 20ஆம் பிரிவு கலவரச் சூழலைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு எந்த ஒரு மாநிலப் பகுதியையும் “உள்நாட்டுக் கலவரச் சூழலுள்ள” (மிஸீtமீக்ஷீஸீணீறீ ஞி வீstuக்ஷீதீணீஸீநீமீ) பகுதியாக அறிவித்து நடவடிக்கை எடுக்கும் வாய்ப்பை அளித்தது. அரசியல் சட்டத்தின் 355ஆவது பிரிவின் கீழ் மாநில ஆட்சியை நீக்கவும் இவ்வகையில் மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு. இது தவறாகப் பயன்படுத்தப்படக்கூடிய வாய்ப்பளிக்கும் என்பதால் இதே பிரிவில் கண்டுள்ள இன்னொரு பகுதியிலுள்ளவாறு “அரசியல் சட்ட உரிமைகளை மீறும் சூழல்” இருந்தால் மட்டுமே மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிற கருத்து மனித உரிமைப் போராளிகளால் முன்வைக்கப்பட்டது. தற்போதைய திருத்தப்பட்ட வரைவில் இப்பிரிவு முற்றாக நீக்கப்பட்டுள்ளது. எனவே ஜெயலலிதா இச்சட்டம் மாநில உரிமைகளை மீறுவதாகக் கூச்சலிடுவதற்கு ஒன்று. அவர் இத்திருத்தத்தைக் கவனிக்காதிருக்க வேண்டும் அல்லது அவரிடம் உள்ளார்ந்துள்ள இந்துத்துவப் பண்பு இப்படிச் சொல்ல வைத்திருக்க வேண்டும். இரண்டுமே ஒரு முதலமைச்சருக்கு தகுதியானதல்ல.

**இறுதியாக:**

இச்சட்டம் பெரும்பான்மைக்கு எதிரான சிறுபான்மை வன்முறையைக் கணக்கில் கொள்ளவில்லை என பா.ஜ.க. தரப்பில் சொல்லப்படுகிறது. இவர்கள் ஒன்றை மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும். எல்லா ஜனநாயக அமைப்புகளுமே பெரும்பான்மைப் பிரிவினர் தமக்கான பாதுகாப்பை வழமையான சட்டங்களின் அடிப்படையிலேயே பெற்றுவிட முடியும் எனவும் சிறுபான்மைப் பிரிவினர் இதுபோன்ற சிறப்புச் சட்டங்களின் அடிப்படையில்தான் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் நம்பியே செயல்படுகின்றன. அந்த வகையிலேயே இடஒதுக்கீடு முதலான சட்டங்கள் இயற்றப்படுகின்றன. தவிரவும் பயங்கரவாதச் செயல்களைத் தடுப்பதற்கு வேறுபல சட்டங்கள், வழிமுறைகள், நிறுவனங்கள் செயற்படுவதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்தியாவில் மட்டுமின்றி எல்லா ஜனநாயக நாடுகளிலும் இத்தகைய அணுகல் முறையே உள்ளது.

தவிரவும் குஜராத்தில் இந்துக்கள் பெரும்பான்மையினர் என்றால் காஷ்மீரிலும், வடகிழக்கு மாநிலங்களிலும் அவர்களைச் சிறுபான்மையினராகக் கருதி இச்சட்டத்தின்கீழ் பாதுகாப்பு அளிக்கப்படும்.

இச்சட்டம் மதச் சிறுபான்மையினரை மட்டுமின்றி, மொழிச் சிறுபான்மையினரையும், பட்டியல் சாதியினரையும் உள்ளடக்குகிறது. பட்டியல் சாதியினரைப் பொறுத்தமட்டில் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழான நடவடிக்கைகளுக்குப் பங்கமின்றி மேலதிக உரிமைகளை இச்சட்டத்திலிருந்து பெறலாம்.

மாநில உரிமைகளில் தலையிடுவது என்கிற பெயரில் அரசியல் சட்டத்தின் 355ஆவது பிரிவு பயன்படுத்தப்படுகிற அதிகாரத்தை நீக்கியுள்ளது குறித்த ஒரு விரிவான விவாதம் தேவை. ஜெயலலிதா, மோடி போன்றவர்கள் இந்த அதிகாரத்தை எதிர்க்கின்றனர். பொதுவாக. மாநில உரிமைகளில் அக்கறையுள்ளவர்களும் 355ஆவது பிரிவு பயன்படுத்தப்படுவதை எதிர்த்து வந்துள்ளனர். ஆனால், மோடி போன்றவர்கள் கலவரத்தைத் தூண்டும் வகையில் செயல்படும்போது மாநில சுயாட்சி என்கிற அடிப்படையில் மத்திய அரசு பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா? இது குறித்த விவாதம் தேவை.

ஆக, சிற்சில குறைபாடுகள் இருந்தபோதிலும் இது வரவேற்கப்படவேண்டிய சட்டம். உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டிய சட்டம். இந்துத்துவ மன நிலையை அவ்வப்போது வெளிக்காட்டுவதற்கு வெட்கப்படாதவரும் மோடியின் நெருக்கமான நண்பருமான ஜெயலலிதாவின் இந்த எதிர்ப்பை முறியடிக்க

சிறுபான்மையினரும் மனித உரிமையில் அக்கறையுள்ளோரும் உடனடியாக அணிதிரள வேண்டும்.

**2. இந்துத்துவத்தின் பாசிசத் தொடர்புகள்**

*(முதல் சில பத்திகள் விடுபட்டுள்ளன)*

அவர்களது தேசீயம் அமையும் (எ.டு: மத, மொழித தேசீயங்கள்)

நிற்க, ‘தேசபக்தர்கள்’ என்பதற்கான பொதுவாக’ ஏற்றுக் கொள்ளப்பட்ட வரையறைகளைக்கூட இந்துத்துவவாதிகள் ஏற்றுக் கடைபிடிப்பதில்லை. இந்திய தேசியக்கொடி, அரசியல் சட்டம், தேசத் தந்தை என்கிற கருத்தாக்கம் முதலியவற்றை இவர்கள் ஏற்பதில்லை. மரியாதை அளிப்பதில்லை.

“நமது நாட்டிற்கு தேசக்கொடி ஒன்றை உருவாக்கி யிருக்கிறார்களாம். நாம் எதற்கு மற்றவர்களைப் பார்த்துக் காப்பியடிக்க வேண்டும்? புராதனமான மாபெரும் தேசம் நம்முடையது; பெருமைக்குரிய பழமையைப் பெற்றிருப்பவர்கள் நாம். அப்படியிருக்கும் போது நமக்கெனச் சொந்தமாக ஒரு[a] காடி கிடையாதா? ஆயிரமாயிரமாண்டு வரலாறுடைய நமக்கென ஒரு தேசீயச்சின்னம் கிடையாதா, நிச்சமயாக உண்டு. என்னில் நமது சிந்தனையில் ஏன் இந்த வெறுமை?”

என்றெழுதினார் கோல்வால்கர் (சிந்தனைத் தொகுப்பு). இப்போதுள்ள இந்திய தேசியக்கொடி யாரையும் பார்த்துக் காப்பியடித்ததல்ல. தேசீய சின்னங்களாக வரிக்கப்பட்டுள்ளன. அசோகச் சக்ரகம், அசோகத் தூண் முதலியன நமது பழமையிலிருந்து எடுக்கப்பட்டவைதான். அப்படியிருந்தும் குருஜி இப்படிச் சொல்கிறார்.

இந்துத்துவத்தைப் பொருத்தமட்டில் வேதங்களையும் பார்ப்பனீயத்தையும் மறுத்தெழுந்த பவுத்த மதம் உலகெங்கும் பரவுவதற்குக்காரணமான அசோகரின் சின்னங்கள் நமது பழமையாக இருக்கலாம், ஆனால் பெருமையாகக் கருதப்பட முடியாது. பவுத்த, சமண மதங்கள் எழுச்சியுற்ற காலமும், இசுலாமிய மன்னர்கள் ஆண்ட காலமும் அவர்களைப்பொருத்தமட்டில் பெருமைக்குரியன அல்ல. வரலாற்றிலிருந்து துடைதெறியப்பட வேண்டிய இருண்டகாலங்கள். பார்ப்பனீயமும் வருணாசிரமம் கொடி கட்டிப்பறந்த காலங்களே அவர்களுக்குப் பொற்காலங்கள்; பெருமைக்குரிய பழமைகள். வெள்ளையர்கள் வெளியேறிய பின்பு மராட்டிய பேஷ்வாக்களின் ஆட்சியை நிர்மாணிப்பதே அவர்களது

கனவாக இருந்தது. சித்பவன் பார்ப்பனர்களால் உருவாக்கப்பட்ட ஆர்.எஸ்.எஸ் சின் கொடியாக பேஷ்வா அரசர்களின் 'பகவத் துவஜம்' தான் ஏற்றுக்கொள்ளப்பட்டது.இன்றும அவர்கள் வணக்கம் செலுத்துவது இந்தக் காவிக்கொடிக்குத் தான்.

"எனது புனித இந்துமதம், இந்துச் சமூகம், இந்துக்கலாச்சாரம் ஆகியவற்றைப் பாதுகாத்து வளர்ப்பதன் மூலம பாரதவர்ஷத்தின் பெருமையை எல்லாத் துறைகளிலும் நிலைநாட்டுவதற்காகவே நான் ராஷ்ட்ரீய ஸ்வயம் சேவக் சங்கத்தின் உறுப்பினராகிறேன் என்கிற உறுதிமொழியைத்தான் அவர்கள் ஒவ்வொரு முறையும் சொல்கிறார்களே தவிர ரவீந்திரனின் 'ஜனகணமன' வை அவர்கள் தேசீய கீதமாக ஏற்பதில்லை. சென்ற ஆகஸ்டு நான்காம் தேசியன்று (2000) முரளி மனோகர் ஜோஷியின் இல்லத்தில் பிரதமர் வாஜ்பேயி, உள்துறை அமைச்சர் அத்வானி முதலியோர் குரு தட்சிணை சமர்பபித்தனர். பிரதமராகவும், அமைசசராகவும் பணியாற்றிப் பெறுகிற ஒரு மாத ஊதியத்தை ஆர்.எஸ்.எஸ் என்கிற தமது குருவிற்குக் காணிக்கை செலத்திய அவர்கள் அன்று வணங்கியது இந்தக்க பகவத் துவஜத்தைத்தான் அவர்கள் எடுத்துக்கொண்ட உறுதிமொழியும் இதுதான் (அவுட்லுக், செப் 25, 2000)

இந்திய அரசியல் சட்டத்தையும் அவர்கள் ஏற்பதில்லை. குருஜி என்று சிந்தனைத் தொகுப்பில்', "மேலை நாடுகளின் பல்வேறு அரசியல் சட்டங்களிலிருந்து அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பிய்த்துத் தொடுத்த ஒட்டுத் துணிதான் நமது அரசியல் சட்டம். நமக்குச் சொந்தம் என்று சொல்லிக்கொள்வதற்கு அதில் ஒன்றுகூடக் கிடையாது. நமது தேசீய நோக்கம் என்ன என்பதற்கோ, நமது வாழ்வின் ஆதாரப் புள்ளி எது என்பதற்கோ அதன் வழிகாட்டும் தத்துவங்களில் ஏதேனும் ஒரு சொல்லாவது காணப்படுகிறதா? இல்லை!' என்று கூறினார். ஆர்.எஸ்.எஸ் சின் இன்றை சர்சலாக் (தலைவர்) குப்பஹலி சீதாராமய்யா சுதர்சன், தான் பதவி ஏற்ற நாளன்று (மார்ச் 10,2000) உதிர்த்த கருத்துக்களில் ஒன்று இந்திய அரசியல் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பது "1935ம் ஆண்டில் பிரிட்டிஷ் அரசு உருவாக்கியதன் மறுபதிப்புதான் அது. இந்தியருக்குரிய தனித்துவமான பண்புகளையும் விருப்புகளையும் கணக்கிலெடுத்துக் கொண்டு அது தயாரிக்கப்படவில்லை, இவற்றைப் பிரதிபலிக்கும் புதிய அரசியல் சட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும்" என்றார் சுதர்ஸன் (ஆர்கனைசர், மார்ச் 19, 2000)

1993 ஜனவரி முதல் தேதியன்று ‘வர்த்தமான் இந்தியன் சம்விதான்’ என்றொரு வெள்ளை அறிக்கையை சங்கப்பரிவாரம் வெளியிட்டது. இந்திய அரசியல் சட்டத்தை இந்துமதத்திற்கு எதிரானது எனக்குற்றம் சாட்டியது அவ்வறிக்கை. இந்த அறிக்கையை எழுதிய சுவாமி முத்தானந்தர், பாபர் மசூதி இடிக்கப்பட்ட இருபதாம் நாள் (டிசம்பர் 25, 1992) பா.ஜ.க பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் வீட்டிலிருந்து கொண்டு ஒரு பேட்டியளித்தார். கூட இருந்தவர் சுவாமி வாம் தியோ மகராஜ். “இந்து மதத்திற்கு அவர்களிருவம் அறைகூவல் விடுத்தனர். “இந்த நாட்டுச்சட்டங்களின்மீது எங்களுக்கு நம்பிக்கையில்லை. சாதுக்கள் இந்தந £ட்டின் சட்டங்களுக்கு மேலானவர்கள்” என்றும் அவர்கள் அறிவித்தனர் ‘ஏ.ஜி. நூரானி, ‘ஆர்.எஸ்.எஸ்சும் பாரதீய ஜனதாவும்’, பக்.97).

ஒழுங்கு பற்றி மிகத் தீவிரமாக வற்புறுத்துகிறவர்களும், ஒழுங்விழ்ப்பைக் (அராஜகம்) கடுமையாகக் கண்டிப்பவர்களுமான பாசிஸ்டுகள், நிலவுகிற அமைப்பின் சட்ட ஒழுங்கை எள்ளளவும் மதிப்பதில்லை.

“டிசம்பர் ஆறாம் தேதியன்று நிச்சயமாகக் கரசேவை நடத்தப்படும். கரசேவை என்பது பஜனையும் கீர்த்தனையும் பாடுகிற விசயமல்ல. கடப்பாரைகளையும் செங்கற்களையும் வைத்துச் செய்கிற காரியம் அது என்று அத்வானி சொன்னார்.” என்பன அத்வானி மீதான குற்றப்பத்திரிக்கையின் வாசகங்கள், கெலை, வன்முறை எதற்கும் அவர்கள் தயங்குவதில்லை. காந்தி முதல் மருத்துவர் ஸ்டெய்ன்ஸ் வரை இந்துத்துவம் கொன்று குவித்தவர்களின் பட்டியல் மிக நீளமானது. இவர்கள் தூண்டி விடுகிற மதக் கலவரங்களில் கொல்லப்பட்ட சிறுபான்மையினரின் எண்ணிக்கை இதில் அடங்காது. காந்தியைக் கொன்றுவிட்டு ‘நாங்கள் இல்லை’ என்று கைவிரித்தவர்கள், இன்று நாங்கள்தான் செய்தோம் எனப்பெருமையோடு அறிறிவக்கின்றனர், புத்தகங்கள் எழுதுகின்றனர். பேட்டிகள் அளிக்கின்றனர். நாடகங்கள் நடத்துகின்றனர். காந்தி கொலையாளிகளில் ஒருவரும் தூக்கிலிடப்பட்ட நாதூரம் கோட்சேயின் சகோதரனுமான கோபால் கோட்சேயின் ‘நான் ஏன் காந்தியைக் கொன்றேன்?’ என்கிற நூல் 1993ல் வெளிவந்தது.

புதுடெல்லியில் நடைபெற்ற வெளியீட்டு விழாவின் போது சகோதரர்கள் இருவரும் ஆர்.எஸ்.எஸ்சின் தீவிர உறுப்பினர்கள் என்கிற உண்மையைக் கோபால் வெளியிட்டான் (ஸ்டேட்ஸ்மன், 28,94) பத்திரிகைக்க அளிததபேட்டியில், “நாங்கள் நான்கு சகோதரர்களும் ஆர்.எஸ்.எஸ்சில் இருந்தோம். நாங்கள் வீட்டில் வளர்ந்ததைக்காட்டிலும் ஆர்.எஸ்.எஸ்சில்

வளர்ந்ததே அதிகம். அதுவே எங்களின் குடும்பமாக இருந்தது. ஆர்.எஸ்.எஸ்ஸின் அறிவுத்துறை ஊழியனாக (பாவ்திக்காரியவா) நாதுராம் செயல்பட்டான்.ஆர்.எஸ் எஸ்சிலிருந்து வெளியேறி விட்டதாக அவன் வாக்குமூலம் அளித்தது உண்மைதான். காந்தி கொலைக்குப்பிறகு கோல்வால்கரும், ஆர்.எஸ்.எஸ்சும் பெரும் தொல்லைக்கு ஆளாகியிருந்த சூழலில் அப்படிச்சொல்ல வேண்டியதாயிற்று. உண்மையில் நாதுராம் ஆர்.எஸ்.எஸ்சை விட்டு வெளியேறவில்லை." என்று அவன் வெளிப்படையாகச் சொன்னான்.

நாதுராமுக்கும் ஆர்.எஸ்.எஸ்சுக்கும் எந்தத்தொடர்பும் இல்லை என்று அத்வானி சொல்கிறாரே எனக் கேட்டபோது, "நான் அத்வானியை மறுத்துள்ளேன். அப்படிச் சொல்வது கோழைத்தனம் என்றும்கூறியுள்ளேன். 'போய்க் காந்தியைக் கொல்லுங்கள்' என்று ஆர்.எஸ்.எஸ் தீர்மானம் இயற்றவில்லை என்று வேண்டுமானால் சொல்லிக்கொள்ளுங்கள். ஆனால் நாங்கள் இப்படி அவரைக் கைவிடக்கூடாது. 'இந்துமகாசபை' அப்படிக் கைவிடவில்லை. 1944 ல் ஆர்.எஸ்.எஸ்சில்பாவ்திக் காரியவாவாக இருந்துகொண்டே இந்துமகா சபைப்பணி¬யும் செய்யத் தொடங்கினான் நாதுராம்." என்றும் கோபால் கூறினான். ஆர்.எஸ்.எஸ் தொடர்புக்காகப் பெருமை அடைவதாயய் சொன்ன அத்வானியோ, நான் ஒரு சுயம் சேவக் என்பதே என் நிரந்தரப் பெருமை' என்று முழங்கிய வாஜ்பேயியோ, இல்லை இன்றைய ஆர்எ.ஸ்.எஸ் ததலைவர்கள் யாருமோ கோபாலின் கூற்றுக்களை மறுக்கவில்லை. வருத்தம் தெரிவிக்கவும் இல்லை.

காந்தியைக் கொன்றது நியாயம்தான் என்பதை இந்துத்துவாதிகள் தொடர்ந்து சொல்லிவந்துள்ளனர். ஆர்.எஸ்.எஸ்சின் அரிகாரப்பூர்வ இதழனா 'ஆர்கனைசர்' இதழில் கே.ஆர்.மல்கானி ஆசிரியராக இருந்தபோது ஒரு தலையங்கம் (ஜனவரி 11, 1970) வெளிவந்தது. அதில், "பாகிஸ்தானுக்குச் சார்பான நேருவீன் நிலைப்பாட்டை ஆதரித்துக் காந்தி உண்ணாரவிரம் தொடங்கியதென்பது மக்களின் கோபம் அவர்மீது திரும்புவதற்குக்காரணமாக இருந்தது." என்று அதில்காந்தியின் கொலை நியயப்படுத்தப்பட்டது. ஆக, மக்களின் பிரதிநதியாக இருந்த நாதுராம்கேட்சே 'காந்தி வதம்' செய்தான் என்பது இந்துத்துவ வாதம். பாதிரியார்கள் கொல்லப்படும் போதும், மாதா கோவில்கள் எரியூட்டப்படும்போதும் , கன்னிமார்கள் துன்புறுத்தப்படும்போதும் 'மதமாற்றத்திற்கெதிரான மக்களின் கோபத்தின் விளைவு' என இவ் வன்முறைகளை நியாயப்படுத்துவதும் முறைமுகமாக ஊக்குவிப்பதும்

ஆட்சியிலுள்ள இந்துத்துவத்தின் செயல்பாடுகளாக இன்றளவும் விளங்குவதை நாம் மறந்துவிடக்கூடாது.

எனவே இவர்கள் காந்தியை ‘தேசத் தந்தை’யாகவும் ‘மகாத்மா’ வாகவும் ஏற்பதில்லை. இவர்களின் உண்மையான ‘அறிவுத் தந்தை’ யாகிய தீன்தயாள் உபாத்தியாயா சொன்னார் (1961): “காந்திக்குரிய எல்லா மரியாதைகளுடனும் அவரை ‘தேசத்தந்தை’ என அழைப்பதை நிறுத்திக்கொள்வோம். பழம் பெருமைகளை அடித்தளமாகக் கொண்ட நமது தேசியத்தை ஆராய்ந்து பார்த்தோமானால் அது இந்துத்துவம்தான் என்பது விளங்கிவிடும்” (ஏ.ஜி. நூரானி, மு.கு.நூ. பக்.51)

காந்தி இந்த நாட்டின் ‘தேசத்தந்தை’ என்பதை மறுக்கிற அளவிற்கு அத்வானி பேசுகிறார் என்று ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ ஒருமுறை தலையங்கம் தீட்டியதும் (அக்.17, 1989) இங்கே குறிப்பிடத்தக்கது.

இந்துத்தவாதிகளின் தேசபக்தி இவ்வளவுதான். இந்த தேசத்திற்கு விசுவாசமாக இருப்பதல்ல. இந்தத் தேசத்தின் கலாச்சாரம் என இவர்களால் முன்வைக்கப்படுகிற இந்துத்துவத்திற்கு விசுவாசமாக இருப்பதே இவர்கள்து தேசபக்திக்கு அடையாளம். மற்ற எல்லோரும் தேசத் துரோகிகள். லிபரான் ஆணையம் முன்பாகச் சாட்சியம் அளிக்கும்போது, “இந்துத்துவமும் தேசீயமும் ஒரே பொருளுடைய இரு சொற்கள். இந்தியத்தன்மை, பாரதீயம், இந்துத்துவம் என எதுவேண்டுமானாலும் சொல்லுங்கள். இந்தச் சொற்கள் அனைத்தும் ஒரே பொருளைக் குறிப்பனவாகவே நான் பார்க்கிறேன்” என அத்வானி குறிப்பிட்டது (ஏப்ரல் 12, 2000) இதை வெட்ட வெளிச்சம் ஆக்குகிறது.

இவ்வாறு தேசீயத்தை இந்துத்துவமாக இறுக்க வரையறுப்பதும், இசுலாமியர் உள்ளிட்டச் சிறுபான்மையினரை உள்நாட்டு எதிரிகளாக நிறுத்துவதும், சிறுபான்மையினர் என்கிற அவர்களது குழும உரிமையை (நிகூஷீஷீuஜீ கூஷீவீரீலீts) மறுப்பதையும்தான் நாம் பாசியம் என்கிறோம். சட்ட ஒழுங்கு, சனநாயகம் ஆகியவற்றை மறுப்பதையும் ‘உள்நாட்டு எதிரிகளுக்கு’ எதிராக வன்முறைகளைக் கடைபிடிப்பதை ஆதரித்து வருவதையும் நமது இந்துத்துவவாதிகள் தொடர்ந்து செய்து வந்துள்ளனர். வெளிப்படையாக அறிவித்து வந்துள்ளனர்.

இசுலாமியர் பாதிக்கப்பட்டிருந்த சூழலில் பத்திரிகையாளர்களிடம் பேசிய குரு கோல்வால்கர், “இந்த நாட்டுடனும்அதன் கலாச்சாரத்துடனும் அடையாளம்

காணுவதெப்படி என்கிற பாடத்தை இசுலாமியருக்கு நாம் சொல்லிக் கொடுத்தாக வேண்டும்.... நாம் இதுவரை அடிகொடுத்துப் பாடம் சொல்லித் தந்ததில்லை. ஆனால் அடித்துதான் பாடம் சொல்ல வேண்டும் என்கிற நிலை வந்தால் செய்துதான் ஆகவேண்டும். ஆனால் அது எதிரியை அடிப்பது போலல்ல. ஒரு தாய் குழந்தையை அடிப்பதுபோல அக்குழந்தையின் நலனுக்காகச் செய்யக் கூடியதாகவே இருக்கும்.... சமூக வாழ்வில் வன்முறைக்கு ஏதும் இடம் உண்டா என்றால் உண்ட. ஆனால் அறுவை சிகிச்சையில் கத்தியைப் பயன்படுத்துவதைப் போல வன்முறையைப் பயன்படுத்தவேண்டும்.... தற்காப்பிற்காக நாம் தீய சக்திகளை அழிப்பது தவிர்க்க இயலாது. அசுரர்கள் வன்முறையால் தான் வீழ்த்த வேண்டும்." வன்முறையைப் பயன்படுத்தித்தான் ஆக வேண்டும்." என வன்முறையை நியாயப்படுத்திப் பேசியது இங்கே குறிப்பிடத் தக்கது. (1970 ஜூன் 11ம் தேதி அளித்த பேட்டி பின்னர் 'ஆர்கனைசரில்' வெளிவந்தது)

எள்ளளவும் வெட்கமின்றிப் பொய்களைக் கட்டவிழ்த்துவிடுவது என்பது பாசிசத்தின் அன்றாடத தந்திரங்களில் ஒன்று. "இடிப்பதற்காக அல்ல, மசூதியை இடிப்பதைத் தடுப்பதற்காகத்தான் நானும், அத்£வனியும், முரளிமனோகர் ஜோஷியும் அன்றைக்கு (டிசம்பத், 6, 1992) அயோத்திக்குச் சென்றோம்" என உமா பாரதியும், கடப்பாரையை வைத்துதான் கரசேவை செய்வோம் எனச் சொன்ன அதேவாயால் "மசூதி இடிப்பைப்பார்த்து மனம் நொந்துபோனேன்" என அத்வானியும் லிபரான் குழு முன் கூறியதை நாம்அவ்வளவு எளிதாக மறந்துவிட முடியுமா?

**2. இந்துத்துவப் பாசசித்தை அடையாளம் கண்ட**

காந்தியும் நேருவும் இந்துத்துவப் பாசிசத்தின் ஆபததுக்களை அதன் «£ற்ற காலத்திலேயேப் பலரும் சுடடிக்காட்டியுள்ளனர். இந்திய அரசின் அயலல்துறை அலுவலர்கள் முன்பாகப் பேசும்போது, "குறித்துக்கொள்ளுங்கள். இந்தியாவிற்கு ஆபத்து கம்யூனிஸ்டுகளால் வரப்போவதில்லை. வலதுசாரி இந்து வகுப்புவாதத்தால்தான் அந்த ஆபத்து நேரப்போகிறது" எனக் குறிப்பிட்ட பண்டித நேரு தொடர்ந்து இந்தஆபத்தைச் சுட்டிக்காட்டி வந்தார். காங்கிரஸ்காரர்களிடம் வெளிப்பட்ட இந்து வகுப்புணர்வையும், இசுலாமியர்கள் மத்தியில் உள்ள வகுப்புவாதத் தன்மையையும்கூட அவர் கண்டிக்கத் தயங்கவில்லை.

"(எனினும்) பெரும்பான்மை மதவாதம் என்பது சிறுபான்மை மதவாதத்தைக்காட்டிலும் மிகவும் ஆபத்தானது." என்று அவர் அதில் இந்தியக்

காங்கிரஸ் கமிட்டிக்கூட்டத்தில் (மே 11. 2958) எச்சரித்தார். பிறிதொரு சந்தர்ப்பத்தில் (ஜனவரி 5, 1961)

“சிறுபான்மையினர் வகுப்புவாதிகளாக ஆவதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் பெரும்பான்மைச் சமூகத்தின் வகுப்புவாதத்தைத் தேசியமாக எடுத்துக்கொள்கிற (ஆபத்து) இரு:ககிறது.” என்றும் அவர்குறிப்பிட்டார் (நூரானி, மு.கு.நூ. பக்)

இந்துத்துவத்தின் குண்டுகளுக்குப் பலியான காந்தி இந்த ஆபத்தைப் பாசிசத்துடன் நேரடியாகவே ஒப்பிட்டு எச்சரித்தார். வல்லபாய் பட்டேலுக்கு எழுதிய கடிமொன்றில் (அக் 27, 1948) நேரு, “பாபுஜி முதன் முதலாகக் கோல்வால்கரைச் சந்தித்தபோது சொன்னது நினைவுக்கு வருகிறது. கோல்வால்கரால் அவர் வசீகரிக்கப்பட்டிருந்தார். எனினும்பாபு அவரை நம்பத் தயாராக இல்லை. இரண்டாவது, மூன்றாவது சந்திப்புகளுக்குப் பிறகு கோல்வால்கருக்கும, ஆர்.எஸ்.எஸ்சுக்கும் எதிராகக் கடுமையான கருத்துக்களை அவர்ª வளியிட்டார். அவர்களின் வார்த்தைகளை நம்ப இயலாது என்றும் பாபு சொன்னார்... எனது கருத்தும் அதுவேதான்.” என்றெழுதியது இங்கு குறிப்பிடத்தக்கது.

காந்தியின் செயலரும் விசுவாசமிக்க சீடருமான பியாரோலால் எழுதும்போது, “டெல்லி மற்றும் இநதியாவின் பிற இடங்களில் நடைபெற்ற எண்ணற்ற கொலைகளின் பின்னணியாக ஆர்.எஸ்.எஸ் இருந்ததென்பது எல்லோரும் அறிந்த உண்மை.. அது குறித்துப் பேசிக்கொண்டிருந்தபோது காந்தியின் குழுவில் இருந்த ஒருவர் இடைமறித்துச் சொன்னார்: ‘ (ஆனால) ‘வா’வில் உள்ள அகதி முகாமில் ஆர்.எஸ்.எஸ் காரர்கள் செய்த சேவை குறிப்பிடத்தக்கது. ஒழுங்கு, தைரியம், கடும் பணி செய்யும் திறன் ஆகியவற்றை அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.’ இதற்குக் காந்தி, ‘ஆனால் ஒன்றை மறந்துவிடாதீர்கள். இட்லரின் நாசிகளும், முசோலினியின் பாசிஸ்டுகளும் கூடத்தான் இந்தப் பண்புகளைக் கொண்டிருந்தார்கள்’ என்று பதிலளித்தார். ‘எதேச்சதிகாரப் பார்வை கொண்ட வகுப்புவாத அமைப்பு’ என ஆர். எஸ். எஸ்சை அவர் வரையறுத்தார்.” என்று குறிப்பிட்டுள்ளார். (‘மகாத்மா காந்தியின் இறுதிக்கட்டம்’, தொகுதி 2, பக்: 439-40)

சுட்டுகொல்லப்படுவதற்குச் சரியாகப் பத்து நாட்களுக்கு முன்பாக, உண்ணாவிரதத்தை முடித்துவிட்டு அமர்ந்திருந்த காந்தியின்மீது மதன்லால் பாவா என்பவன் ஒரு வெடிகுண்டை வீசினான். குறி தவறிய அக்குண்டு சுமார்

20 மீட்டர்கள் தள்ளிவெடித்தது. பொறுப்பற்ற இளைஞன் ஒருவனின் பைத்தியக்காரத்தனமான செயல் என்று யாரோ சொன்னார்கள். பியாரேலால் எழுதுகிறார்: “காந்தி சிரித்துவிட்டுச் சொன்னார்– ‘முட்டாள், இதற்குப் பன்னால் விரிந்துபாரந்த ஒருபயங்கரமான சதி இருப்பது உனக்குத் தெயவில்லையா?”- (மு.கு.நூ: பக்: 750)

சரியாக அடுத்தப் பத்தாம் நாள் அந்தச் சதிகாரர்கள் செய்த இரண்டாம் முயற்சி வெற்றியடைந்தது. காந்தி கொலையால் வெறுபபுற்ற ஆர்.எஸ்.எஸ் சிலிருந்து வெளியேறிய இளைஞன் ஒருவன் சர்தார் பட்டேலுக்கு எழுதிய கடிதமொன்றில் எவ்வாறு ஆர்.எஸ்.எஸ் காரர்கள் அந்த வெள்ளியன்று (ஜனவரி 30, 1948) ‘நல்ல சேதி’க்கா வானொலிப் பெட்டி முன் காத்துக்கிடந்தார்கள் என்பதையும், செய்தி கிடைத்தவுடன் அவர்கள் இனிப்பு கொடுத்து மகிழ்ந்ததையும் விளக்கி எழுதியுள்ளதைப் பியாரேலால் விரிவாக எழுதுவது இங்கே குறிப்பிடத்தக்கது.

காந்தி கொல்லப்பட்டவுடன் ஆர்.எஸ்.எஸ் தடை செய்யப்பட்டது. அப்போது தனது உட்கட்சிப் புரிதலுக்காக காங்கிரஸ் கட்சி ஓர் அறிக்கையைச் சுற்றுக்கு விட்டது. தேசீய ஆவணக்காப்பத்தில் சர்தார் பட்டேல் தொடர்பான நுண்படத் தொகுப்பின் மூன்றாவது சுருளில் அவ்வறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. நாகபுரியில் இந்துச் சிறுவர்களுக்கான சாரணர் இயக்கம் போலத் தொடங்கப்பட்ட ஆர்.எஸ்.எஸ் இயக்கம் எவ்வாறு படிப்படியாக வன்முறைப் பண்புகளுடன் கூடிய இராணுவ அமைப்பாக மாறியது என்பதைச் சொல்லும் இவ்வறிக்கை, அது எவ்வாறு ஒரு மராட்டிய பார்ப்பனர்களின் இயக்கமாக இருக்கிறது என்பதையும் பார்ப்பனரல்லாதோர் அதன்மீது எத்தகைய அனுதாபமும் கொண்டிருக்கவில்லை என்பதையும் சுட்டிக்காட்டுகிறது. பேஷ்வா ராஜ்யத்தை அமைப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட இவ்வமைப்பு பேஷ்வாக்களின் காவிக்கொடியையே தமது கொடியாகக்கொண்டிருப்பதையும்கூடச் சரியாகவே சுட்டிக்காட்டியது.

மேலும், “பாசிசத்திற்குக் காரணமாகக் கூடிய இரகசிய வன்முறையை ஆர்.எஸ்.எஸ் கைக்கொண்டுளள்து. நேர்மையான வழிமுறைகட்கும், சட்டபூர்வமான செயற்பாடுகளுக்கும் அங்கே மரி£யதை இல்லை. முறையா விதிகளையோ, அமைப்புச் செயல்பாடுகளுக்கான பதிவுகளையோ அவர்கள் வைத்திருப்பதில்லை. தமது குறிக்கோள்களையும் நோக்கங்களையும் அவர்கள் என்றும் தெளிவாகச் சொன்னதேயில்லை. உடற்பயிற்சி மட்டுமே தமது நோக்கம் என அவர்கள் மக்களிடம் சொல்லுகின்றனர். ஆனால் தமது

உண்மையான நோக்கத்தை, அவர்கள் தம் அணிகளிடம் கூடச் சொல்வதில்லை. ‘உள் வட்டத்தில்’ உள்ளவர்கள் மட்டுமே நம்பிக்கைக்குரியவர்களாகக் கருதப்படுகின்றனர். வரவு செலவுக் கணக்குகளையும் வைத்திருப்பதில்லை. மிகவும் இரகசியமான ஓர் அமைப்பாக ஆர்எஸ்எஸ் விளங்குகிறது.” என அவ்வமைப்பின் பாசிசக் குணாம்சத்தை அடையாளம் காட்டியிருந்தது அவ்வறிக்கை.

பிரிட்டிஷ் அரசும், ஆர்எஸ்எஸ் அமைப்பின் பாசிசத் தன்மையைச் சரியாகவே இனம் கண்டிருந்தது. பிரிட்டிஷ் இந்திய அரசு பீகா மாகாண அரசுக்கு அனுப்பிய சுற்றறிக்கை ஒன்றில் (கோப்பு எண் 201/44, தேதி மார்ச் 16, 1944) “இந்த அமைப்பு வலிமையாகச் செயல்படக்கூடிய பகுதிகளாகிய மத்திய மாகாணம், பெரார் மற்றும் மும்பையின் அரசுகள் இணைந்து மேற்கொண்ட நீண்ட கருத்தாய்விற்குப் பிறகு கீழ்க்கண்ட முடிவு எடுக்கப்பட்டுள்ளது. பாசிச வழிகளில் தீவிர அமைப்பொன்றைக் கட்டுகிற முனைப்பைக் கொண்டுள்ள அரசியல்–வணிக இயக்கம் ஆர்எஸ்எஸ் என்பதே அம் முடிவு” எனக்குறிப்பிடப்பட்டிருந்தது.

பாசிசம் என்கிற சொல் மிகச் சரியாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளதை வியக்கும் அறிஞர் நூரானி (மு.கு.நூ.பக்: 26) ‘மதச்சார்பற்ற நாடாக இந்தியா’ என்கிற நூலில் (1963) டொனால்ட் ஈ ஸ்மித்தின் பாசிசம் குறித்த வரையறையை மேற்கோள் காட்டுவார். அது: “தலைவர் பற்றியகோட்பாடு, இராணுவத் தன்மைக்குக் கொடுக்கக்கூடிய அழுத்தம், இன/கலாச்சார மேன்மைக் கோட்பாடு, மதக்கருத்தியல் கலந்த அதீத தேசியவாதமும், பழஞ்சின்னங்களைக் குறியீடுகளாகப் பயன்படுத்துவது, தேசீய ஒற்றுமைக்கு அழுத்தம் அளித்தல், மத–இனச் சிறுபான்மை யினரைத் தேசம் என்கிற கருத்தாக்கத்திலிருந்து விலக்குதல்– முதலான ஆர்எஸ்எஸ் சின் பண்புகள் அனைத்தும் அய்ரோப்பாவில் உருவான பாசிச இயக்கங்களையே நினைவு கூர்கின்றன.”

சுதந்திரத்திற்குப் பிந்திய இந்தியாவின் மதக்கலவரங்கள் பலவற்றை ஆய்வு செய்த வேணுகோபால் குழு, மதன்குழு, சிரீ கிருஷ்ணா குழு முதலான விசாரணைக் குழுக்கள் இந்துத்துவ அமைப்புகளின் செயற்பாடுகளில் வெளிப்பட்ட பாசிசக் கூறுகளை விரிவாகச் சுட்டிக்காட்டியுள்ளன. எனினும் சுருக்கம் கருதி அவற்றை இங்கு தவிர்ப்போம்.

**3. இந்துத்துவவாதிகளை ஈர்த்த பாசிசக் கூறுகள்**

இந்துத்துவ சக்திகளிடம் வெளிப்படுகிற இத்தகைய பாசிசக்கூறுகள் தன்னிச்சையானவை அல்ல என்பது சமீபத்தில் நிறுவப்பட்டுள்ளது. தொடக்க கால இந்துத்துவ முன்னோடிகள் 1930களில் அய்ரோப்பிய பாசிசத்துடன் நேரடியான தொடர்புகளைக் கொண்டிருந்தனர். ஆர்எஸ்எஸ்சைத் தோற்றுவித்தவரும் ஹெட்கேவரின் ஆசானுமாகிய டாக்டர் பி.எஸ். மூஞ்சே, இத்தாலி சென்று நேரடியாகச் சர்வாதிகாரி சிக்னோர் முசோலினியைச் சந்தித்துள்ளார். பாசிச அறிக்கைகள் இங்கே மொழிபெயர்க்கப்பட்டன. பாசிச அமைப்புகளின் மாதிரியிலேயே இங்கு ஆர்எஸ்எஸ் கட்டமைக்கப்பட்டது. இந்த உண்மைகள் அனைத்தையும் இத்தாலிய ஆய்வாளர் மார்சியா காசலோரி என்பவர் இத்தாலி மற்றும் மும்பையிலுள்ள தேசீய ஆவணக் காப்பகங்களிலுள்ள ஆதாரங்களை அகழ்ந்துத் தொகுதது நிறுவியுள்ளார் (மார்சியா காசலோரி, '1930களில் இந்துத்துவாதிகள் அயல்நாட்டுக் தொடர்புகள் ஆவணக்காப்பக ஆதாரங்கள்,' ஈ.ப.டபிள்யூ, ஜனவரி 22, 2000) இப்பகுதியில் சொல்லப்பட இருக்கிற தரவுகளும் மேற்கோள்களும் காசலோரியின் கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டவையே.

1920களில் இந்துத் தேசியவாதிகளுக்கு, குறிப்பாக மராட்டியத்து இந்துத் தேசியவாதிகளுக்கு இத்தாலி மற்றும அதன் சர்வாதிகாரி முசோலினியின் மீது கவனம் திரும்பியது. 1924 தொடங்கி 1935 வரை மராத்திய தேசிய இதழான கேசரி, பாசிசம் பற்றியும், முசோலினி மற்றும் இத்தாலியில் ஏற்பட்டுவரும் 'வளர்ச்சி'கள் குறித்தும் தொடர்ச்சியாகத் தலையங்கங்களையும் கட்டுரைகளையும் வெளியிட்டு வந்தது. பாசிசத்தின் தடலடிப் பிரச்சாரங்களில் மயங்கிய மராட்டியத் தேசியவாதிகள், பின்தங்கிய நிலையிலிருந்த இத்தாலியைப் பெரு வல்லரசாக 'மாற்றி' பாசிசத்தை வியந்துநோக்கினார். பாசிசத்தின் எத்தகைய கூறுகளால் அவர்கள் ஈர்க்கப்பபட்டனர் என்பது நமது கவனத்திற்குரியது. அவற்றில் சில:

1. அரசியல் இழுபறிகளால் குழம்பிக் கிடந்த நாட்டில் ஒழுங்கை நிலைநாட்டியது பாசிசம் என அவர்கள் நம்பினர்.

2. தாராள சனநாயக அமைப்பிலிருந்து சர்வாதிகாரத்தற்கு மாறியதென்பதை ஒழுங்கின்மையிலிருந்து ஒழுங்கிற்கு நிகழ்ந்த மாற்றமாகக் 'கேசரி' தொடர்ந்து தலையங்கம் தீட்டி வந்தது. சமூகப்போராட்டங்கள் இனித் தேவையில்லை என்றான ஒரு காலகட்டமாக இப்புதிய ஒழுங்கைக் 'கேசரி' சுட்டிக்காட்டியது.

3. முசோலினி கொண்டுவந்த சில அரசியல் 'சீர்திருத்தங்களை'க் கேசரி வெகுவாகப் பாராட்டியது. அவற்றில் சில: பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் என்பதற்குப்ப திலாக நியமித்தல்; பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு அதன் பணிகளைப்பாசிசப் பெருங்குழு விடம் ஒப்படைத்தல்.

அரசு பற்றிய பாசிச நோக்கு சனநாயகத்திற்கு நேர் எதிரானது. சனநாயக நிறுவனங்கள் ஏற்படுத்துகிற குழப்பங்களைக் காட்டிலும் ஒரு மனிதனின் சர்வாதிகாரம் என்பது நாட்டு நலனுக்கு உகந்தது என்கிற முசோலினியின் பாசிசக் கருத்தைக் கேசரியில் வந்த ஒரு கட்டுரை (ஜூலை 17, 1928) விதந்து பாராட்டியது. 'ஏக் சலக் அனுவர்த்தித்வம்' (ஒற்றைத் தலைவனைப் பணிதல்) என்கிற ஆர்எஸ்எஸ்சின் கோட்பாட்டுடன் இணைத்துப் பார்க்க வேண்டிய ஒன்று இது.

'இத்தாலியும் இளைய தலைமுறையும்' என்ற ஒரு நீண்ட கட்டுரையில் (கேசரி ஆக 13, 1929) பழைய தலைமுறையிடமிருந்து இளைய தலைமுறையிடம் அரசியலதிகாரம் மாறியதன் விளைவாக இத்தாலி பல துறைகளிலும் முன்னேறிவிட்டதாகக் கூறப்பட்டது. ஆழமான மதப்பற்று, குடும்பத்துடன் பிணைப்பு, மரபு வழிப்பட்ட மதிப்பீடுகளை ஏற்றுக்கொள்ளுதல் ஆகியனவே இத்தாலிய இளம் தலைமுறையிடம் உருவாகியுள்ள ஒழுங்கிற்குக் காரணம் என மொழிந்த அக்கட்டுரை விவாகரத்தின்மை, பெண்கள் தனியாக வாழாமை, பெண்களுக்கு ஓட்டுரிமை இன்மை ஆகியவற்றை மரபு வழி மதிப்பீடுகள் எனப் போற்றியது. பெண்களின் பணி அடுப்படியோடு முடிந்துவிடுகிறது என்று கூறிய அக்கட்டுரை பாசிச இளைஞர் அமைப்புகளான 'பலில்லா', 'அவன் கார்டிஸ்டி' ஆகியவற்றின் மீது கவனம் குவித்தது.

இத்தாலிய ஆசிரியர் ஒருவரால் எழுதப்பட்டு (1928), இங்கு ஆங்கிலத்தில் வினியோகிக்கப்பட்ட 'தேசப் பாதுகாப்பிற்கான சமீபத்திய சட்டங்கள்' என்ற பிரசுரம் இத்தகைய கட்டுரைகளுக்கு ஆதாரமாக இருந்திருக்கலாம் எனக் கருதுகிறார் காசோலரி. (தேசியப் படை' ஒன்றின் முக்கியத்துவம் குறித்து அக்கட்டுரை தீவிரமாகப் பேசியது. புதிய ஆட்சி நடைமுறைப்படுத்தியுள்ள சில தடுப்புச்சட்டங்களையும் அக்கட்டுரைப் பாராட்டியது. அவற்றில் சில: அமைப்பைக் 'கவிழ்க்கக்கூடிய' கட்சிகளைத் தடைசெய்வது, பத்திரிகைத் தணிக்கை, எதிர்ப்பாளர்கள்/ வெறுக்கத்தக்கவர்களைப் பொதுப்பணிகளிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக அகற்றி இறுதியில் அவர்களுக்கு மரண தண்டனை வழங்குவது.

“பாசிசத்தை நோக்கிய திருப்பம் என்பது தாராளவாதக் கோட்பாடுகளுக்கு மரண அடி கொடுதுதுவிட்டது. இறை யாண்மை மிக்க ஓர் அரசு அங்குள்ள எல்லா அரசியல் கட்சிகளுக்கும் பொதுவாக இருக்க வேண்டும் என்கிற தாராள சனநாயக் கோட்பாடுதான் இத்தாலி என்கிற கப்பலைச் சமூகச் சிதைவு எனும் சூழலில் சிக்கி மூழ்கடிக்க இருந்தது.” என்று அக்கட்டுரை முத்தாய்ப்பு வைத்தது.

இப்பிரசுரம் தவிர லண்டனில் இருந்த வெளிவந்த மராட்டிய இதழொன்றின் செய்தியாளர் டி.வி. தமன்கர் எழுதிய ‘முசோலினியும் பாசிசமும்’ என்கிற நூலும் பாசிசக் கருத்தியல், பாசிசச் சமூகம், பாசிச நிறுவனங்கள் ஆகியவற்றைப் பாராட்டியது. மொத்தத்தில் 1920களின் இறுதியில் பாசிச ஆட்சியும் முசோலினியும் மராட்டியத் தேசியவாதிகள் மத்தியில் பரவலாக அறிந்திருக்ககூடிய ஒரு சூழல் நிலவியது. சனநாயகம் என்பதை ஒரு பிரிட்டிஷ் மதிப்பீடாகக் கருதிய இந்துத் தேசியவாதிகள் குழப்பத்திலிருந்து ஒழுங்குக்கு மாறுதல், சமூகத்தை இராணுவமயமாக்குதல் என்கிற பாசிசக் கருத்தாக்கங்களால் வசீகரிக்கப்பட்டார்கள்.

#### 4. முசோலினியைச் சந்தித்த மூஞ்சே

வட்டமேசை மாநாட்டிற்குச் சென்று வந்த பி.எஸ். மூஞ்சே 1931 பிப்ரவரி, மார்ச் மாதங்களில் அய்ரோப்பிய சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டார். பயணத்தின் பெரும்பகுதி இத்தாலியில் கழிந்தது. பாசிச நிறுவனங்கள் பலவற்றை அவர் நேரடியாகச் சென்று பார்த்தார். பயணத்தின் உச்ச கட்டமாக முசோலினியைச் சந்தித்து உரையாடினார். மூஞ்சே தனது குறிப்பேட்டில் இது குறித்து பதின்மூன்றுப் பக்கங்கள் எழுதியுள்ளார்.

மார்ச் 19ம் தேதியன்று ரோமிலிருந்த ‘உடற் கல்விக்கான மத்திய இராணுவப்பள்ளி’, ‘உடற்பயிற்சிக்கான பாசிசக்கல்விக்கழகம்’ மற்றும் பலில்லா, அவான்கார்டிஸ்டி அமைப்புகளையும் நிறுவனங்களையும் நேரில் ஆராய்ந்த மூஞ்சே, அவை குறித்து இரு பக்கங்கள் குறிப்பு எழுதியுள்ளார். இளைஞர்களிடம் கல்வியைக்காட்டிலும் பாசிசக் கருத்தியலை ஊட்டுவதே இந்நிறுவனங்களின் நோக்கமாக இருந்தது. ஆறு வயது முதல் பதினெட்டு வயது வரையிலான சிறுவர்களைத்தேர்வு செய்து பயிற்சியளித்த இன்றைய ஆர்எஸ்எஸ் அமைப்பிற்கு எல்லா வகைகளிலும் முன்மாதிரியாக அவை விளங்கின என்பது மூஞ்சேயின் குறிப்புகளில் வெளிப்படுகிறது. இந்த இளைஞர்கள் வாராந்திரக் கூட்டங்களுக்குச் செல்ல வேண்டும். அப்போது உடற்பயிற்சியும் இராணுவப் பயிற்சியும் அளிக்கப்படும். ‘டிரில்’களும் அணிவகுப்புகளும் நடத்தப்படும்.

பலில்லா குறித்துத் தனது குறிப்பேட்டில் வெகுவாகப் பாராட்டி எழுதியுள்ளார் மூஞ்சே, இத்தாலியை இராணுவ ரீதியில் புத்துயிர்ப்புச் செய்வதற்காக முசோலினியின் மூளையில் உதித்தகருத்து இது எனப் பாராட்டும் மூஞ்சே.

“பாசிசக்கருத்தாக்கம் மக்களிடையே ஒற்றுமை என்கிற சிந்தனையை ஏற்படுத்துகிறது. இந்துக்களை இராணுவ ரீதியில் புத்தயிர்ப்புச் செய்வதற்கு இதேபோன்ற ஒரு அமைப்பு இந்தியாவில், குறிப்பாக இந்து இந்தியாவில் தேவை... இராணுவச் சீருடையில் இச்சிறுவர்களும் சிறுமியர்களும் எளிய உடற்பயிற்சிகளையும் ‘டிரில்’களையும் செய்வதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தேன்.” என்று குறிப்பிடுகிறார்.

அன்று மாலை மூன்று மணியளவில் வெனீஷிய அரண்மனையில் இத்தாலிய சர்வாதிகாரியை டாக்டர் மூஞ்சே சந்தித்தார். எழுந்து நின்று கைகுலுக்கி வரவேற்றார் முசோலினி. அன்றைய அரசியல் நிலைமைகள் குறித்துக் கருததுப்பரிமாறிக் கொண்டபின்னர்,

மூஞ்சே: இன்று காலையும் மதியமும் பலில்லா மற்றும் சில பாசிச அமைப்புகளைப் பார்வையிட்டேன். அவை என்னை மிகவும் கவர்ந்தன. இத்தாலியின் வளர்ச்சிக்கும் செழுமைக்கும இவை மிக அவசியம். இந்த அமைப்புகள் குறித்தும் மேன்மை தங்கிய உங்களைப்பற்றியும் பத்திரிகைகளில் பெரும்பாலம் நல்ல செய்திகள் வருவதில்லை என்ற போதிலும் என்னைப் பொருத்தமட்டில் இவற்றில் எந்த மறுப்புக்குரிய அம்சங்களையும் நான் காணவில்லை.

சிக்னோர் முசோலினி: இவை குறித்த உங்களின் கருத்தென்ன?

மூஞ்சே: மேன்மை தங்கிய அய்யா, நான் இவற்றால் பெரிதும் கவரப்பட்டுள்ளேன். இலட்சியங்கள் மிக்க வளரும் நாடுகள் ஒவ்வொன்றிலும் இத்தகைய அமைப்புகள் அவசியம் தேவை. இராணுவத் தன்மையிலான இந்தியப் புத்துயிர்ப்புக்கு இத்தகைய அமைப்புகளின் தேவை அதிகமாக உள்ளது. இதேபோன்ற குறிக்கோள்களுடன், நானாகவே சிந்தித்து ஏற்கனவே ஓர் அமைப்பை உருவாக்கியுள்ளேன். இந்தியாவிலும் இங்கிலாந்திலும் பொது மேடைகளில் வாய்ப்புக்கிடைக்கும் போது பலில்லா குறித்தும் இதரப் பாசிச அமைப்புகள் குறித்தும் புகழ்ந்து பேசுவதற்குத் தயங்கமாட்டேன். அவை வெற்றிபெற வேண்டும் என மனதார வாழ்த்துகின்றேன்.

முசோலினி: (மிகவும் மகிழ்ச்சியுடன்) நன்றி. ஆனால் உங்கள் பணி மிகவும் கடினமானது. எனினும் நாங்கள் வெற்றிபெற வேண்டும் என நானும் வாழ்த்துகின்றேன். (ஆணவக் காப்பகத்திலுள்ள மூஞ்சேயின் குறிப்பேட்டில் மார்ச் 20ம் தேதி எழுதப்பட்ட குறிப்புகளில் சில)

இந்தியாவிற்குத் திரும்பியவுடன், ஹெட்கேர் முதலானோருடன் இணைந்து இந்தத் திசையில் பணியைத் தொடங்கினார். மூஞ்சே, 'மராத்தா' இதழுக்கு அளித்தப்பேட்டி ஒன்றில் இந்துச் சமூகததை இராணுவ ரீதியில் ஒருங்கிணைப்பதன் தேவையை வயுறுத்துகிறார்.

"உண்மையில் நமது தலைவர்கள் ஜெர்மானிய இளைஞர் அமைப்பு, பலில்லா மற்றும் இத்தாலிய பாசிச அமைப்புகளைப் பின்பற்ற வேண்டும். இந்தியாவில் அறிமுகப்படுத்துவதற்கு அவை மிகவும் பொருத்தமானவை என்று நான் கருதுகின்றேன்."

என்றும் அவர் குறிப்பிட்டார். பாசிசம் குறித்துப் பொது விவாதங்கள் நடைபெறத் தொடங்கின. இவற்றில் ஹெட்கேவர் ஆர்வத்துடன் பங்கேற்றார். மூஞ்சே, ஹெட்கேவர், லாலு கோகலே ஆகிய மூவரும் இத்தாலிய/ ஜெர்மானிய மாதிரிகளில் இந்துக்களுக்கான இராணுவ அமைப்பொன்றைக்கட்டுவது குறித்து ஆலோசித்தனர். 1934 ஜனவரி 31ம் தேதியன்று ஹெட்கேவர் தலைமையில் 'பாசிசமும் முசோலினியும்' என்கிற தலைப்பில் மாநாடொன்றை ஏற்பாடு செய்தார் கவ்டே சாஸ்திரி. மூஞ்சே இதில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

"இந்துதர்ம சாஸ்திரங்களின் அடிப்படையில் இந்தியா முழுவதும் இந்து மதத்தைச் சீராக் கவேண்டும். அதனடிப்படையில் இந்து ஒற்றுமையைக்காட்ட வேண்டும். நமது பழைய சிவாஜி அல்லது இன்றைய முசோலினி, இட்லர் போன்ற ஓர் இந்துச் சர்வாதிகாரியின் கீழ் நமக்குச் சுயராஜ்யம் கிடைக்காத வரையில் நாம் இதைச்சாதிக்க இயலாது.... இதற்கான விஞ்ஞான பூர்வமான திட்டமொன்றை உருவாக்கிப் பிரச்சாரத்தை மேற்கொள்ளவேண்டும்." என்று அம்மாநாட்டில் தன் கருத்தை முன்வைத்தார் மூஞ்சே.

பின்னர் மூஞ்சே, 'மத்திய இராணுவக் கல்விக் கழக'த்திற்கான பணியைத்தொடங்கினார். இந்து இளைஞர்களை இராணுவமயமாக்குவதும், 'சனாதன தர்ம'த்தை அவர்களுக்குக் கற்பிப்பதும், தனி நபர்களையும் தேசத்தையும் காப்பதற்கான விஞ்ஞானங்களையும், கலைகளையும் சொல்லித் தருவதும் கழகத்தின் குறிக்கோளாகச் சொல்லப்பட்டன. இங்கிலாந்து, பிரான்ஸ்,

ஜெர்மனி மற்றும் இத்தாலியிலுள்ள இராணுவப் பயிற்சிப் பள்ளிகளின் மாதிரியில் இதைத் தாம் செய்வதாக மூஞ்சே வெளிப்படையாகக் குறிப்பிட்டு வந்தார்.

மூஞ்சே உருவாக்கிய 'மத்திய இராணுவக்கழகம் மற்றும் இராணுபப்பள்ளிக்கான திட்ட வரைவின்' முன்னுரையில் (1935)

"வெற்றியை நோக்கிய பெரும் இலட்சியத்துடன் மக்கள் திரளைக் கொன்று குவிக்கும் விளையாட்டிற்குத் தகுதியுடையவர்களாக நமது சிறுவர்களைத் தயாரிப்பதே பயிற்சியின் நோக்கம். எதிரிக்கு உச்சபட்ச இழப்புகளையும் மரணங்களையும் ஏற்படுத்துவதாகவும் நமது தரப்பில் ஆகக்குறைந்த மரணங்களும் இழப்புகளும் ஏற்படுவதாகவும் இந்த வெற்றி அமைய வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் எதிரி யார் என்பது பற்றி அதில் தெளிவான விளக்கமில்லை. வெள்ளையர்கள் எனப்படும் புற எதிரிகளா இல்லை முஸ்லிம்கள் எனப்படும் வரலாற்று ரீதியான அக 'எதிரிகளா' என்பது பற்றித் தெளிவில்லை. எனினும் அவ் வெளியீட்டில் அகிம்சைக்கும் வன்முறைக்கும் இடையிலான வேறுபாடுகள் பற்றி நீண்ட விளக்கங்கள் அளிக்கப்பட்டன. இந்திய வரலாற்றிலிருந்தும் இந்துப் புராணங்களிலிருந்தும் ஏராளமான மேற்கோள்கள் காட்டப்பட்டு அமைப்புரீதியான வன்முறை நியாயப்படுத்தப்பட்டது; அகிம்சை கோழைத்தனம் எனக்கேலிசெய்யப்பட்டது. முசோலினியின் பாசிச அறிக்கையிலிருந்து நீண்ட மேற்கோள்கள் எடுத்தாளப்பட்டன. "அமைதி என்பது கோடிக்கணக்கான எஃகு வாட்களின் மேல்தான் கட்டப்படவேண்டும்" என்பதுபோன்ற முசோலினியின் கருத்துக்கள் சுட்டிக்காட்டப்பட்டன.

முசோலினியின் பாசிச அறிக்கைதவிர ஜெர்மானியப் பேராசிரியர் ஈவால்டு பான்சே எழுதிய 'இராணுவ விஞ்ஞானம்' என்கிற வெளியீட்டிலிருந்தும் மேற்கோள்கள் காட்டப்பட்டன. "குழந்தைப் பருவம் முதல் ஒருநாட்டின் சிந்தனையில் போர் என்கிற எண்ணம் பதிக்கப்பட்டிருக்கவேண்டும்.. களத்தில் செத்துக்கொண்டிருக்கும் ஒரு போராளி தனது இரத்தம் தேசக் கடவுளின் பீடத்தில் பாய்கிறது என்று அறிவானேயானால் மகிழ்ச்சியோடு மரணத்தைத் தழுவுவான்" என்பன போன்ற பான்சேயின் கருத்துக்கள் விதந்தோதப்பட்டன. மீண்டும் மீண்டும் இத்தாலியின் பலில்லா முதலான பாசிச அமைப்புகளைச் சுட்டிக்காட்டி எட்டு முதல் பதினெட்டு வயதிற்கு இடைப்பட்ட இளைஞர்களுக்கு

இராணுவப்பயிற்சி அளிக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவமும் வற்புறுத்தப்பட்டது.

“எனவே இனி குடிமகனுக்குப் படைவீரனுக்கும் இடையிலான வேறுபாடுகள், சிவிலியனுக்கும் சீருடைக்காரனுக்கும் இடையிலான வேறுபாடுகள் இல்லாதொழியும்.” என முத்தாய்ப்பு வைத்தது அறிக்கை.

1930களின் இறுதியில் இந்தியாவிலிருந்த இத்தாலிய அரசின் பிரதிநிதிகள் இந்துத் தேசியவாதிகளுடன் நெருக்கமான உறவைப் பேணினர். மும்பையிலிருந்த இத்தாலியத் தூதரகம், கல்கத்தாவிலிருந்த தூதரகத்துடன் இணைந்து தீவிரமாகச் செயல்பட்டது. ரோமிலிருந்து அனுப்பப்பட்ட மரியோ கேரல்லி என்னும் அதிகாரி இந்தப் பணிகளை ஒருங்கிணைத்தார். இத்தாலிய மொழியைக் கற்பிப்பது என்கிற பெயரில் இந்திய மாணவர்களைத் தேர்வு செய்து பயிற்சியளித்தனர். இவ்வாறு தயாரானவர்களில் மாதவ் காசிநாத தாம்லே முக்கிய மானவர். கேரல்லியின் ஆலோசனைப்படி முசோலினியின் பாசிசய அறிக்கையைத் தாம்லே மொழிபெயர்த்தார் (1939). அதே ஆண்டு தொடங்கப்பட்ட ‘லோகாண்டி மோர்ச்சா (இரும்பு முன்னணி) என்கிற பத்திரிகையில் அது தொடர் கட்டுரையாக வெளியிடப்பட்டது. அந்தோனியோ பேக்லியாரோவின் ‘கம்யூனிசத்திற்கு எதிராகப் பாசிசம்’ என்ற கட்டுரையும் கேரல்லியின் பாசிச நிறுவனங்கள் பற்றிய ஒரு கட்டுரையும்கூட இவ்வாறு மொழியாக்கப்பட்டுத் தொடராக வெளியிடப்பட்டன.

“திலகரைப் பின்பற்றுபவர் என நம்புகிற தாம்லே, தீவிரமான அரசியல் பார்வைகள் உடையவர். இத்தாலி மற்றும் நாஸி ஜெர்மனியின் வரலாறுகளிலிருந்து தாம் ஊக்கம் பெற்றதாக அவர் வெளிப்படையாகச் சொல்கிறார்” என்பது தாம்லே பற்றி உள்துறை அமைச்சகத்திற்கு காவல்துறை அளித்த குவிப்பு (கோப்பு எண் 830 மி / 1939, மும்பை ஆவணக்காப்பகம்). “பாசிசக் கருத்துக்களுடைய (தாம்லே), நமது பாசிசப் பாணியில் இந்தியச் சூழலுக்கேற்ற ‘இரும்புக் காவலர்கள்’ என்கிறஅமைப்பை உருவாக்கியுள்ளார்” என விதந்து எழுதினார் இத்தாலியத் தூதர்.

பாசிசக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு இங்கே தொடங்கப்பட்ட இன்னொரு அமைப்பு எம்.ஆர்.ஜெகரின் ‘ஸ்வஸ்திகா கழகம்’ (1921). சிறுவர்க்கு ராணுவப்பயிற்சி அளிப்பதன் முக்கியத்துவத்தை ஜெயகரும் வற்புறுத்தினார். ‘சன்டே கிரானிக்கில்’ இதழில் வெளிவந்த முசோலினியின் “குழந்தை வீரர்கள்”

சீருடையில் காவல் புரிவது போன்ற புகைப்படம் ஒன்றைச் சிலாகித்தார். 'ஸ்வதிகா ஹெரால்டு' என்றொரு இதழும் இவர்களால் நடத்தப்பட்டது.*

**5. இந்துத்துவம் வரையறுத்த தேசியம்**

பாசிசப் பாணியில் இந்துதேசீயத்தை வரையறுத்ததிலும் சிறுபான்மையினரைப் பிரதான எதிரிகளாகக் கட்டமைத்ததிலும் இந்துத்துவத்தின் மூல ஆசான் என்று சொல்லத் தக்க சாவர்ர்க்கரின் பங்கும் இன்றியமையாதது. இந்த அம்சத்தில் சாவர்க்கரின் 'இந்து மகா சபை'யும் மூஞ்சே, ஹெட்கேவரின் ஆர்எஸ்எஸ்சும் இரட்டைக்குழல் துப்பாக்கிளாகச் செயல்பட்டன. சிறையிலிருந்து வெளிவந்தது (1937) தொடங்கி 1942 வ¬ ரஇந்து மகாசபையின் தலைவராகச் செயல்பட்டார் சாவர்க்கர். 1926 முதல் 1931 வரை ஹெக்டேவர், மகாசபையின் செயலராகப் பணிபுரிந்தது குறிப்பிடத்தக்கது. சிறையிலிருந்து விதுலையான சாவர்க்கரைப் பாராட்டி ஆர்எஸ்எஸ் பல கூட்டங்களை நடத்தியது. ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய அச்சுநாடுகளின் கூட்டையும் அரசியலையும் ஆதரிப்பது இந்துத்துவத்தின் கொள்கையாக இருந்தது. 1938 ஆண்டு ஆகஸ்டு 1ந்தேதியன்று புனேயில் கூடியிருந்த சுமார் இருபதாயிரம் மக்கள் முன்னால் உரையாற்றுகையில்,

"இந்தியாவின் அயலுறவுக்கொள்கை 'இசம்'களைப் பொருத்து அமையக்கூடாது. ஜெர்மனி நாசிசத்தையு, இத்தாலி பாசிசத்தையும் தேர்வு செய்து அவர்களின் உரிமை, இந்த 'இசம்'களும் அரசு வடிவங்களும் அவர்களுக்கும் அங்குள்ள சூழலுக்கும் பொருத்தமானவைதான் என்பது இன்று நிறுவப்பட்டுள்ளது. ருஷ்யாவுக்குப் போல்ஷெவிசம் பொருத்தமானதாக இருக்கலாம். பிரிட்டிஷ் மக்களுக்குப் பொருத்தமாகச் சனநாயகம் அமையலாம்" என்றார் சாவர்க்கர். சனநாயகம் என்பதை ஒரு பொதுவான அரசு வடிவமாக ஏற்க இந்துத்துவம் தயாராக இல்லாததையே இது காட்டுகிறது. பிரிட்டிஷ் சூழலுக்கான ஒரு வடிவம் அது. மக்கள் திரளுக்கும் இனங்களுக்கும் தகுந்தாற்போல அரசியல் வடிவங்கள் மாறுபடுகின்றன என்று அவர்கள் கூறுவது இந்தியச் சூழலில் சனநாயகம் பொருத்தமில்லை. இங்கு பொருத்தமானது பாசிசமே என்கிற முடிவை அடையத்தான் என்பது தொடர்ந்து அவர்களது சொல்லாடல்களைக் கவனிக்கும்போது விளங்கிவிடுகிறது.

எனவே, அன்று சோசலிசத்தையும் சனநாயகத்தையும வற்புறுத்தி, பாசிசத்தை எதிர்த்து வந்த பண்டிதநேரு முதலானோர் இந்துத்துவத்தின் எதிரிகளாயினர். முன்குறிப்பிட்ட அதே கூட்டத்தில் சாவர்க்கர் தொடர்ந்து பேசுகையில், "ஒருநாடு

குறிப்பான ஒரு கொள்கையையும் அரசியல் வடிவத்தையும் பின்பற்ற வேண்டும் எனக் கட்டளையிட நீங்கள் யார்? ஜெர்மனிக்கு எதுபொருத்தம் என்பது பண்டித நேருவைக் காட்டிலும் இட்லருக்கு நன்றாகத் தெரியும். நாசி மற்றும் பாசிச மந்திரக்கோலின் தொடுகையில் இத்தாலியும் ஜெர்மனியும் வளர்ந்து செழித்து வலுவாகியிருப்பதொன்றே அவை அந்நாடுகளின் நலனுக்குரிய நல்ல மருந்துகள் என்பதற்குச் சான்றாக உள்ளன.. எல்லா இந்தியர்களின் பிரதிநிதியாக நின்று ஜெர்மனிக்கும் இத்தாலிக்கும் எதிராகக்க ருத்துச் சொல்ல நேருசொல்லிக் கொள்ளட்டும்.. ஆனால் ஜெர்மன், இத்தாலி, ஜப்பான் நாட்டு மக்கள் ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும். இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான இந்து சங்காதனிகளுக்கு ஜெர்மன், இத்தாலி, ஜப்பான் நாடுகளின் (கொள்கைகள்) மீது எந்த விதமான மாற்றுக் கருத்துக்களும் கிடையாது.... செக்கோஸ்லாவியப் பிரச்சினையைப் பொருத்தமட்டில் ஆஸ்திரியா மற்றும் சுடேட்டனைச் சேர்ந்த செர்மானிய மக்களைச் செர்மானியக் கொடியின் கீழ் கொண்டுவந்ததை இந்து சங்காதனிகள் ஆதரிக்கிறோம்” என்றார்.

சாவர்க்கரின் இந்தப் பேச்சு முழுவதையும் ஜெர்மானிய நாளிதழான ‘வோல்கிஷெர் பியோபாச்டர்’ முழுமையாக (நவம்பர் 30, 1938) வெளியிட்டது.

இந்தியச் சூழலை மனதில் கொண்டுதான் செக்கோஸ்லாவியாவில் உள்ள செர்மன் சிறுபான்மையினர் பிரச்சினையைச் சாவர்க்கர் பேசினார் என்கிறார் காசோலரி. அக்டோபர் 11ம் தேதி புனேயில் நடைபெற்ற இன்னொரு கூட்டத்தில் பேசுகையில் இந்தியாவில் ஒரு கருத்துக்கணிப்பு நடத்தினால் இசுலாமியர் பிற இசுலாமியருடனும் இந்துக்கள் பிற இந்துக்களுடனுந்தான் இணைய விருப்பம் தெரிவிப்பார்கள் என்றார் சாவர்க்கர். அக்டோபர் 14ம் தேதி நடைபெற்ற மற்றொரு கூட்டத்தில் இட்லரின் யூத எதிர்ப்புக் கொள்கையை வெளிப்படையாக ஆதரித்துப் பேசினார். இந்திய முஸ்லிம்களைப் பற்றிப் பேசும்போது, “ஒரு தேசம் என்பது அங்குள்ள பெரும்பான்மை மக்களாலேயே உருவாக்கப்படுகிறது. ஜெர்மனியில் யூதர்கள் என்ன ஆயினர்? சிறுபான்மையினர் என்பதால் அவர்கள் ஜெர்மனியை விட்டே விரட்டப்பட்டனர்”

என்றார்.

1938 இறுதியில் தாணேயில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் ஆர்எஸ்எஸ் அணிகளை நோக்கிப் பேசுகையில், “ஜெர்மனியைப் பொருத்த மட்டில் ஜெர்மானிய மக்களின் இயக்கம் ஒருதேசிய இயக்கமாக உள்ளது. ஆனால் யூதச்

சிறுபான்மையினரின் இயக்கமோ ஒரு வகுப்புவாத இயக்கந்தான்” என்று கூறிய சாவர்க்கர் ஜெர்மனிக்கு எதிரான காங்கிரசின் தீர்மானங்களைக்கண்டித்தார்.

1939 ஜூலை 29ம்தேதியன்று புனேயில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில், தேசியம் குறித்த இந்துத்துவ வரையறை தெளிவாக முன்வைக்கப்பட்டது. “தேசிய இனம் என்பது புவியியல் அடிப்படையிலானதல்ல. சிந்தனை, மதம், மொழி, கலாச்சாரம் ஆகியவற்றின் அடிப்படையிலான ஒற்றுமையில் உருவாவதே தேசிய இனம். எனவே ஜெர்மானியர்களையும் யூதர்களையும் ஒரேதேசிய இனமாகக் கருத இயலாது” என்பது சாவர்க்கரின் இறுதிக்கருத்தாக இருந்தது. எனவே இந்தியாவிலுள்ள முஸ்லிம்களும் இந்துக்களுடன் இணைந்து ஒரு தேசமாக இருக்க இயலாது என்பது இதன் உட்கருத்தாக இருந்தது. 1939ன் இறுதியில நடைபெற்ற இந்து மகாசபையின் இருபத்தோராவது கூட்டத்தில் “இந்திய முஸ்லிம்கள் ஜெர்மனியிலுள்ள யூதர்களைப் போலத்தான் உள்ளனர். பக்கத்து வீட்டில் வாழ்கிற இந்துக்களைக் காட்டிலும் இந்தியாவிற்கு வெளியே வாழ்கிற முஸ்லிம்களுடன் தான் அவர்கள் தம்மை அடையாளம் காண்கின்றனர்” என வெளிப்படையாக ஜெர்மானிய யூதர்களுடன் இந்திய முஸ்லிம்களை ஒப்பிட்டார் சாவர்க்கர்.

அத்தோடு நிற்கவில்லை. இனத்தூய்மை என்கிற பெயரில் யூதர்களைக் கொன்றதையும் இந்துத்துவவாதிகள் நியாயப்படுத்தினர். 1939ம் ஆண்டு வெளிவந்த ‘நாம் அல்லது நமது தேசத்தன்மையை வரையறுத்தல்’ என்கிற தனது நூலில் குரு கோல்வால்கர். “ஜெர்மன் தேசியப் பெருமை என்பது இன்றைய விவாதப் பொருளாக உள்ளது. தனது தேசம் மற்றும் அதன் கலாச்சாரத்தின் தூய்மையைத் தக்கவைக்கும் பொருட்டு தனது நாட்டிலிருந்த செமிடிக் இனத்தவரான யூதர்களைக் களைந்தொழித்தன் மூலம் இவ் உலகை அவர்கள் அதிர்ச்சிக் குள்ளாக்கினார்கள். ஜெர்மானியப் பெருமை அதன்உயர்ந்த நிலையில் இதன்மூலம் வெளிப்பட்டது.” என்றெழுதியதோடு இந்திய முஸ்லிம்களைப் பற்றிச் சொல்ல வருகையில்,

“ஒரு வார்த்தையில் சொல்வதானால் முஸ்லிம்கள் அயல் நாட்டுக்கு விசுவாசமானவர்களாக இருப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும். அல்லது இந்து தேசத்திற்குத் தம்மை முழுமையாகக் கீழ்ப்படுத்திக்கொண்டு இங்கே வாழ வேண்டும். அவர்கள் எந்த முன்னுரிமைகளையும் கோரக்கூடாது என்பது மட்டுமல்ல, சாதாரணக் குடிமகனுக்குரிய உரிமைகளையும் கூடக் கோரக்கூடாது” என்றும் குறிப்பிட்டார். ஆர்எஸ்எஸ்-ன் தலைவரான குருஜியின்

கருத்துக்களை இன்றளவும் அவரது வாரிசுகள் பேசி வருவதை நாம் அறிவோம். இன்றைய தலைவர் சுதர்சன் பதவி ஏற்ற மறுகணம் (மார்ச் 10, 2000) இந்துக்களுக்கும் இந்து அல்லாதவர்களுக்குமான பாரத யுத்தம் ஒன்று பற்றிப் பேசியதையும், தொடர்ந்து சிறுபான்மையினரை நோக்கி 'உங்கள் மதங்களை சுதேசிமயப்படுத்துங்கள், இந்திய மயமாக்குங்கள்' (இந்து, அக் 15, 2000) என்று பேசி வருவதையும் நாம் இத்துடன் இணைத்து நோக்குதல் அவசியம்.

தொடர்ந்து 'மராத்தா' இதழிலும் 'கேசரி' யிலும் பாசிசத்திற்கு ஆதரவான கட்டுரைகள் வெளிவந்தன. 1939 மார்ச் 25 அன்று இந்து மகாசபை வெளியிட்ட அறிக்கையொன்றில், "ஆரியக் கலாச்சாரத்தைப் புத்துயிர்ப்பது, ஸ்வஸ்திகாவை மேன்மைப்படுத்துவது, வேதக் கல்விக்கு ஆதரவளிப்பது, இந்தோ-ஜெர்மனிய நாகரிக மரபை உயர்த்திப்பிடிப்பது முதலான ஜெர்மானியின் புனிதக் கருத்துக்களை இந்தியாவிலுள்ள மத உணர்வுமிக்க புத்திசாலித்தனமான இந்துக்கள் குதூகலத்தோடும் நம்பிக்கையோடும் வரவேற்கின்றனர். பண்டித ஜவஹர்லால் நேருவின் தலைமையிலான ஒரு சில சோசலிஸ்டுகள் மட்டுமே இன்றைய ஜெர்மானிய அரசு குறித்து மாற்றுக்கருத்துக்களை மெலிதாகச் சொல்லிக்கொண்டுள்ளனர். ஆனால் அவர்களின் செயல்பாடுகள் இந்தியாவில் எந்தப்பெரிய தாக்கத்தையும் ஏற்படுத்தக்கூடியதாக இல்லை" என்று அறிவித்தனர் நேருவைத் தாக்கியதோடு அவர்கள் நிறுத்தவில்லை. ஜெர்மனியை விமர்சித்திருந்த காந்தியையும் அவ்வறிக்கையில் கடுஞ்சொற்களால் தாக்கியிருந்தனர். இறுதியாக ஆரியக் கலாச்சாரத்தின் எதிரிகளுக்கு எதிரான ஜெர்மனியின் புனிதப்போர் என்பது உலகிலுள்ள எல்லா ஆரிய தேசங்களையும் விழிப்புறச் செய்யும் எனவும் முக்கியமாக இந்தியாவிலுள்ள இந்துக்களை எழுச்சியூட்டும் எனவும் முடிந்திருந்தது அவ்வறிக்கை.

இத்தாலி, ஜெர்மனி தொடர்புகள் மட்டுமின்றி ஜப்பானிய வலது சாரி இயக்கங்களுடனும் இந்துத்துவவாதிகள் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள முயன்றனர். ஜப்பானுக்குச் சென்று குடியுரிமை பெற்று அங்கேயே தங்கிவிட்ட இந்தியரான ராஷ் பிஹாரி போஸ், அங்குள்ள 'கறுப்பு டிராகன் கழகம்' முதலான தீவிர வலதுசாரி அமைப்புகளுடன் தொடர்புடையவராக இருந்தார். 1938 தொடங்கி சாவர்க்கர், ராஷ் பிஹாரியுடன் தொடர்பு வைத்துக்கொண்டார். ராஷ் பிஹாரி எழுதிய கடிதங்கள் சில 'மராத்தா' வில் வெளியாயின. இந்து மகாசபையின் ஜப்பானியக்கிளை ஒன்றைத் தொடங்கஇருப்பதாகவும் ராஷ் பிஹாரி அறிவித்தார்.

அச்சு நாட்டுப் பிரதிநிதிகளுடன் தொடர்பு கொள்ளஇந்து மகா சபையின் சார்பாக ஜூகாலி கிஷோர் பிர்லா நியமக்கப்பட்டார். இந்து மகாசபையுடன் இணைந்து செயல்படுவதற்கு ஜெர்மனி சார்பாக ஜி.எல்.லெஸ்ஸேஸின்ங்கி, பி.பாஸ் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். கட்டுரைப் பரிமாற்றங்கள், மொழி பெயர்ப்புகள், வெளியீடுகள் என்கிற அளவில் இத்தொடர்புகள் இருந்தன.

**6. பாசிசத்தைப் பாசிசத்திற்காகவேஆதரித்த இந்துத்துவம்**

போர்தொடங்கியவுடன் அச்சு நாடுகளை ஆதரிப்பது என்பதுதான் இந்துத்துவவாதிகளின் நிலைப்பாடாக இருந்தது. எக்காரணம் கொண்டும் பிரிட்டிஷ் அரசுக்கு ஆதரவாக இருக்கக்கூடாது என்றுகூடத் தொடக்கத்தில் பேசினர். ஒரு குறிப்பிட்ட காலம்வரை ஜெர்மன், இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளின் எல்லா நடவடிக்கைகளையும் ஆதரித்தனர். எனினும்போர் முடிவில் அச்சுநாடுகள் தோல்வியுற்ற பாசிசக் கொடூரங்கள் உலகளவில் அம்பலப்பட்டுப்போன நிலையில் தொடர்ந்து பாசிசப் பெருமைகளை இந்துத்துவவாதிகள் வெளிப்படையாக பேச இயலாத நிலை ஏற்பட்டது.

பாசிஸ்டுகளுக்கும் இந்துத்துவவாதிகளுக்குமான தொடர்பின் சில அம்சங்களை நாம் விளங்கிக் கொள்வது அவசியம். பிரிட்டிஷ் எதிர்ப்பு, வெள்ளையர்களை வெளியேற்றி இந்தியாவிற்குச் சுதந்திரம் பெறுதல் என்கிற அடிப்படையில் இந்தத் தொடர்பு அமையவில்லை. ஆனால் சுபாஷ் சந்திர போசுக்கும் பாசிஸ்டுகளுக்குமான தொடர்பு அந்த அடிப்படையிலேய அமைந்தது. இந்துத்துவவாதிகள் எந்தக் கட்டத்திலும் பிரிட்டிஷ் எதிர்ப்பில் முனைப்புக்காட்டியதில்லை என்பது முக்கியம். 1942ல் நடைபெற்ற ‘வெள்ளையனே வெளியேறு’ போராட்டத்தில் அவர்கள் முழுமையாக விலகி இருந்தனர். குருஜியின் ‘சிந்தனைத் தொகு’ப்பிலும் விடுதலைப் போராட்டத்தைக் காட்டிலும் அன்றாடப் பணிகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதே டாக்டாஜியின் (ஹெட்கேவர்) கரிசனமாக இருந்தது எனக் குறிப்பிடப்படுகிறது. 1930, 1942 ஆகிய காலகட்டங்களில் விடுதலைப்போராட்டச் செயற்பாடுகள் தீவிரமாக இருந்தபோது ஆர்எஸ்எஸ் அணிகளுக்குப் போராட்டத்தில் ஈடுபட வேண்டும் என்கிற சஞ்சலங்கள் ஏற்படுவதுண்டு எனக்கூறும் கோல்வால்கர் அச்சமயங்களில் ஹெட்கேவர் எப்படி அவர்களைச் சமாளிப்பார் என்பதை விவரமாகச் சொல்லுவார்.

“ஒருநாள் ஒரு கண்ணியவான் வந்தார். சிறைக்குப் போக வேண்டும் என்றார். குடும்பத்தை யார் பார்த்துச்கொள்வார்கள் என டாக்டர்ஜி கேட்டார். தேவையான

ஏற்பாடுகளைச் செய்து விட்டேன் என்றார் அவர். அப்படியானால் இரண்டாண்டுகள் சங்கப் பணிகளைச் செய்யுங்களேன் என்றார் டாக்டர்ஜி. கடும் போராட்டக் காலங்களில்கூட சங்கத்தின் அன்றாடப்பணிகள் தடைப்பட்டதில்லை" என்கிற கூற்றிலிருந்து பிரிட்டிஷ் எதிர்ப்பு என்பது இநதுத்துவத்தின் பணியாக இருந்ததில்லை என்பது விளங்கும்.

"வெள்ளையனே வெளியேறு' போராட்டத்தைக் காங்கிரஸ் திட்டமிட்டுக் கொண்டிருந்தபோது, பின்னாளில் ஜனசங் கட்சியைத் தோற்றுவித்த இந்துத்துவாதி சியாமா பிரசாத் முகர்ஜி வங்க மாகாண அரசில் நிதியமைச்சராக இருந்தார். ஆகஸ்டு 8, 1942 அன்று 'வெள்ளையனே வெளியேறு' தீர்மானத்தைக் காங்கிரஸ் இயற்றியது. அன்றைய வங்கக் கவர்னரும் கடும் அடக்குமுறையாளனுமான சர்ஜான் ஹெர்பர்ட்டுக்கு ஜூலை 26 அன்று முகர்ஜி ஒரு கடிதம் எழுதினார். காங்கிரஸ் அறிவிக்கப்போகிற போராட்டத்தின் விளைவாக ஏற்படப் போகும் மக்கள் எழுச்சி, அதனால் உள்நாட்டுப் பாதுகாப்பிற்கு ஏற்பட உள்ள ஆபத்து ஆகியவற்றை அப்போதுள்ள அரசு தடுத்து நிறுத்த வேண்டிய அவசியத்தை முகர்ஜி ஹெர்பர்ட்டுக்குச் சுட்டிக்காட்டினார். இது குறித்து ஹெர்பர்ட், முகர்ஜியைவிட நிறையத் தெரிந்தவன். ஆகஸ்டு 9ம்தேதியன்று அமைச்சரவையைக்கூட்டி, 'அரசுமேற்கொள்ள உள்ள கடும் அடக்குமுறைக்கு அமைச்சரவை துணை செய்யவேண்டும், அல்லது பதவி விலகவேண்டும்' என்று கூறினான். முகர்ஜி உட்பட யாரம் பதவி விலகவில்லை. போராளிகளின் மீது கடும் அடக்குமுறை ஏவப்பட்டபோதும் நவம்பர் 10வரை முகர்ஜி பதவியில் ஒட்டிக் கொண்டிருந்தார் (ஏ.ஜி. மு.கு.நூ. பக். 43)

அதேபோல 1937 மேயில் சிறையிலிருந்து சாவர்க்கர் விடுதலை செய்யப்பட்டபோதும் வெள்ளை அரசு அவருக்கும பலநிபந்தனைகளை விதித்தது. நியாயப்படி விசாரணை நடத்தப்பட்தெனவும் தனக்கு வழங்கப்பட்ட தண்டனை சரியானதுதான் எனவும் வாக்கு மூலம் அளிக்கச் சொன்னது. எல்லா நிபந்தனைகளையும் ஏற்றுக்கொண்டு, நீட்டிய இடத்திலெல்லாம் கையெழுத்துப் போட்டுத் தந்துவிட்டு விடுதலையானார் சாவர்க்கர்.

சிந்து மாகாணத்தின் கூட்டணி அரசில் முஸ்லிம் லீக்குடன் இந்து மகாசபை பங்கு பெற்றிருந்தபோது, லீக் பாகிஸ்தான் பிரிவினைக்கு ஆதரவாகத் தீர்மானம் இயற்றியது. இந்து மகா சபையைச் சேர்ந்த அமைச்சர்கள் அதற்கு வருத்தம் தெரிவித்தனரேயொழிய பதவி விலகவில்லை.

ஆக, காங்கிரசை எதிர்ப்பது என்பதும் பிரிட்டிஷ் அரசுடன் ஒத்துழைப்பது என்பதுந்தான் இந்துத்துவ சக்திகளின் நடைமுறைகளாக இருந்தன. எனவே போசைப்போல பிரிட்டிஷ் எதிர்ப்பிற்காகப் பாசிஸ்டுகளுடன் அவர்கள் நட்பு பாவிக்கவில்லை. வேறு காரணங்களுக்காகவே இந்துத்துவவாதிகள் பாசிசத்துடன் தம்மை அவர்கள் இனங்கண்டு கொண்டனர். பாசிசத்தின் கொள்கை, நடைமுறை ஆகிய இரு அம்சங்களும் அவர்களுக்கு உவப்பானவை யாவும் பின்பற்றத் தக்கனவாகவும் இருந்தன.

சமூகத்தை இராணுவமயமாக்குதல், குறிப்பாக 6வயது தொடங்கி 18 வயதுவரையிலான சிறுவர்களுக்கு இராணுவப் பயிற்சி அளித்தல், இளமையிலேயே அவர்கள் மனத்தில் பாசிச/இந்துக் கருத்தியலைப் புகுத்துதல் என்கிற அம்சம் இந்துத்துவவாதிகளை மிகவும் ஈர்த்தது. சனநாயக அமைப்பையும் பன்மைத் தன்மையையும் பாசிஸ்டுகளைப் போலவே இந்துத்துவவாதிகளும் குழப்பம் எனக் கருதினர். சர்வாதிகாரத்திற்கு மாறுதல் என்பது குழப்பத்திலிருந்து ஒழுங்கை நோக்கிச் செல்வதென அவர்கள் நம்பினர்.

நேருவின் சோசலிசம், காந்தியின் அகிம்சை ஆகியவற்றையும் அவர்கள் அறவே வெறுத்தனர். வெளிப்படையாக வன்முறையைப் போற்றிய பாசிசம் இந்த வகையிலும் அவர்களை ஈர்த்தது. ‘ராட்டையா, ரை◌ஃபிலா’ போன்ற முழக்கங்களை அவர்கள் முன்வைத்தனர்.

காந்தியின் புவியியல் அடிப்படையிலான தேசியம் (ஜிமீகூரீகூரீவீஷீகூரீவீணீறீ ழிணீtவீஷீஸீணீறீவீsனீ) என்பது ஒரு குறிப்பிட்ட புவிப்பரப்பிற்குட்பட்ட அனைத்து மக்களையும் உள்ளடக்குவதாக இருந்தது. இசுலாமியரை விலக்கி எதிரிகளாக முன்னிறுத்த முனைந்த இந்துத்துவத்திற்கு பாசிசம் முன்வைத்த கலாச்சார/மரபினத் தேசியம் (சிuறீtuகூரீணீறீ/ஸிணீநீவீணீறீ ழிணீtவீஷீஸீணீறீவீsனீ) என்பதும் உள்நாட்டு எதிரி என்கிற பாசிசச் சிந்தனையும் பொருத்தமானதாக இருந்தது. இனத்தூய்மை என்கிற பாசிசக் கருத்தாக்கமும் அவர்களை ஈர்த்தது.

ஒழுங்கு, ஆணாதிக்கம், குடும்ப நிறுவனத்தை இறுக்கப் பேணுதல் முதலான அம்சங்களிலும் பாசிஸ்டுகளும் இந்துத்துவவாதிகளும் இணைந்து நின்றனர். இன்றளவும் அவர்கள் இந்தச் சிந்தனைகளைத் தொடர்ந்து பேணுதலை நாம் பார்க்க இயலும். காதலர் தினம் கொண்டாடக்கூடாது. பெண்கள் ஜீன்ஸ் அணியக்கூடாது. தேன்நிலவு கூடாது, ‘வாட்டர்’ போன்ற திரைப்படங்களை அனுமதிக்கக்கூடாது எனப்பல கூடாதுகளை அவர்கள் நடைமுறைப்படுத்துவதை

நாம் காண வேண்டும். பாராளுமன்றத்தைப் பாசிஸ்டுகள் தீயிட்டுக் கொளுத்தினர். பாபர் மசூதியை இந்துத்துவவாதிகள் இடித்துத் தகர்த்தனர்.

எனவே, பாசிசத்திற்கும் இந்துத்துவத்திற்குமான தொடர்பு கோட்பாட்டு அடிப்படையிலானது. தன்னிச்சையான தொடர்பாக இது அமையாமல் மிகவும் திட்டமிட்டு, அமைப்பு ரீதியான செயற்பாடுகளினூடாக இது தொடக்க காலத்தில் பேணப்பட்டது.

வெளிப்படையாகத் தம்மை பாசிஸ்டுகள் என அறிவித்துக்கொள்ள இயலாத நிலை வரும்வரை அவர்கள் தங்கள் பாசிசத் தொடர்புகளை வெளிப்படுத்த வெட்கப்பட்டதில்லை. மிகப்பெரிய மாற்றங்களுடன் ஓர் அய்ம்பதாண்டு காலம் இன்று ஓடோடிவிட்டது. முசோலினியின் பாசிசக்கட்சியும் இட்லரின் நாசிக்கட்சியும் இன்றைய சூழலில் தலைகாட்ட நேர்ந்தால் எப்படி இருக்கும் என்ற கேள்விக்குப் பதிலாக இன்று இந்துத்துவாதிகள் விளங்குகின்றனர். அவர்களது சொற்களையும் செயற்பாடுகளையும் கூர்ந்து கவனிப்போருக்கு இதை விரிவாக விளக்க வேண்டியதில்லை.

### 3. பெரியார் ஈ.வெ.ராவும் இஸ்லாமும்

1.

இந்துத்துவச் சொல்லாடல்களுக்கும் நடைமுறைகளுக்கும் சிம்ம சொப்பனமாக விளங்கியவர்கள் என பெரியார் ஈ.வெ.ராமசாமி அவர்களுக்கு இணையாக இந்திய வரலாற்றில் யாரையாவது சொல்ல முடியுமானால் அது புத்தரும் அம்பேத்கரும் மட்டுமே. இவர்களில் புத்தரையும் அம்பேத்கரையும் கூட இன்று இந்துத்துவ சக்திகள் எதையாவது சொல்லித் தம்முள் வாங்குவதற்குச் சதி செய்து கொண்டிருக்கும் சூழலில் இறுதிவரை இந்துத்துவ சக்திகளால் தொடமுடியாத நெருப்புத்துண்டமாக விளங்கக்கூடியவராகப் பெரியார் ஒருரே உள்ளார். இந்நிலையில் இன்று இந்துத்துவ எதிர்ப்பில் அக்கறையற்ற சக்திகள் இன்னொரு வகையில் பெரியார் மீது பழி தீர்க்க முயற்சிக்கின்றனர். பெரியார் இஸ்லாமியருக்கு எதிராக இருந்தார் என்ற பொய்யான அவதூறைக் கட்டவிழ்த்து விடுவதுதான் அது. ஆனால் பெரியாரின் சுமார் ஐம்பது ஆண்டுகால அரசியல் வாழ்வையும் அவரது பேச்சுக்களையும் கூர்ந்து கவனிப்போருக்கு இப்படிச் சொல்வது எத்தனை பெரிய அபத்தம் என்பது விளங்கும். இது தொடர்பான அவரது சில கொள்கைகளையும் செயற்பாடுகளையும் மட்டும் பார்ப்போம்.

பெரியாரது அரசியல் வாழ்வின் தொடக்கப்புள்ளியாக வைக்கம் போராட்டத்தைக் கருதலாம். இது குறித்து பெரியாரே எழுதியுள்ள கட்டுரை அவரது சிந்தனைத் தொகுப்புகளில் உள்ளது. ஈழவர், புலையர் முதலான தீண்டத்தகாத மற்றும் சூத்திரச் சமூகத்தினா பொதுச்சாலையில் நடக்கக்கூடாது என்பதை எதிர்த்து அப் போராட்டம் நடைபெற்றது(1925).

போராட்டத்தின் உச்சகட்டத்தில் திருவிதாங்கூர் ராணி காந்தியாரோடு பேச்சு நடத்தினார். சாலையைத் திறந்துவிடத்தயார் எனவும் அதற்காக கோயிலுக்குள் நுழைய வேண்டும் என்று சொல்லக்கூடாது என்று ராணி விதித்த நிபந்தனையைக் காந்தி ஏற்றுக்கொள்ள போராட்டம் முடிவுக்கு வருகிறது.

பெரியார் இதை ஒப்புக் கொள்ளவில்லை. கோயிலுக்குள் நுழைவது என்கிற பிரச்சாரத்தைத் தொடர்கிறார். பெரியார் சொல்கிறார்.

“அடுத்து எர்ணாகுளத்தில் ஒரு மாநாடு என் தலைமையில் கூட்டப்பட்டது. அதில் சாதி ஒழிப்புக்காக சாதி இல்லாத மதமாகிய இஸ்லாம் மதத்துடன் இந்துக்கள் சேர்ந்து விடுவது என்று தீர்மானம் நிறைவேற்றக் கொண்டு வரப்பட்டது. இது செல்வாக்குக்குட்பட்டவர்கள் கிறிஸ்துவ மதத்தில் சேர்வது என்று தீர்மானம் கொண்டு வந்தார்கள். மாஜி மந்திரி ஐயப்பன் அவர்கள் இஸ்லாம் மதத்திற்கு போய்ச் சேருவது என்பதைத் திருத்தி போட வேண்டும் என்று சொல்லி ஏக மனதாக நிறைவேற்ற செய்தார். இஸ்லாத்தில் சேருவது என்ற தீர்மானம் வந்த அன்றைக்கே ஐம்பது பேர்கள் முஸ்லிம்களாகிவிட்டார்கள். பிறகு வெளியிலும் பலர் மதம் மாறிவிட்டார்கள், இது ஒரு பெரிய கலக்கு கலக்கிவிட்டது.”

(விடுதலை 9.1.1959)

விசயம் அத்தோடு நிற்கவில்லை. இஸ்லாமாக மாறிய புலையர்களுக்கும் நாயர்களுக்கும் பலமான மோதல் ஏற்பட்டது. ஒருவர் செத்தும் போனார். இன்னும் பலர் இஸ்லாமாவது என்ற நிலை ஏற்பட்டவுடன் அன்றைய திவான் சி.பி.ராமசாமி ஐயரின் ஆலோசனையின் படி கோயில் கதவுகள் திறக்கப்பட்டன.

தீண்டத்தகாதவர்களின் விடுதலைக்கானக வழிகளில் முதன்மையானத மதமாற்றமே. அதிலும் இஸ்லாம் மதத்திற்கு மாறுவதே என்பதில் பெரியார் உறுதியாக இருந்தார். எங்காவது தண்டத்தகாதவர்களுக்கு நன்மைகள்

ஏற்பட்டிருக்கிறது என்றால் அது மதமாற்றம் என்கிற அச்சுறுத்தலின் விளைவாகத்தான் நடந்துள்ளது என்பதையும் அவர் வலியுறுத்தினார்.

உலகத்திலேயே மிகப்பெரிய கொடுமை தீண்டாமைதான் என்றார் பெரியார்.

"இந்த வியாதி மிகப் பெரியது. இது புற்று தொழுநோய் போன்றது. வெகு நாளைய நோய்" என்று சொன்ன பெரியார் இந்த நோயிலிருந்து விடுதலை பெற ஒரே வழி இந்து மதத்தை விட்டு வெளியேறுவதுதான் எனத்திரும்பத் திரும்பச் சொன்னார். வெளியேறுவது என்று சொன்னதோடு நிற்கவில்லை. "(இந்த நோய்க்கு) ஒரே மருந்துதான் அது இஸ்லாம்தான்! இதைத்தவிர வேறு மருந்து இல்லை. இது இல்லாவிட்டால் வேதனைப்பட வேண்டியதுதான். நோய் தீர்ந்து எழுந்து நடக்க இன்றைய நிலையில் இஸ்லாம் (இந்து மதத்தைவிடுவது என்னும்) மருந்துதான். இதுதான் நாடு கொடுக்கும் வீரம் கெகடுக்கும், நிமிர்ந்து நடக்கச் செய்யும் மருந்தாகும் என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னார் ('இன இழிவு ஒழய இஸ்லாமே நன்மருந்து என்னும் பெயரில் குடியரசு பதிப்பகத்தால் இந்த உரை சிறு நூலக 1947ல் வெளியிடப்பட்டது.)

தீண்டாமைன் கொடுமைக்கு எதிராக மாற்றத்தை முன் மொழிந்த இன்னொரு பெருந்தலைவரான அம்பேத்கரின் முயற்சிக்கு அகில இந்திய அளவில் பெருந்துணையாக நின்வரும் பெரியாரே. தொடக்கத்தில் முஸ்லிம் மதத்திற்கு மாறுவது என்கிற நிலைப்பாட்டையும் அம்பேத்கர் சிந்தித்தார். 1930ல் முஸ்லிமாக மாறுவது என அம்பேத்கர் சொன்னபோது, "எவ்வளவோ பெரிய பெரிய ஆட்களெல்லாம் அதை கண்டித்தார்கள். மாளவியா, விஜயராகவாச்சாரியார் போன்றவர்களெல்லாம் அம்பேத்கர் அவர்களே உங்களுடைய முடிவை மீண்டும் பரிசீலனை செய்யுங்கள்' என்பதாகத் தந்தி கொடுத்தார்கள் அப்போது தோழர் அம்பேத்கர் அவர்களுக்கு நானும் ஒரு தந்தி கொடுத்தேன். என்னவென்றால், நீங்கள் ஒண்டியாகப் போகக்கூடாது. குறைந்தது ஒரு லட்சம் பேரோடு மதம் மாற வேண்டும். அப்போது தான் முஸ்லிம் மதிப்பான்... ஒரு லட்சம் பேரோடு தாங்கள் அங்கு போகும் போது நானும் ஒரு பத்து இருபதாயிரும் பேர்கள் தருகிறேன்.

(ஆனைமுத்து தொகுப்பு, பக். 1033) என்பதாகத் தந்தி கொடுத்தேன்.

இப்படியாக அவரை இஸ்லாமுக்கு மாற ஊக்குவித்தவர் பெரியார்.

அம்பேத்கர் இறுதியில் பௌத்தத்திற்கு மாறியபோது கூட இஸ்லாமுக்கு மாறுவதே சரியாக இருக்கும் என்ற கருத்து பெரியாருக்கு இருந்தது. இது குறித்து, "அம்பேத்கர் பௌத்தத்தில் சேருகிறேன் என்று சொன்னவுடன் எப்போதும் போல பலர் எதிர்த்தார்கள். ஆனாலும் இஸ்லாம் ஆவது என்றால் பயப்படுகிற அளவுக்கு பௌத்தர் ஆகிவிடுவது என்று சொல்லுவதற்கு இந்து மதத்தார்கள் (பார்ப்பனர்கள்) பயப்படமாட்டார்கள். ஏனென்றால் பௌத்தத்தை இந்து மதத்தோடு ஏறக்குறைய கலர வைத்து விட்டார்கள்." என்று அவர் குறிப்பிடுவதிலிருந்து (சென்னை சொற்பொழிவு 13.5.1952) இது விளங்கும்.

ஏதோ இஸ்லாமுக்கு மதம் மாறுவது என்கிற அளவோடு பெரியாரின் முஸ்லிம் ஆதரவு நின்று விடவில்லை. முஸ்லிம் அரசியலுக்கும் ஆதரவாக நின்றார். விடுதலைக்கு முந்தைய முஸ்லிம் அரசியலில் இரண்டு கூறுகள் முக்கியமானவை.

1. முஸ்லிம்களுக்கானத் தனி நாடு –பாகிஸ்தான் பிரிவு

2. முஸ்லிம்களுக்குத் தனி வகுப்பு வாரி ஒதுக்கீடு.

இந்த இரண்டு கோரிக்கைகளையும் பெரியார் ஆதரித்தார். முஸ்லிம் இந்தியா என்ற கோரிக்கை பற்றி பேச வருமபோது,

"ஜினாப் ஜின்னா இந்தப் பிரிவினைக்கு கூறும் காரணங்கள் ம றுக்க முடியாதன. அவரது கோரிக்கை நியாயமானதே. காந்தியார் சதா காலமும் பச்சையாகவே தாம் விரும்பும் சுயராஜ்ஜியம் ராம ராஜ்ஜியம் தானென்றும், தமது வாழ்க்கையின் இலட்சியமே இந்து மதத்தைப் புனருத்தாரணம் செய்வது தானென்றும் கூறிக் கொண்டிருக்க, தோழர் சாவர்க்கார் போன்ற இந்து மகாசபைத் தலைவர்கள் 'இந்துஸ்தானம் இந்துக்களுக்கே' என்ற போர் முழக்கம் செய்து கொண்டுமிருக்கக் கண்ட பிறகும் முஸ்லிம்கள் கைகட்டி வாய்பொத்தி இருப்பார்கள் என்று யார்தான் எதிர்பார்க்க முடியும்?

இந்து முஸ்லிம் பிரச்சனை தீர்க்கப்பட முடியாதோ என்று திகைக்குமளவில் இருக்கிறது. இதனைத் தீர்த்துக் கொள்ள ஜனாப் ஜின்னாவின் திட்டமே அறிவு ததும்புவது. நான் ஜனாப் ஜின்னாவின் கோரிக்கையை ஆதரிப்பதோடு,மற்றொரு முக்கியமான அம்சத்தையும் வற்புறுத்த விரும்புகிறேன். முஸ்லிம்கள் 'முஸ்லிம் நாடு' என இந்தியாவில் தனி நாடு பிரித்துக் கொள்ள முடியும். ஆனால் இந்துக்கள் முடியாது. ஏனெனில் இந்துக்கள் என்று கூறப்படும்

தொகுப்பில் பலப்பல வர்க்கத்தார் உள்ளனர்" எனப் பெரியார் இக்கோரிக்கையை முழுக்க முழுக்க ஆதரித்தார். (குடியரசு அறிக்கை–31.3.1940). இந்தியாவுக்கு இந்துஸ்தானம் எனப்பெயர் வைப்பததைக் காட்டிலும், 'திராவிடக் கொள்கையை உடைய பாகிஸ்தான்' என்று பெயர் வைக்க எனக் கூட அவர் ஒரு முறை குறிப்பிட்டார்.

முஸ்லிம்களுக்கு உரிய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும் என்பது இன்றளவும் நியாயமான ஒரு கோரிக்கை. பெரியார் அன்று சொன்னார்.

"இந்திய அரசாங்கத்தில், இந்திய ஜனங்களில் நான்கில் ஒரு பங்குக்கு மேற்பட்ட பெரிய சமூகத்தாராகிய முகம்மதிய சமூகத்தாரர்களுக்குப் பங்கு உண்டா இல்லையா?

அவர்கள் ஏழரைக் கோடிப் பேரும் இனிமேல் இந்தியாவை விட்டுப்போக முடியுமா? அவர்கள் சுயமரியாதையுடன் வாழ வேண்டுமானால் இராஜ்ய விஷயத்திலும் மத விஷயத்திலும் நமக்குச் சரியான அந்தஸ்து பெற்றுத்தானே ஆக வேண்டும்? வகுப்பு பிரதிநிதித்துவம் இல்லாவிட்டால் அவர்களுக்குச் சம உரிமைகிடைத்துவிடுமா?"

(குடிஅரசு, தலையங்கம் 14.2.1926)

தேர்தலில் மட்டுமின்றி அரசுப் பணிகளிலும் முஸ்லிம்களுக்கே உரிய பங்களிக்கப்படவேண்டும் என்பதே பெரியாரின் கருத்தாக இருந்தது.

முஸ்லிம்களை 'அந்நியர்களாக' முத்திரை குத்தும் சதிக்கு எதிராக அவர்களைத் திராவிடர்கள் என அணைத்துக் கொள்ளும் போக்கையும் பெரியாரிடம் காணமுடியும். பெரியாரைப் பொருத்தமட்டில் பார்ப்பனர்களே அந்நியர்கள் (பார்க்க: ஆனைமுத்து, தொகுப்பு, பக்.32. 55)

இஸ்லாம் மீது பெரியாருக்கு இருந்த பற்றுக்கான காரணங்களையும் அவர் பல இடங்களில் சுட்டிக் காட்டுகிறார். சுருக்கம் கருதி மேற்கோள்களைத் தவிர்த்து அவர் கூறுகிற காரணங்களை மட்டும் சுட்டிக் காட்டுகிறேன்.

1. இஸ்லாம் மதத்தில் பல கடவுள் வணக்கம் கிடையாது. மூட நம்பிக்கைகள் கிடையாது. விக்கிர ஆராதனைகள் கிடையாது (ஆனைமுத்து தொகுப்பு பக்.301,302).

2. சமத்துவமும் சகோதரத்துவமும் நிறைந்த ஒரே மதமாக இஸ்லாம் மட்டுமே உள்ளது. தீண்டத்தகாதவர் என்றோ வேதத்தை படிக்கக் கூடாதவர் என்றோ ஆலயத்திற்குள் அல்லது பொது இடங்களுக்குள் நுழைய முடியாதவர் என்றோ இங்கு யாரும் தடுக்கப்படுவது இல்லை(ஆனைமுத்து தொகுப்பு பக்.32.33)

இஸ்லாம் என்றால் ஏதேனும் 'லுங்கி' கட்டிக் கொள்வது அல்லது தாடி வைத்துக் கொள்வது என்று நினைக்க வேண்டாம். "இஸ்லாம் என்பது சாந்தி, பணிவு, பக்தி என்ற பொருள்படும் அரபுச் சொல். இஸ்லாம் என்பது சகோதரத்தன்மை என்பது. இவ்வளவு தான்" என்று சொன்ன பெரியார். "நம்மிலும் பல பெரியார்கள்ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது போலெல்லாம் சொல்லிப் பார்த்தார்கள். ஆனால் அவைள் என்றும் ஏட்டளவிலே இருக்கின்றனவே தவிர நடப்பில் இல்லை. ஆனால் முஸ்லிம் சமுதாயத்திலே நடப்பிலே ஒரே ஆண்டவன் வழிபாடும் மக்களுக்குள் பிறவியில் மதமற்ற நிலைமையும் இருந்து வருகின்றன" என்பதைக் சுட்டிக் காட்டினார்.

நபிகள் நாயகத்திற்கு விழா எடுத்த ஒரே முஸ்லிம் அல்லாத இந்திய அரசியல் தலைவர் பெரியார் ஒருவராகத்தான் இருக்கமுடியும். 'நான்தான் கடைசி நபி' என நாயகம் சொன்னதைப் பெரியார் விதந்தோதுகிறார். "இன்றைய வரையிலே அவருக்குப்பின்னால் இந்தத் துறைகளில் அவர் சொன்ன கொள்கை கருத்துக்களை விட மேலானதாகச் சொல்லுவதற்கு எவரும் தோன்றவில்லை" என முத்தாய்ப்பு வைக்கிறார் (சென்னை சொற்பொழிவு, 20.12.1953)

"திரு. முகம்மது நபியைப் பற்றி யார் எப்படி நினைத்துக் கொண்டாலும் நான் அவரை ஒரு மனிதர் என்றும், மனிதரைப் போலவே தாயும் தகப்பனும் கூடி கருத்தரித்து பிறந்தவர் என்றும் கருதித்தான் அவரால் செய்யப்பட்டதாகச் சொல்லும் விஷயங்களில் அனேகத்தை நான் புகழ்கிறேன். அதற்காகவே அவரையும் நான் பாராட்டுகிறேன்.அப்படிச் சொல்லப் படுபவைகளே அந்த மார்க்கத்திற்கு ஒரு பெருமை என்றும் நினைக்கிறேன்.... ஆனால் மற்ற மதத்துக்காரர்களோ தங்கள் மதத் தலைவரை ஒரு மனிதர் என்றலே கோபித்துக் கொள்கிறார்கள். கழுதை, நாய், குதிரை இவற்றினுடைய வயிற்றிலிருந்து பிறந்தவர் என்றாலும் ஏற்றுக் கொள்கிறார்கள்" என்றெல்லாம் சொல்லிச் செல்வது குறிப்பிடத்தக்கது (சாத்தான்குளம், 28.7.1931)

அப்படியானால் இஸ்லாமையும் முஸ்லிம் அரசியலையும் பெரியார் எங்குமே விமர்சிக்கவில்லையா? விமர்சிக்கிறார். அந்த விமர்சனங்களின் அடிப்படையில் தான் இன்று சில விஷமிகள் பெரியாரை இசுலாமுக்கு எதிராக நிறுத்த

முயற்சிக்கின்றனர். இந்தியாவிற்கு வந்த இஸ்லாமில் கலந்து போன சில மூட நம்பிக்கைகளை, இந்து பழக்க வழக்கங்களையே அவர் கண்டிக்கிறார்.

“ஆனால் நான் இஸ்லாம் மதக் கொள்கைகள் முழுவதையும் ஒப்புக் கொண்டதாகவே எல்லாம் சுயமரியாதைக் கொள்கைகள் என்பதாகவே யாரும் தீர்மானித்து விடாதீர்கள். அதிலும் பல விரோதமன கொள்கைகளைப் பார்க்கிறேன்.இந்து மதத்தில் எதை எதை குருட்டு நம்பிக்கை, மூடப்பழக்கம், பாமரத்தன்மை என்கிறமோ அவை போன்ற சில நடவடிக்கைகள் இஸ்லாம் மதத்திலும் சிலர் செய்கிறார்கள்”. (சாத்தான்குளம், 28.7.1931) என்று சொல்கிற பெரியார் அத்தகைய மூட நம்பிக்கைகளாகச் சமாதி வணக்கங்கள், பஞ்சா அடித்தல் சந்தனக்கூடு, தீமிதி, கூண்டு உற்சவம், கொடிவணக்கம், அல்லாசாமி பண்டிகை முதலியவற்றைப் பட்டியலிடுகிறார். இத்தகைய பழக்க வழக்கங்கள் இஸ்லாமியருக்குரியவையல்ல என இன்று பல இஸ்லாமிய மத அறிஞர்களே குறிப்பிடுவது இங்க சிந்திக்கத்தக்கது. இறுதியாக,

“இவற்றையும் மார்க்கக் கொள்கைகளோடு சேர்த்துக் கொண்டிருக்கிறவர்களையும் சேர்த்து வைத்துக் கொண்டு இஸ்லாம் மார்க்கம் பகுத்தறிவு மார்க்கம் என்று எப்படி சொல்ல இயலும்? கோபிப்பதில் பயனில்லை. மற்ற மதங்களை விட இஸ்லாம் மதம் மேலானது என்பது என் அபிப்ராயம். ஆனால் அதில் இனிச் சிறிது கூடர்சீர்திருத்தம் வேண்டியதில்லை என்பவர்களுடன் முரண்பட்டவன்” (களக்காடு, 23.12.1950) என்கிறார். பகுத்தறிவுக்குட்பட்ட நவீன மதமாக இஸ்லாம் திகழ்வதில் தவறேதும் வந்துவிடலாகாது என்கிற அக்கறையோடு இந்த விமர்சனங்கள் அமைந்துள்ளன என்பது முக்கியம்.

அதே போல் முஸ்லிம் அரசியலை பெரியார் விமர்சிப்பது என்பது கூட 1948க்குப் பின்புதான். பிரிவினைக்குப் பிறகு இங்குள்ள முஸ்லிம் அமைப்புகள் முழுக்க முழுக்க காங்கிரஸ் ஆதரவு நிலை எடுத்த போதும், 1962க்குப் பின்பு ராஜாஜி தலைமையிலான கூட்டணிக்கு ஆதரவளிக்க முடிவெடுத்த போதும் தான் பெரியார் அரசியலை விமர்சித்தார். பெரியார் வெறும் சமூக சீர்திருத்தவாதியல்ல. ஐம்பது ஆண்டு காலம் இந்த மண்ணில் தீவிரமாக அரசியல் போராட்டம் நடத்திய போராளி. பார்ப்பன எதிர்ப்பு என்பது அவரது அரசியலின் ஆணி வேராக இருந்தது. அதற்கு முஸ்லிம் மற்றும் தலித் அரசியல் துணையாக இருக்கும் என நம்பினார். அப்படி இல்லை என அவர் கருதியபோது அவரது அரசியல் நோக்கிலிருந்து அந்தப்போக்குகளை

விமர்சித்தார். எனினும் அதற்காக இதுவரை தாம் முன்வைத்த அவரது கருத்துகள் எதையும் அவர் மாற்றிக் கொண்டதில்லை. கடைசி வரை இஸ்லாமிய ஆதரவிலேயே அவர் நின்றார்.

“நாத்திகம் எனது முக்கிய கொள்கை அல்ல. இஸ்லாமியர்கள் சுயமரியாதை இயக்கத்தில் சேருங்கள்” எனப் பெரியார் அறைகூவல் விடுத்ததையும் ஜின்னா அவர்கள் தென்னக முஸ்லிம்கள் சுயமரியாதை இயக்கத்திலேயே இருக்கலாம் எனச் சொன்னதையும் நாம் மறந்து விடலாகாது.

இஸ்லாமையும், முஸ்லிமிகளையும், முஸ்ரிரிம் அரசியலையும் இத்தனை அப்பட்டமாக ஆதரித்த ஒரு முஸ்லிம் அல்லாத தலைவரை இந்திய அரசியலில் பார்க்க இயலாது. அதனால் தான் இந்துத்துவம் பெரியாரை மட்டும் அண்ட முடியாமல் விலகி நிற்கிறது.

**பின்குறிப்பு:** அப்படியானால் ஏன் பெரியார் மதம் மாறவில்லை எனக்கேள்வி எழுவது இயற்கை. அம்பேத்கரிடம் இதற்கான பதிலைப் பெரியார் கூறியுள்ளார்.

“அம்பேத்கர் அவர்கள் என்னைப் பார்த்து என்ன இராமசாமி நாம் இப்படி பேசிக் கொண்டே இருந்தால் என்ன பலன் ஏற்பட முடியும்? வாருங்கள். நாம் இரண்டு பேரும் புத்த மதத்தில் சேர்ந்துவிடுவோம் என்றார். நான் சொன்னேன்:’ரொம்ப சரி, இப்போது முதலில் நீங்கள் சேருங்கள்,நான் இப்போது சேருவது என்பது அவ்வளவு ஏற்றதல்ல. ஏனென்றால் தமிழ்நாட்டில் நான் இப்போது சாதி ஒழிப்பைப் பற்றித் தீர்மானமாகப் பிரச்சாரம் செய்து வருகிறேன். இந்தியக் கடவுள்கள் எனப்படும் விநாயகர், இராமர் சிலைகளை உடைத்தும், படங்களை எரித்தும் இந்து மதத்திலுள்ள பல விஷயங்களைப் பற்றியும் மக்களிடம் எடுத்துச் சொல்லி இப்போது பிரச்சாரம் செய்வதுபோல் அப்புறம் நான் செய்ய முடியாது. ஒரு இந்துவாக இருந்து கொண்டு இப்படிப் பேசுவதனால் என்னை யாரும் நீ அதைச் சொல்லக் கூடாது’ என்று தடுக்க உரிமை கிடையாது. ஆனால் நான்,இன்னொரு மதக்காரனாக இருந்தார்ல அப்படிப்பட்ட வசதி எனக்கு இருக்க முடியாது”

(டெல்லி பகார் கஞ்ச், 15.12.1959) என்று தான் வெளியே நிற்க வேண்டியதன் நியாயத்தைப் பெரியார் விளக்குகிறார்.

வைக்கம் போராட்டத்தின்போது சுவாமி சிரத்தனாந்தர் பஞ்சாபில் இருந்து போராட்டத்திற்கு ஆதரவாகச் சீக்கியர்களையும், கொஞ்சம் பணத்தையும்

அனுப்பியதை வைத்துக் கொண்டு வைக்கம் போராட்டத்தை இந்து மதத்திற்கு எதிராகப் பிற மதத்தார் செய்யும் கலவரமாகப் பார்ப்பனர் சித்திரித்ததையும் காந்தியும் அதை ஏற்றுக் கொண்டு பிற மதத்தாரை விலகச் சொல்லி ஆணையிட்டதாகவும் இங்கே கருத வேண்டும்.

2.

ஜே.பி.பி. மோர் அவர்களின் விusறீவீனீ மிபீமீஸீtவீஹ் றிகூஷீவீஸீt சிuறீtuகூஷீமீ ணீஸீபீ tலீமீ ஞ்கூஷீணீஸ்வீபீவீணீஸீ திணீநீtஷீகூஷீ வீஸீ ஜிணீனீவீறீழிணீபீu என்கிற நூலைச் சமீபத்தில் படிக்கநேரிட்டது. தமிழில் உருவான அச்சு ஊடகம் தமிழ் முஸ்லிம் அடையாளம் ஒன்றைக் கட்டமைப்பதில் வகித்த பங்கை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும் இந்நூல் முக்கியமான ஒன்று. முஸ்லிம்களின் பதிப்பு முயற்சிகளை விளக்கும் பின்னிணைப்பு இன்னும் முக்கியமானது. அச்சு ஊடகங்களின் வழியாயத் தமிழ் முஸ்லிம்கள் மத்தியில் உருவான மதச் சீர்திருத்த முயற்சிகளைக் கடைசி மூன்று அத்தியாயங்கள் பேசுகின்றன.

திருக்குர்ஆன், ஹதீஸ் (நபிமொழிகள்) முதலியன தமிழ் வாசிப்பிற்கில்லாத பின்புலத்தில் முஸ்லிம் சமூகத்தில் ஊறிப்போன மூட நம்பிக்கைகள், சமாதி (தர்ஹா) வணக்கம், சந்தனக்கூடு முதலான திருவிழாக்கள், இந்துமதப் பாதிப்பினால் உருவான சடங்குகள் ஆகியவற்றிற்கெதிராக இச்சீர்திருத்த முயற்சிகள் மேற்பட்டுள்ளன. வடநாட்டில் உருவான அஹமதீயா இயக்கத்தைச் சேர்ந்தவரென முஸ்லிம் உலமாக்களால் குற்றம் சாட்டப்பட்ட திருநரையூர் (குடந்தை அருகில் உள்ளது) பி.தாவூத் ஷா இதில் முக்கிய பங்கு வகித்துள்ளார்.

1923-ல் இவர் தொடங்கி நடத்திய ‘தாருல் இஸ்லாம்’ இதழ், இவரால் உருவாக்கப்பட்ட ‘நாச்சியார் கோயில் முஸ்லிம் சங்கம்’ முதலியன இந்நோக்கில் செயல்பட்டன.அரபுத் தமிழிலன்றி, அரபு கலவாத தமிழில் எழுதலும் இவர்களின் செயற்பாடுகளில் ஒன்று. இம்முயற்சிகள் ஏற்படுத்திய எதிர்வினைகள் முதலியவற்றை இன்னொரு சந்தர்ப்பத்தில் விரிவாகக் காண்போம்.

நான் இங்கே சொல்ல வருவது வேறொன்று. தமிழ் முஸ்லிம் சமூகத்தில் செயற்பட்ட சீர்திருத்த இயக்கங்களில் ஒன்றாக ஜே.பி.பி. மோர் திராவிட இயக்கத்தைச் சுட்டிக்காட்டுகிறார். பெரியாரின் பங்கை வலியுறுத்துகிறார். ‘குடி அரசு’ ‘விடுதலை’ ஆகிய இரு இதழ்களும் இதில் பெரும் பங்கு வகித்தன என்கிறார். 19, 20 ஆம் நூற்றாண்டுகளில் இங்கு உருவான இந்து

சீர்திருத்தவாதிகளைப் போலன்றி பெரியார் ஈ.வெ.ரா. ஒருவரே இந்து மதத்திலும் கிறிஸ்தவத்திலும் உள்ள ஆஸ்தீக மரபுகளுக்கும், சாதீயத்திற்கும், இஸ்லாமில் ஊடுருவி விட்ட இஸ்லாமியமல்லாத வழமைகளுக்கும் எதிரானவராக இருந்தார் என மோர் வியக்கிறார் (பக்.142).

'குடியரசு அரசிலும்' 'விடுதலையிலும்' மிலாது நபி விழாக்களிலும் பெரியார் இஸ்லாம் குறித்தும் நபிகள் குறித்தும்பேசியவை பற்றி இந்நூலிலுள்ள இன்னொரு கட்டுரையில் விரிவாகப் பேசப்பட்டு உள்ளத. இஸ்லாத்திலுள்ள சமத்துவம், சகோதரத்துவம், பகுத்தறிவு சார்ந்த சிந்தனைகளைப் பெரியார் வியக்கும் இக்கூறுகளை மோரும் வியக்கிறார். இதனால் முஸ்லிம்களுக்கும் பெரியார் மற்றும் சுயமரியாதை இயக்கத்திற்குமான தொடர்புகள் வலுப்பட்டன. சமதாயத்தின் நலன் விரும்பியாகப் பெரியாரை முஸ்லிம்கள் கண்டனர். தாவூத்ஷாவையும் அஹமதீயா இயக்கத்தையும் எதிர்த்த சய்ஃபுல் இஸ்லாம் இதழாசிரியர் மவுலானா மவுல்வி அஹமத் சயீத் சாஹிப் இவர்களில் ஒருவர். கடவுள் மறுப்பாளரான போதும் பெரியார் முஸ்லிம் சமுதாயக் கூட்டங்களில் கலந்து கொள்வதை இவர் வெளிப்படையாக ஆதரித்தார். ஆயிரக்கணக்கான கடவுளரை வணங்கும் இந்துக்களையும் இறைமையின் மும்மைப் பண்மை (tகூரீவீஸீவீஹ) நம்பும் கிறிஸ்தவர்களையும் முஸ்லிம் மேடைகளில் அனுமதிக்கும்போது ஏன் சுயமரியாதை இயக்கத்தவரை அனுமதிக்கக்கூடாது என்றார் (குடி அரசு, பிப்ரவரி 6, 1938).

'குடியரசு' இதழில் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த பலர் தொடர்ந்துஎழுதிவந்தனர்(எஸ்.வி.ஆர்.,வ.கீதா எழுதியுள்ள'சுயமரியாதை சமதர்மத்' நூலில் கொடுக்கப் பட்டுள்ள பெயர்ப் பட்டியலைக் காண்க).

முஸ்லிம் மேடைகளில் பெரியார் பேசியது போலவே, சுயமரியாதை இயக்க மேடைகளில் முஸ்லிம் தலைவர்கள் பேச அழைக்கப்பட்டனர். திருக்குர் ஆனை முதன்முதலில் தமிழில் பெயர்த்த மவுலானா மவுல்வி அப்துல் ஹமீது பாகவி பேசிய பேச்சொன்று 'குடி அரசில்' (ஆக.24, 1930) வெளிவந்துள்ளது.

பெரியார் முஸ்லிம்களைத் 'திராவிடர்கள்' எனக் கூறி வந்ததைப் பற்றி முன்பே குறிப்பிட்டுள்ளேன். தம்மை 'அந்நியராகக்' கருதாமல் திராவிடராக அணைத்துக் கொள்ளும் இப்பண்பு முஸ்லிம்களை வெகுவாக ஈர்த்தது. தமிழைத் தாய் மொழியாகக் கொண்டு,தமிழகத்தைத் தாயகமாக ஏற்றுக்கொண்டுள்ளவர்கள் யாராயினும்–அவர்கள் சைவர்கள், வைணவர்கள், பவுத்தர்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், நாத்திகர்கள், நம்பிக்கையாளர்கள் யாராயினும்– அவர்கள்

தமிழர்களே என ஆத்தூர் ஈ.வி.டி. ஷேக் அப்துல் காதரும், முஸ்லிம் திராவிடர்களே என ஆத்தூர் பி.ஏ. இஸ்மாயிலும் 'குடி அரசு' இதழ்களில் எழுதினர் (பார்க்க: மோர், பக்.143; 'குடிஅரசு' ஏப்ரல் 30, 1939&ஜுன் 21, 1947).

பெரியாரால் கடுமையாக எதிர்க்கப்பட்ட காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவராயினும் நரையூர் தாவூத் ஷாவும் கூட முஸ்லிம்கள் திராவிடர்கள்தான் என ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று (பார்க்க: மோர், பக்.144; னீணீஷீ, ஏப்ரல் 18, 1940)

திருச்சி ஹாஜி சுபகு மொஹதீன் சாஹிப், ஈரோடு அப்துல்லாஹ் ஆகியோர் தமிழ் முஸ்லிம் சமூகத்தில் சீர்திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் குறித்தும் 'குடி அரசில்' எழுதினர். 'குடி அரசில் எழுதினால் அது முஸ்லிம் சமுதாயத்தை எட்டும் என்கிற நம்பிக்கை அன்று இருந்தது. மொஹிதீன் சாஹிப் திருக்குர் ஆனை மேற்கோள் காட்டி(6:152. 17:32)குடும்பக் கட்டுப்பாடு மற்றும் கருத்தடை முயற்சிகளை ஆதரித்து எழுதவும் செய்தார்(பார்க்க: மோர், பக்.144 'குடி அரசு' நவ. 26, 1933, மார்ச் 25,1934(

சென்னைக பஷீர் நோக்கிலிருந்து இஸ்லாத்தை மேற்கத்திய கல்வியாளர்களை மொஹிதீன் மறுக்கவும் செய்தார். மதத்திலும் கூடப் பகுத்தறிவு வேண்டும் என்று அவர் வெளிப்படையாக எழுதினார். முஸ்லிம், பெண்கள், விதவைகள் நிலை குறித்தும் அவர் எழுதினார் (குடி அரசு' ஜனவரி 28, 1934, நவம்பர் 26, 1933)

பகுத்தறிவு நோக்கிலிருந்து இஸ்லாத்தை விமர்சித்தவர்களில் இன்னொருவர் கொழும்பைச் சேர்ந்த ஏ.எல். முஹம்மத் தமீம் (மோர், பக்.145) கொழும்பைச் சேர்ந்த டி.எம். இப்ரஹீம். நபிகள் நாயகத்தை ஒரு 'கம்யூனிஸ்ட்' என்று எழுதவும் தயங்கவில்லை (மோர், 145). பொருளாதார சமத்துவத்தை வலியுறுத்தி எழுதிய இன்னொருவர் திண்டுக்கல் கே. அப்துல் ஹமீத் (மோர்,பக். 145).

இவை அனைத்தும் 'குடி அரசு' மற்றும் 'விடுதலை' இதழ்களில் முன் வைக்கப்பட்ட கருத்துக்கள் என்பது நினைவு கூர்த்தக்கது. முஸ்லிம்கள் தாராளமாகத் தம் சீர்திருத்தக் கருத்துக்களை வெளிப்படுத்தும் களமாகப் பெரியாரின் திராவிட இயக்க இதழ்கள் அமைந்தன. முஸ்லிம்கள் தவிர சுயமரியாதை இயக்கமும் நேரடியாக இஸ்லாத்தில் கலந்து போன பகுத்தறிவுக்குப் பொருந்தாத கூறுகளைத் தொடர்ந்து விமர்சித்தது. முல்லாக்களைப் பார்ப்பனப் புரோகிதர்களுக்கு ஒப்பிட்டது ('குடி அரசு') அக்.14, 1928). பர்தா முறையைக் கண்டித்தது (அதே இதழ்).

அதே நேரத்தில் இந்து மதத்தை விட்டு சூத்திரர்களும், தாழ்த்தப்பட்டவர்களும் வெளியேற வேண்டியதன் அவசியத்தையும் இஸ்லாத்தை நோக்கிய மத மாற்றத்தையும் பெரியார் தொடர்ந்து ஆதரித்து வந்தார். திருநெல்வேலியில் நடைபெற்ற மீனாட்சியும் மத மாற்றத்தை (1981) மட்டுமே நாம் அறிந்துள்ளோம். 1929ம் ஆண்டு சீலையம்பட்டி (திருநெல்வேலி) யில் 69 தலித்கள் முஸ்லிம்களாயினர். இந்நிகழ்வை ஆதரித்து, ஈரோடு உண்மை நாடுவோர் சங்க'க் கூட்டத்தில் பெரியார் பேசிய பேச்சு முழுமையாக 'குடி அரசு' வெறிவந்தது(அக்.20.1929).

காங்கிரஸைத் தொடர்ந்து ஆதரித்து வந்த தாவூத் ஷாவை இக்காரணத்திற்காகவே முஸ்லிம்களில் சிலர் எதிர்க்க நேரிட்டபோது (1938, அவர்கள் முஸ்லிம்களுக்கும், முஸ்லிம் லீக்கும் ஆதரவான இதழ்களாக 'சய்ஃபுல் இஸ்லாம்' தவிர 'விடுதலை'மற்றும் 'உதயசூரியன்' முதலான திராவிட இயக்க இதழ்களையே ஆதரித்தனர் என்கிறார் மோர் (பக்.152). (தாவூத் ஷா 1939 ஜனவரி 1 அன்று முஸ்லிம் லீகில் இணைந்தார்). உருது பேசும் முஸ்லிமாகிய அப்துல் ஹமீது கான், முஸ்லிம்கள் சய்ஃபுல் இஸ்லாம்' மற்றும் 'விடுதலை' இதழ்களை ஆதரிக்க வேண்டுமென வெளிப்படையாகவே குறிப்பிட்டார்(குடி அரசு' ஜூன் 26, 1938).

ஆனாலும் இந்த உறவு முற்றிலும் சுமூகமானது அமையவில்லை. அமையாதுதானே. பெரியாரை ஒரு எதிர் கலாச்சாரவாதியாக வகைப்படுத்துகிறோம். நாம் கடவுள் மறுப்பையும், மத ஒழிப்பையும் வற்புறுத்தியவர் அவர். இறை அச்சத்தையும், மதக்கடமைகளை நிறைவேற்றுவதையும் இறுக்கமாகக் கோரும் ஒரு மதம் இஸ்லாம். எனவே முரண்பாடுகள் இயற்கைதான். இந்த முரண்களை மீறித் தொடர்ந்து பெரியார் தமிழக முஸ்லிம்களின் நண்பராகவும் நல்லது நினைப்பவராகவும் விளங்கியது வியப்புக்குரிய ஒன்று மட்டுமல்ல ஆய்வுக்குரியி ஒன்றும் கூட.

முஸ்லிம் மேடைகளில் பெரியாரை அனுமதிப்பது குறித்து முஸ்லிம் முன்னோடிகள் ஆதரித்து எழுதுவதிலிருந்தே அதற்கு எதிர்ப்பும் முஸ்லிம் சமூகத்திற்குள் இருந்த நமக்கு விளங்குகிறது.

1930களின் இறுதி தொடங்கி இந்த முரண்கள் அதிகரிக்கத் தொடங்கின. சூத்திரர்களையும், தலித்களையும், இஸ்லாமுக்கு மதம் மாறுவது பற்றிப் பெரியார் வற்புறுத்துவது உண்மையாயின் அவரே மதம் மாற வேண்டியதுதானே என்கிற கேள்வியைச் சிலர் எழுப்பினர். அம்பேத்கர்

பவுத்தத்திற்கு மாறியபோதும் இதே போன்ற கேள்விகள் எழுந்தன. இதற்குப் பெரியார் அளித்த பதிலை நாம் அறிவோம். இந்து மதத்தை விட்டு வெளியே வந்து இன்னொரு மதத்தனாகிவிட்டால் அதை எதிர்ப்பது கடினமாகி விடும். இராமன் படத்தைச் செருப்பால் அடிப்பதற்கு பிள்ளையார் சிலைகளை உடைப்பதற்கும் உள்ளுக்குள் இருப்பதே பொருத்தம் என்பது அவரது கருத்தாக இருந்தது. எனினும் முஸ்லிம் தரப்பிலிருந்து இத்தகைய கேள்வி எழுந்ததற்கான நியாயத்தையும் நாம் மறுத்துவிட இயலாது.

முஸ்லிம் தரப்பிலிருந்தே இதற்கான பதிலும் வரத்தான் செய்தது. பெரியார் உள்ளுக்குள் ஒரு முஸ்லிமாகவே உள்ளார் எனவும் இந்து மதத்திற்குள இருந்துகொண்டே தாழ்த்தப்பட்டவர்களை மதம் மாற ஊக்குவிப்பதே அவர் திட்டம் என்கிற வடிவில் ராமநாதபுரத்தைச் சேர்ந்த பாக்தாதி சாஹிப் அளித்த பதில் 1939, ஜனவரி 10 தேதியிட்ட மெட்ராஸ் மெயிலில் வந்தது (பார்க்க: மோர், பக் 154).

காங்கிரஸிலிருந்த முஸ்லிம்களான ஹாஜி முஹம்மத் மவுலானா சாஹிப் (மதுரை) மற்றும் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராக இருந்த கே.எம். ஷெரீஃப் ஆகியோர் இதில் குறிப்பிடத்தக்கவர்கள். எந்த நம்பிக்கையும் அற்ற, எல்லா மதங்களையும் இழிவு செய்கிற சுயமரியாதை இயக்கத்தினர் காங்கிரஸ் எதிர்ப்பு நோக்கில் முஸ்லிம்களைத் தவறான வழிக்கு இட்டுச் செல்வதாக மவுலானா சாஹிப் குற்றம் சாட்டினார். (1938, ஏப்ரல் 14 தேதியிட்ட 'மெட்ராஸ் மெயில்' இதழில் இது வந்துள்ளதாக மோர் குறிப்பிடுகிறார், பக்.154).

காங்கிரஸை எதிர்த்துக் கடுமையாகப் பெரியார் இயங்கிய நேரம் அது. 1938 வாக்கில் அவர் மேற்கொண்ட இந்தி எதிர்ப்புப்போராட்டம், பின்னர் அவர் முன் வைத்து இயங்கிய 'திராவிடஸ்தான்' பிரிவினைக் கோரிக்கை ஆகியவற்றின் பின்புலத்தில் பெரியாரின் காங்கிரஸ் எதிர்ப்பு உச்சத்தில் இருந்தது. வேலூரைச் சேர்ந்த மவுலானா மவுல்வி ஷெர்வுதீர் சாஹிப் போன்றவர்கள் பெரியாருடன் இணைந்து இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் இறங்கியிருந்த சூழலில் (1938) காங்கிரஸில் இருந்த முஸ்லிம்கள் ஆத்திரப்பட்டதை நாம் விளங்கிக் கொள்ள முடிகிறது. சுயமரியாதை இயக்கத்தினர் தொடர்ந்து தமிழ் முஸ்லிம்களின் ஆதரவைப் பெற வேண்டுமானால கடவுள் மறுப்புப் பிரச்சாரத்தைக் கைவிட வேண்டும் என முஸ்லிம் லீகைச் சேர்ந்த பி. கலிபுல்லா (திருச்சி) அறிவுரைத்தது 1937 நவம்பர் 29,30 தேதிகளில் வந்த 'சுதேசமித்திரன்', 'மெட்ராஸ் மெயில்' இதழ்களில் வெளி வந்தது (பார்க்க: மோர், பக்.158).

பெரியார் திராவிட நாடு பிரிவினைக் கோரிக்கையை முன்வைத்து இயங்கிய காலத்தில் இந்த முரண் உச்சமடைந்தது. பழைய காங்கிரஸ்காரரும் தற்போது தீவிர முஸ்லிம் லீக்கினராக மாறியிருந்தவருமான தாவூத் ஷாதாம் திராவிட நாடு கோரிக்கையை ஆதரிக்க வேண்டுமானால் தனி வாக்காளர் தொகுதி, தமது மதம், மொழி பண்பாடு ஆகியவற்றைக் கடைபிடிக்கும் சுதந்திரம் ஆகியவற்றிற்கு பெரியார் உத்தரவாதமளிக்க வேண்டும் என்றார்(பார்க்க: மோர் 175, தாருல் இஸ்லாம், அக். 1947; டிச. 1947).

பெரியார் இந்த நிபந்தனைகளை ஏற்கவில்லை எனக் குறிப்பிடுகிறார் மோர் (பக்.175). தாமும் திராவிடர்களே என்கிற பழைய நிலைபாட்டைப் புறந்தள்ளிய தாவூத் ஷா இத்தகைய இனவாதக் கோரிக்கைக்கு முஸ்லிம்கள் ஆதரவளிக்க இயலாது என்றார்( பார்க்க: மோர், பக்.176, தாருல் இஸ்லாம், அக்.1948). தி.க.மு.வையும் ஆதரித்து வந்த 'முஸ்லிம்' மற்று இஷாதே இஸ்லாம்' முதலான இதழ்களையும் தாருல் இஸ்லாம் கண்டிக்கத் தவறவில்லை. 'கடவுள் இல்லை' எனப் பெரியார் சொல்லவில்லை என அவருக்கு இந்த இதழ்கள் வக்காலத்து வாங்குகின்றன எனவும் பெரியாரால்தான் தமிழ்நாட்டில் முஸ்லிம்கள் பாதுகாப்பாக இருக்கின்றனர் என இவ்விதழ்கள் சொல்வது உண்மையானால் ஈரோட்டில் முஸ்லிம்கள் கட்டாயமாக இந்து மதத்திற்கு மாற்றப்பட்டபோதும் திரு வண்ணாமலையிலும் சேலத்திலும் முஸ்லிம் சொத்துக்களும் மசூதிகளும் அழிக்கப்பட்ட போதும் அவர் என்ன செய்து கொணருந்தார் எனவும் தாருல் இஸ்லாம் காரசாரமாகக் கேள்விகளை முன் வைத்து (ஜனவரி 1949, பார்க்க: மோர்,176).

முஸ்லிம்கள் கவனமாக இல்லாவிட்டால் திருக்குறலை மதாக்கி, திருவள்ளுவரை இறைத்தூதராக ஆக்கிவிடுவார்கள் எனவும் எச்சரித்தது தாருல் இஸ்லாம். 1932லேயே இஸ்லாமை அழிப்பது என ஈ.வெ.ரா. முடிவு கட்டி, தஞ்சை மாவட்டத்தில் நடைபெற்ற (ஜுன் 17, 1932) இரண்டாவது சுயமரியாதை யாளர்களின் மாநாட்டில் இதற்கென ஒரு தீர்மானமும் இயற்றியதை அறிந்திருந்தும் ஏன் சில பத்திரிக்கையாசிரியர்கள்க பெரியாரை ஆதரிக்கின்றனர் எனத் தாருல் இஸ்லாம் கேள்வி எழுப்பியதையும் மோர் சுட்டிக் காட்டுகிறார்(பக்.176). இதற்கான ஆதாரமாக மோர் குறிப்பிடுவது: பார்க்க: 'குடி அரசு' (26,ஜுன் 1932); தாருல் இஸ்லாம் (மார்ச், 1949). தொடர்ந்து எழுதுவார் மோர்:

“எப்படியாயினும், சேலத்திற்கு அருகிலுள்ள ஆத்தூரில் இருந்து வெளிவந்த தி.க ஆதரவு இதழான ‘இஷாதே இஸ்லாம்’ இதழினர் மேற்குறித்த 1932ம் ஆண்டு தீர்மானத்தை ரத்து செய்ய வேண்டும் என 1946ல் கேட்டுக் கொண்ட பின்னுங்கூட ராமசாமியும் (அவரது) இயக்கமும் அதை ரத்து செய்யவில்லை”(பக்.176).

மோர் இதற்காகக் குறிப்பிடும் ஆதாரம் சற்று முன் குறிப்பிட்ட தாருல் இஸ்லாம் இதழ் மட்டுமே. தாருல் இஸ்லாமின் கருத்தாக இல்லாமல் தன்னுடைய கருத்தாகவும் இதை அவர் வைக்கிறார்.

திருக்குறல், தொல்காப்பியம் முதலான பழம் இலக்கியங்களில் கண்டுள்ளது போல திராவிட நாட்டில் கடவுளுக்கும் மதத்திற்கும் இடமில்லை என்று 1949 ஏப்ரல் 5தேதியிட்ட ‘விடுதலை’யில் பெரியார் எழுதியதை வைத்துக் கொண்டு திராவிட நாடு பிரிந்தால் அதன் அரசியல் சட்டம் குறளையும் தொல்காப்பியத்தையுமே அடிப்படையாகக் கொண்டிருக்கும் எனவும் அல்லாஹ்விற்கும் குர்ஆனுக்கும் அங்கு இடமிருக்காது எனவுடம் தொடர்ந்து கடுமையாகத் தாக்கி எழுதி வந்தது. தாருல் இஸ்லாம். (பார்க்க: மோர்,177; தாருல் இஸ்லாம், மே1949, ஆக. 1949, ஜுன் 1952).

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத் முஹம்மத் இஸ்மாயில் அவர்களும் கூட கடவுளை மறுக்கும் அண்ணாத்துரை போன்றோரை மிலாது நபி விழாக்களுக்குச் செலவு செய்து அளிப்பதைக் கண்டித்ததும் கூட தார்-உல்-இஸ்லாம் இதழில் வெளிப்பட்டது (ஜன.1951, மோர் பக்.177).

இக்காலகட்டத்தில் பல முஸ்லிம் இதழ்கள் தமிழில் வெளி வந்தன. ஆனால் இவற்றில் ‘முஸ்லிம்’ (காயிதே மில்லம் அவர்களின் சகோதரர் கே.டி.எம். அஹமத் இப்ரஹீம் அவர்களால் நடத்தப்பட்டது), இஷாதே இஸ்லாம்’ ‘முஸ்லிம் முரசு’ ஆகிய இதழ்கள் தவிர பிற அனைத்தும் தி.க.தி.மு.க ஆகியவற்றுக்கு எதிராகவே இருந்ததை மோர் சுட்டிக் காட்டுகிறார் (பக்.179). காரைக்காலிலிருந்து வெளிவந்த ‘சாந்தி விகடன்’ முஸ்லிம் லீக் ஆதரவு இதழான ‘பிறை’ முதலியனவும் பெரியாரையும், அண்ணா முதலான தி.மு.க. தலைவர்களையும் விமர்சித்து வந்தது. ‘பர்தா’ முறை குறித்து அண்ணா ‘திராவிட நாட்டில்’ 1959, பிப்.15) எழுதியதையும் பெண்களுடனான தமது தொடர்பு குறித்து காஞ்சிபுரம் மாநாட்டில் (மார்ச் 29, 1960) அவர் கூறியதையும் இவை விமர்சித்ததில் வியப்பில்லை.

முஸ்லிம் இதழ்கள் மேற்கொண்ட இத்தகைய தொடர் பிரச்சாரங்களின் விளைவாக திராவிடர் கழகத்தை ஆதரித்த முஸ்லிம்கள் பல்வேறு இடங்களில் முஸ்லிம் சமூகங்களால் சமூக விலக்கு செய்யப்பட்ட நேர்ந்தது. இஸ்லாமியப் பெயர்களால அவர்கள் அழைக்கப்படுவது தவிர்க்கப்பட்டது. மனைவியர் விவாகரத்து செய்தனர். தஞ்சை மாவட்டம் அய்யம்பேட்டை போன்ற இடங்ளில் தி.க ஆதரவு முஸ்லிம்கள் வன்முறைக்கு ஆளாயினர். மதார்ஷா, ஹாஜா மொஹிதீன் ஆகிய இருவரும் அபராதம் விதிக்கப்பட்டு பத்து முறை செருப்பால் அடிக்கப்பட்டனர் (விடுதலை’ அக். 3, 1952).

இதன் விளைவாக தி.க. ஆதரவு முஸ்லிம்களைத் துன்புறுத்தும் தி.க அல்லாத முஸ்லிம்களை ‘விடுதலை’ இதழ் எச்சரிக்க நேரிட்டது(ஜூலை 31,1953). போராட்டம் நடத்தப்படும் எனவும் முதற்கட்டமாக முஸ்லிம் மசூதிகளை நோக்கி ஊர்வலங்களில் விடப்படும் என அறிவிக்கப்பட்டது என்கிறார் மோர். இதற்கான ஆதாரமாக ‘முஸ்லிம் முரசு’ ஜூலை 1953 இதழ் சுட்டிக்காட்டப்படுகிறது.

இப்படியான ஒரு சூழல் உருவானதற்குச் சில காரணங்களைச் சுட்டுகிறார் ஜே.பி. பி.மோர். 1940களில் பெரியாரின் செயற்பாடுகள்க அனைத்தும் திராவிட நாடு பிரிவினையை மய்யமாகக் கொண்டே அமைந்தன. இக்காலகட்டத்தில் அவரது ஒரே குறிக்கோள் திராவிட நாட்டுப் பிரிவினையாக மட்டுமே இருந்தது. இந்தியா சுதந்திரமடையும்போது பாகிஸ்தானப் போல திராவிடஸ்தானையும் பிரித்துவிட வேண்டும் என்பதில் அவர் முனைப்பாக இருந்ததை மோர் மிகச் சரியாகவே அடையாளம் காட்டுகிறார். அதற்காக அவர் யாருடைய உதவியையும் பெறத் தயாராக இருந்தார்.சேலத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் (ஜூன் 23, 1947)

“திராவிட நாடு பிரிவினைக்கு நான் நமது திராவிடத் தோழர்களின் ஒத்துழைப்பை மட்டும் நம்பியிருக்கவில்லை. யான் கூறப் போவதைப் பற்றிப் பலருக்கும் பிடிக்காது. ஆனால் மனதில் கொண்டுள்ளதைக் கூறிவிடுகிறேன். திராவிட நாடு பிரிவினைக்கு தோழர் ஆச்சாரியருடைய (ராஜாஜி–அ.மா) ஒத்துழைப்பும் விரைவில் வரப்போகிறது” எனக் கூறினார் (விடுதலை, ஜூன் 26,1947). இதனை எஸ்.வி.ஆர். தனது ‘பெரியார்: ஆகஸ்டு 15’ நூலில் மேற்கோள் காட்டியிருந்தார் (பக்.15), வடநாட்டு ஆதிக்கத்தில் ராஜாஜியும் வெறுப்புற்றுள்ளதாக பெரியார் நம்பினார். ராஜாஜி மட்டுமல்ல எல்லாப் பார்ப்பனர்களும் பிரிவினைக் கோரிக்யை ஆதரிக்கப் போவதாகப் பெரியார்

அப்பேச்சில் குறிப்பிட்டுள்ளதை மோர் சுட்டிக்காட்டுகிறார்(பக்.162). ராஜகோபாலாச்சாரியின் வார்த்தைகளை நம்பக்கூடாது எனச் சிலர் சொல்லக்கூடும். ஆனால் இன்றுவரை எனக்கு அளித்த வாக்குகளை அவர் நிறைவேற்றியே வந்துள்ளார் எனவும் பெரியார் கூறியுள்ளதை ஏனோ எஸ்.வி.ஆர். ‘எடிட்’ செய்துவிட்டார்.

திராவிட நாட்டு ஆதரவிற்காக மகாராஷ்டிரம் சென்ற பெரியார் அங்கே அம்பேத்கர், எம்.என் ராய் ஆகியோரை மட்டுமின்றி ஆர்.எஸ்.எஸ். நிறுவனர்களில் ஒருவரான டாக்டர் மூஞ்சேயையும் சந்தித்து வந்தது குறிப்பிடத்தக்கது(‘குடி அரசு’, அக்டோபர் 7,1944).

“ஐக்கிய மாகாண டாக்டர் மூஞ்சே அவர்கள் திராவிடர் கழகத்தின் சமயம், சமுதாயம் ஆகியவை சம்பந்தமான எல்லாத் தீர்மானங்களையும் ஏற்றுக்கொள்வதாகவும் வேண்டுமானால் இந்து மகாசபை மாநாட்டில் வைத்து ஏற்றுக் கொள்ளச் செய்வதாகவும் இந்தியா பூராவும் திராவிடர் கழகம் வேலை செய்யதாம் ஒத்துழைப்பதாகவும் கூறி இருக்கிறதும் குறிப்பிடத்தக்கதாகும்” என்று பெரியார் எழுதுவது நமக்கு மிக்க வியப்பளிக்கிறது. பெரியாரின் அரசியல் கூர்மை குறித்த ஒரு அய்யம் ஏற்படுத்தத்தக்கதாக இச்சம்பவம் அமைகிறது.

நிற்க. மோரின் கருத்துக்களுக்குத் திரும்புவோம். கொள்கை யளவிலும் இக்காலகட்டத்தில் பெரியார் சில அம்சங்களில் நீர்த்துப் போக நேர்ந்தது எனக் கூறும் மோர் அதற்காதாரமாக இதுநாள் வரை கடவுள் மறுப்புக் கொள்கை பேசி வந்த பெரியார் திடீரென திராவிட மதம் குறித்துப் பேசத் தொடங்கியதைச் சுட்டிக் காட்டுகிறார்.(பக்.164) இது புத்தருக்கும், முஹம்மதுக்கும், ஏசுவுக்கும், ஆரியர் கடவுளர்களான கிருஷ்ணனுக்கும், இராமனுக்கும் முற்பட்டது என்றும் பெரியார் குறிப்பிட்டார். ஒரே கடவுள், உருவமற்ற வழிபாடு சாந்தி, ஒற்றுமை, பரஸ்பர பணிவு, பக்தி, உடன்பிறப்பு என்ற இஸ்லாமியக் கருத்தாக்கங்களுடன் திராவிட மதத்தை இணைத்தார் (பார்க்க: மோர் 164, ‘குடிஅரசு’ மார்ச் 27, 1947) ஆனைமுத்து தொகுப்பு, பக்.34).

இஸ்லாமிய மதமே திராவிடத்திலிருந்து வந்ததுதான் என்கிற அளவிற்கு பேசத் தொடங்கினார் பெரியார்: “இஸ்லாமியர்கள் திராவிடர்களின் பழங்காலத் தத்துவத்தைத்தான் பின்பற்றுகிறார்கள். திராவிட மதத்துக்கு அரபு வார்த்தைதான் இஸ்லாம் என்பது. ஆரியம் இந்நாட்டில் புகுத்தப்பட்டபோது அதை எதிர்த்த மதக் கொள்கையை இஸ்லாம் என்கிற பெயரால் மக்கள் மனதிலே பதியச் செய்தவர் முஹமது நபி அவர்கள்” என்றவர் கூறியது

(‘விடுதலை’, ஜூலை 15, 1947 முஸ்லிம்கள் மத்தியில் அச்சத்தை உருவாக்கியிருக்க வேண்டும். திராவிடர் தான் உருவாகிற போது ஒன்றே குலம் ஒருவனே தெய்வம் என்கிற பழைய தமிழ்க் கொள்கை நிலைநிறுத்தப்படும் எனவும் இஸ்லாம் அத்துடன் இணைந்து விடும் எனவும் பெரியார் அதே தலையங்கத்தில் எழுதியிருந்தார். தமது மதத்தையும், ஏக இறைவனையும் இப்படி வேறொரு மதத்துடன், அதுவும் யூத-கிறித்தவ- இஸ்லாமிய மரபில் இருந்து வேறுபட்ட ஒன்றுடன் ஒப்பிட்ட தமிழ் முஸ்லிம்கள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியது என்கிறார் மோர். முஸ்லிம் அடையாளத்தையே மறுக்கும் ஒரு நிலையாகவும் இதனை அவர்கள்க காண நேரிட்டது.

1947 ஏப்ரல் 17 தேதியிட்ட ‘விடுதலை’த் தலையங்கத்தில் திராவிட அரசில் எந்த ஒரு மதம் அல்லது தனி மனிதருக்கும் சிறப்புரிமைகள் அளிக்கப்படமாட்டாது எனப் பெரியார் எழுதியதையும் மோர் சுட்டிக் காட்டுகிறார். திராவிடஸ்தான் கோரிக்கைக்கு ஜின்னாவின் ஆதரவு இல்லாமற்போனதால் மிகவும் ஏமாற்றமும் அதிருப்தியும் உற்றிருந்த பெரியார் தமிழ்நாட்டு முஸ்லிம்களாவது தன்னை ஆதரிக்க வேண்டும் என எதிர்பார்த்தார். காயிதே மில்லத் முஹம்மது இஸ்மாயில் அவர்கள் காங்கிரஸ் சார்பு எடுத்ததை அவர் கடுமையாகக் கண்டித்தார். தமிழ்நாட்டு முஸ்லிம்கள் தன்னுடன் இணைய வேண்டும் என வற்புறுத்தினார். அகில இந்திய முஸ்லிம் லீக் கூட்டத்தில் இதற்கான முடிவெடுக்கப்படும் என இஸ்மாயில் கூறியதைக் கண்டித்தார் (‘விடுதலை’, அக்.24,1947).

முஸ்லிம் –திராவிடர் கழக முரண்பாடுகள் 1940களில் உச்சமடைந்து பற்றி மோர் குறிப்பிடக்கூடிய இக்காரணங்கள் முக்கியமானவையே. எப்படியேனும் திராவிட நாட்டைப் பெற்றுவிட வேண்டும் என்கிற துடிப்பில் இங்குள்ள முஸ்லிம்களின் சிக்கல்களைப் பெரியார் முழுமையாகப் புரிந்துபெபள்ளத் தவறிவிட்டார் என்றே சொல்ல வேண்டும்.

ஜின்னாவைப் பொருத்தமட்டில் பாகிஸ்தான் பிரிவினையே அவரது லட்சியமாக இருந்தது. தென்னிந்திய முஸ்லிம்களை அவரது பாகிஸ்தானில் இணைப்பது புவியியல் ரீதியில் சாத்தியமற்ற ஒன்றாக இருந்தது. பாகிஸ்தான் பிரிவினைக்காக அவர் மீதமுள்ள இந்திய முஸ்லிம்களைப் பலியிடவும் தயங்கவில்லை என்றொரு குற்றச்சாட்டு கூட அவர் மீது உண்டு. இந்நிலையில் அவர் திராவிடஸ்தான் கோரிக்கையை ஆதரிப்பார் என எதிர்பார்த்தது பெரியாரின் பிழையே.

பிரிவினைக்குப் பிந்திய இந்தியாவில் முஸ்லிம்களின் நிலை குறித்து நான்வேறு பல சந்தர்ப்பங்களில் எழுதியுள்ளேன். நாட்டுப் பிரிவினைக்குக் காரணமாக அவர்கள் குற்றம் சாட்டப்பட்டனர். இந்திய தேசத்தின் மீது விசுவாசத்தை நிறுவும் பொறுப்பு அவர்களின் தலைமீது சுமத்தப்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சியில் அவர்கள் பெற்றிருந்த உரிமைகளெல்லாம் மறுக்கப்பட்டன. இந்தியாவின் துணைப்பிரதமராகவும், உள்துறை அமைச்சராகவுமிருந்த வல்லபாய் படேல் முஸ்லிம்களைப் பிணைக் கைதிளாகவே கருதினார் என வரலாற்று ஆசிரியர் சர்வ பள்ளி கோபால் அவர்கள் குறிப்பிடுவது இங்கே நினைவு கூரத்தக்கது. ஒரே நம்பிக்கையாக இருந்த மகாத்மா காந்தியும் இந்து வெறியர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

முக்கிய தலைவர்களெல்லாம் பாகிஸ்தானைத் தேர்வு செய்து சென்ற பின் இந்திய முஸ்லிம் லீகின் தலைமை காயிதே மில்லத் அவர்களிடம் அளிக்கப்பட்டது. காந்தி உட்பட இங்குள்ள தலைவர்கள் அத்தனை பேரும் முஸ்லிம் லீகைக் கலைத்துவிட்டு தத்தம் கட்சிகளில் சேரவேண்டும் என நிர்ப்பந்தித்தபோது காயிதே மில்லத் அவர்கள் அப்பொறுப்பை ஏற்று இந்திய முஸ்லிம்களின் அரசியல் அடையாளத்தைத் தக்க வைத்தார். எனினும் வடநாட்டு முஸ்லிம்கள் அவரது தலைமைய முழுமையாக ஏற்காததால் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஒரு சென்னை மாகாண அமைப்பாகவே கருதப்பட்டது.

தேர்தலில் பங்கு பெறுவது என்கிற நிலைபாட்டை முகமது இஸ்மாயில் அவர்கள் எடுத்த போது தேர்தல் அரசியலிலிருந்து விலகியிருந்த திராவிடர் கழகத்தைக் காட்டிலும் காங்கிரசுடன் இணைந்து செயல்படுவது முஸ்லிம்களுக்குத தேவையாயிற்று.

இதைப் பெரியாரால் ஏற்க முடியவில்லை.

அப்படியானால் பெரியாருக்கும் முஸ்லிம்களுக்குமான உறவில் ஏதேனும் காலகட்ட அடையாளம் (ஜீமீகூஷீவீஷீபீவீணீவீஷீஸீ) சாத்தியமா? 1925லிருந்து 1944 வரை முஸ்லிம்களை முழுமையாக ஆதரித்தார். 1944 தொடங்கி முஸ்லிம்களை விமர்சிக்கத் தொடங்கினார் என்பது போல காலப் பிரிவினை செய்ய இயலுமா? இயலாது.

மதம் குறித்த அவரது பார்வையும் இஸ்லாம் குறித்த அவரது அணுகல் முறையும் தொடக்கம் முதலாகவே விமர்சனங்கள் நிறைந்ததாகவே உள்ளது.

இறுக்கமான இறை நம்பிக்கையுள்ள குடும்பத்தில் பிறந்த பெரியார் சுயமரியாதை இயக்கம் தொடங்கப்பட்ட சில காலம் வரையிலும் கூட நம்பிக்கையாளராகவே இருந்தார். (பார்க்க: ந.க மங்கள முருகேசன், சுயமரியாதை இயக்கம் பக். 209-218). பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பு, அவர்களின் சடங்கு மேலாண்மையை மறுத்தல் என்பனவே சுயமரியாதையின் பிரதான அடையாளங்க ளாயிருந்தன. முதல் மனைவி நாகம்மாள் இறப்பின்போது 'தங்கள் குல வைஷ்ணவ சம்பிரதாயப்படி வேண்டிய கிரியையெல்லாம் பார்ப்பனரல்லாத பாகவதர்களைக் கொண்டு சகோதரரோடு கூடவே இருந்து' அவர் நடத்தியது பற்றிய குறிப்பு 'குடிஅரசி'ல் வந்துள்ளது (பிப்ரவரி 12, 1927).

'குடி அரசு' ஏட்டின் முதல் இதழில், இப்பெரு முயற்சியில் இறங்கியுள்ள எமக்கும போதிய அறிவையும், ஆற்றலையும் எல்லாம் வல்ல இறைவன் தந்தருள் பாலிப்பானாக" என இறையருளை வேண்டியுள்ளார் ('குடி அரசு', மே 2, 1925). தொடக்கக் கால சுயமரியாதைத் திருமணங்களில் மணமக்களை வாழ்த்தும் போது இறைவனையும் எல்லாம் வல்ல சக்தியையும் வணங்கி யுள்ளார்.(குடி அரசு'ஜூன் 3, 1928). வ.வே.சு. அய்யர் முதலானோருக்கான இரங்கக் குறிப்புகளிலும்'எல்லாம் ஆண்டவன் செயல்' 'இறைவன் திருவடி எய்துதல்' முதலான சொற் பிரயோகங்களைக் காணலாம் ('குடி அரசு', ஜூன் 7, 1925; ஜூலை 4, 1926).

சுயமரியாதை இயக்கத்தில் நாத்திகம் ஒரு நிபந்தனையாக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனினும் இவற்றினூடாகவே சடங்கு சம்பிரதாயங்கள், தேர்த்திருவிழாக்கள் முதலியன குறித்து 'இவை வீண்' என்கிற கருத்தாக்கமும் அவரிடம் வளர்ந்தது. திருவாரூர் தியாகராசப் பெருமானின் தேர் தீக்கிரையாகியதை நல்ல சேதி எனக் குடி அரசில் எழுதினார்(ஜூலை 13, 1926)

1927 தொடங்கி கடுமையான இந்து மத எதிர்ப்பு அவரது எழுத்துக்களிலும் பிரச்சாரங்களிலும் வெளிப்பட்டது. 1928க்குப் பின்னர் இறைமறுப்பு, நாத்திகம் ஆகிய கொள்கைகளும் 1930க்குப் பின்னர் எல்லா மதங்களும் ஒழிக்கப்பட வேண்டும் என்கிற கருத்தும் அவரிடம் உருவாயிற்று. அவரிடம் உருவான அந்தக் கருத்துக்கள் சுயமரியாதை இயக்கச் செயற்பாடுகளில் வெளிப்பட்டது. 1931ம் ஆண்டு விருதுநகரில் நடைபெற்ற மூன்றாவது மாகாண மாநாட்டில் அவரது புகழ்பெற்ற 'எல்லா மதங்களும் ஒழிய வேண்டும்' என்கிற மத ஒழிப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1929தொடங்கி மதமாற்றம் குறித்து அவர் பேச முற்பட்டார். மதமாற்றம் என்கிற முடிவுக்கு வந்த பின்பு எந்த மதத்திற்கு மாறுவது என்கிற கேள்வி எழுந்தபோது அவரது ஆர்வம் இஸ்லாம் பக்கம் திரும்பியது. 1919 ஆகஸ்டு 18 அன்று சத்தியமங்கலத்தில் நடைபெற்ற ‘முகமது’ பிறந்தநாள் விழாவில் அவர் ஆற்றிய உரை ஆகஸ்டு 25 குடி அரசில் விரிவாக வெளிவந்தது. திருநெல்வேலி மாவட்டம் சீலையம்பட்டி மதமாற்றத்தை ஆதரித்து ‘கும்பல் கும்பலாக’ மதம் மாறவேண்டும் என்கிற அவரது ஈரோட்டுப் பேச்சு அக்டோபர் 20, 1929’ குடி அரசு’ இதழில் வெளிவந்தது. தொடர்ந்து ‘முகமதிய மதத்தின்’ சிறப்புகளை அவர் விதந்து கூறலானார். (‘முகமதிய மதம்’ என்கிற கருத்தாக்கத்தை முஸ்லிம்கள் ஏற்பதில்லை. எனினும் அக்கால வழக்குப்படி பெரியார் முகமதிய மதம், முகமதியர்கள் என்கிற சொல்லாக்கங்களை மிகுதியாகப் பயன்படுத்துகிறார்.)

பெரியாரது தொகுப்புகள் எதை எடுத்துப் பார்த்தாலும் கடவுள் மறுப்பு, மதஒழிப்பு குறித்து ஏராளமான கட்டுரைகளைக் காணலாம். மதம் மூட நம்பிக்கைகளை உருவாக்குகிறது என்பதும் சமூக அமைதிக்கு எதிரானது என்பதும் அவரது உறுதியான கருத்தாக இருந்தது. ‘மதமும் கடவுளும் மனிதனை முட்டாளாக்கும் கருவிகள்’ என்பதை விளக்கியும், மதவெறி குறித்தும், விருதுநகர் மாநாட்டு மத ஒழிப்புத் தீர்மானத்தை விளக்கியும் அவர் எழுதியுள்ள ஏராளமான கட்டுரைகளை ஆனைமுத்து (தொகுதி3) மற்றும் கி.வீரமணி(தொகுதிகள் 3,4) தொகுப்புகளில் காண்க.

மதங்களை ஒழிக்க வேண்டும் என்று கூறிக்கொண்டே இஸ்லாம் மற்றும் பவுத்த மதங்களை மட்டும் சுயமரியாதைக் காரர்கள் எப்படி ஆதரிக்கலாம் என்கிற கேள்வி எழுந்தபோது அத்தகைய கேள்விகளை எழுப்பியவர்களை தெளிவற்றவர்கள் எனவும் ஆத்திரத்தால் அறிவிழுந்தவர்கள் எனவும் சாடிய பெரியார் மதம் குறித்த தனது கருத்தை சுருக்கமாகவும் அவருக்கே உரித்தான தெளிவுடனும், “மதம் என்பது மனிதனின் உலக வாழ்க்கை¬யின் நடப்பிற்கு ஒரு வழிகாட்டியான கொள்கையைக் கொண்டது. அது நம்மைப் போல ஒரு மனிதனால் ஏற்படுத்தப்பட்டது. அது, கால தேச வர்த்தமானப்படி மக்கள் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் இடம் தரக்கூடியது” என்றார் (‘குடி அரசு’, ஆக. 2,1931, பார்க்க: பெரியார் களஞ்சியம் (பெ.க.), தொகுதி 4,பக்.4).

மதம் குறித்த அவரது பார்வை இவ்வாறு நான்கு அம்சங்கள் கொண்டதாக இருந்தது. அவை:

1. கொள்கை அளவில் எப்படி இருந்ததென்றாலும் நடைமுறை வாழ்வுக்கு அது எத்தகைய பயனளிக்கக் கூடியதாக உள்ளது என்பதே முக்கியம். மதம் குறித்து அவர் பேச வருகிறபோதெல்லாம் ‘பிரத்தியட்சம்’ என்கிற சொல்லைப் பலமுறை பிரயோகித்துள்ளார். பிரத்தியட்சத்தில் எப்படி உள்ளது. ண்டாமையைக் கடைபிடிக்கிறதா, சகோதரத்துவத்தைப் பாராட்டுகிறதா என்றவாறு, ‘மதம் ஆத்மார்த்தத்திற்கு ஏற்பட்டது. அது கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள சம்பந்தத்தை விளக்குவது என்பதை அவர் மறுத்தார்.

2. மதத்தைப் படைத்தது மனிதனே. இறைவனே அற்புதங்களோ அல்ல. ‘அருளப்பட்ட மதம்’ என்கிற யூதேய-கிறித்தவ-இஸ்லாமியக் கருத்தாக்கத்தை அவர் ஏற்பதில்லை. நால்வேதங்கள், புராணம், கீதாச்சாரியன் முதலிய கருத்தாக்கங் களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

3. மதம் காலச்சூழல்களுக்குத் தக்க மாற்றக்கூடியது.

4. மதம் பகுத்தறிவுக்குட்பட்டதே. பகுத்தறிவுக்கு ஒவ்வாதவற்றை மதத்தின் பெயரால் ஏற்க இயலாது.

தொடர்ந்து இவற்றை அவர் பலமுறை வற்புறுத்தி வந்தார்,, இஸ்லாம் குறித்த அவரது வரவேற்பும் இந்த அடிப்படை களிலேயே அமைந்தன. முஸ்லிம் மதம் என்பது அல்லாஹ்வால் அருளப்பட்டது என்பதாகவன்றி ‘திரு. முகம்மது நபி’ அவர்களால் உருவாக்கப்பட்டது என்பதே அவரது கருத்தாக இருந்தது. நபிகளைப் பிற மதங்களைப் போல அவதாரமாகவன்றி சாதாரண மனிதராக, ‘தாயும் தகப்பனும் கூடிக்கருத்தரித்துப் பிறந்த பிள்ளை’யாக இஸ்லாம் கருதுவது அவரை மிகவும் ஈர்த்தது.

‘இறுதி இறைத்தூதர்’ என்கிற இஸ்லாமியக் கருத்தாக் கத்தைப் பெரியார் ஏற்றுக்கொண்டது பற்றி முன்பே குறிப்பிட்டுள்ளேன். அதற்கான அவரது விளக்கமும் கூட நடைமுறை சார்ந்ததாகவும் சுயமரியாதைக்குப் பொருத்த மானதாகவுமே இருந்தது.

“மேலும், முகமதிய மதம் மிக்க சுயமரியாதை உணர்ச்சி உடையது என்றும் சொல்லுவோம். எப்படி என்றால், அது இனி உலகத்திற்குக் கடவுள் அவதாரங்ளோ, நபிமார்களோ, தீர்க்கதரிசிகளோ வரக்கூடும் என்பதை ஒருக்காலும் ஒப்புக் கொள்வதில்லை. மனிதனை மனிதன் வணங்குவதையோ அவன் காலில் விழுவதையோ அது சிறிதும் சம்மதிப்பதில்லை”(குடி அரசு’ ஆக.

25, 1929, பார்க்க : பெ.சி., 3. 172)என இடைத்தரகர்கள், மகான்கள் ஆகியோர் இஸ்லாத்தில் சாத்தியமில்லாமல் ஆக்கப்பட்டதை அவர் அடையாளம் காண்பர்.

இந்து மதத்தைப் போலன்றி இஸ்லாம் காலச் சூழலுக்கு ஏற்ப சீர்திருத்தத்திற்கு சாத்தியமுள்ளது என்றும் பெரியார் நம்பினார். அன்றைய துருக்கி (கமால் பாஷா), ஆப்கானிஸ்தான், எகிப்து ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களை அவர் அடிக்கடி சுட்டிக் காட்டுவது குறிப்பிடத்தக்கது. ('குடி அரசு' ஆக. 23, 1931; ஆக.2, 1931; நவம்பர் 17, 1935).கமால் பாஷாவின் சீர்திருத்தங்களை அவர் மிகவும் வியந்தார்.

"இஸ்லாம் மார்க்கம் பகுத்தறிவு மார்க்கமென்றும், பகுத்தறிவின் பரீட்சைக்கு விட்டு அதன்படி நடக்கத் தயார் என்றும் முஸ்லிம்கள் இன்று தைரியமாய்ச் சொல்லுகின்றார்கள். அந்தப்படிச் சொல்ல மற்ற மதக்காரர்களுக்கு ஏன் தைரியமில்லை? ஏனெனில், திரு. முகம்மது நபி கொள்கைகள் ஆனதனாலும், அநேக விஷயங்களில் அது பகுத்தறிவுக்கு நிற்கத்தக்க யோக்கியதையுடைய தாய் இருக்கின்றது"

('குடி அரசு' ஆக. 23, 1931).

"அவர் (முகமது நபிகள்–அ.மா) சொன்னவற்றிலேயே இது மிகவும் முக்கியமாய் கவனத்தில் வைக்க வேண்டிய காரியமாகும். என்ன அவர் சொல்லுகிறார்? நான் என்ன சொல்லியிருந்தாலும் அவற்றில் உனக்குச் சம்மதமிருந்தால் நீ உன் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து பார்' என்பதாகச் சொல்லியிருக்கிறார்" (டிசம்பர் 20, 1953ல் சென்னையில் பேசியது, பார்க்க : பெ.சி. 4.202) என்பன பெரியாரின் கூற்றுகள். பஞ்சா கொண்டாட்டம், அல்லாசாமி பண்டிகை, சமாதி வணக்கம் முதலான' மூடநம்பிக்கைகளை' அவர் இந்த நோக்கிலேயே வெறுத்தார்.

"ஆகவே முஸ்லிம் பகுத்தறிவுக்கு விரோதமாய் ஏதாவது இருந்தால், அது தங்களது கட்டளை அல்ல என்று தள்ளிவிடவும், அவற்றை நீக்கிவிடவும், பகுத்தறிவுக்காரரையெல்லாம் தங்கள் சகோதரர்கள் என்றும், இஸ்லாம் என்று சொல்லவும் தயாராக இருக்க வேண்டும்... உலகமெல்லாம் ஒரே மார்க்கமாவதற்கு –பகுத்தறிவு மார்க்கமாவதற்கு முஸ்லிம்கள் பாடுபடவேண்டும். அவர்களுக்கே அதிக சவுகரியமிருக்கிறது. ஆதலால் அதுவே நபி அவர்களுக்கு நாம் செய்யும் மரியாதையாகும்" ('குடிஅரசு', ஆகஸ்டு 23, 1931) என்பதே அவரது நபிகளின்க பிறந்தநாள் செய்தியாக இருந்தது. மதங்கள்

பகுத்தறிவுக்கு விரோதமானவையாக இருந்தபோதிலும் மதங்களை ஏதேனும் பகுத்தறிவு மயமாக்க முடியுமெனில் முஸ்லிம்களுக்கே' அதிக சவுகரியமிருக்கிறது' எனவும் அவர் நம்பினார்.

பிரத்யட்சத்தில் முஸ்லிம் மதத்தின் சிறப்புக்கள் என்கிறபோது சாதியையும் தீண்டாமையையும் ஒழித்து சகோதரத்துவத்தை நிலை நாட்டும் அதன் சிறப்பை அவர் பலப்பல இடங்களில் சுட்டிக்காட்டுகிறார். அது சண்டாளர்களையும் ரட்சிக்கும் மதம்; வீரத்தையும் ஆண்மையையும் (ஒடுக்கப்பட்ட மக்களுக்கு–அ.மா) அளிக்கும் மதம் ('குடிஅரசு' ஆக.25, 1929). "ஒரு மனிதன் தான் மாலை 5 மணிக்கு இஸ்லாம் கொள்கையை ஏற்றுக்கொண்டதாய்ச் சொல்லி, 5,30 மணிக்குத் 'தீண்டாதவன் என்கின்ற இழிவிலிருந்து மீண்டு, தெருவில் நடக்க உரிமை பெற்று" மனிதனாக முடியும் என ('குடிஅரசு', ஆக.2, 1931) ரொம்பவும் கூஷீஷீனீணீஸீtவீமீ ஆகச் சிலாகித்தார். முஸ்லிம் மதத்தில் பெண்களுக்கு உரிமை இல்லை என்பதே நம்மில் பலருடைய எண்ணம். ஆனால் பெரியாரோ,

"முகமதிய மதத்தில் பெண்களுக்கு உரிமை இருக்கின்றது.அதாவது பெண்களுக்குச் சொத்துரிமை உண்டு, விதவை விவாகம் உண்டு, கணவனும் மனைவியும் ஒத்துக் கொள்ளாவிட்டால் விலகிக் கொள்ள சுதந்திரம் உண்டு"

('குடி அரசு', ஆக. 25, 1929) எனச் சுட்டிக்காட்டினார். கோஷா முறை பற்றி விமர்சனங்கள் இருந்த போதும் அதுவும் கூட படிப்படியாக விலகி வருவதையும் துருக்கி, ஆப்கானிஸ்தான் நாடுகளில் முஸ்லிம் பெண்கள் வேலைக்கும், வெளிநாடுகளுக்கும் செல்வதையும், ஹைதராபாத் நிஜாம் தம் புத்ரிகளுடன் தாராளமாய் பொது அரங்கில் உலா வருவதையும் அதே உரையில் அவர் கவனம் ஈர்த்தார்.

வருமானத்தில் ஒரு பகுதியைக் கட்டாயமாக ஏழைகளு க்குச் செலவிடுவது (சக்காத்), விக்கரக ஆராதனையை மறுப்பது, சத்தான உணவு வகைகளைச் சாப்பிடுகிற வகையில் மற்ற மதங்களைவிட மிக்க நாகரீகம் கொண்டதாக இருப்பது ஆகியன இஸ்லாத்தில் அவர் வரவேற்ற இதர அம்சங்கள் (பெ.சி.4.196-202,4.3-14).

ஹஜ் யாத்திரையையும் கூட அவர் ஆதரிக்கவே செய்தார். அதற்கான அவரது விளக்கம் பகுத்தறிவு சார்ந்ததாக மட்டுமின்றி அறம் சார்ந்ததாகவும் இருந்தது. இதுகுறித்து.

“மவுல்வி அப்துல் அமீது சாயபு பாகவி அவர்களைக் கேட்டேன. முஸ்லிம்கள் மக்காவுக்குப் போவதில், செல்வத்திலம் சரீர திடத்திலும் தகுதியுள்ளவர்கள் தான் போகவேண்டுமென்று இருக்கின்றதே தவிர, எல்லோரும் போய்த் தீரவேண்டுமென்று இல்லையென்றும், அந்த இடம் முகம்மது நபி அவர்கள் பிரத்தியட்சத்தில் பிறந்த இடம் என்பதற்காக அங்கு போவது என்பது தவிர வேறு அற்புதமில்லை என்றும், அறிவு வளர்ச்சிக்கும், மற்றமக்கள் நடை, உடை, நாகரீகம் பார்த்து வரவும் பயன்படும்படியான ஒரு யாத்திரை என்றும், கொலை, களவு, கொள்ளை நடத்தினபாபம் தீர்ந்துவிடும் என்று சொல்வது தப்பு என்றும் அந்த மாதிரி எண்ணத்துடன் யாரும் சொல்வதில்லை என்றும் சொன்னார்”

(‘குடிஅரசு’, ஆக. 9, 1931)

என்று விளக்கினார். புனித ஹஜ் என்பது நபிகள் பிறந்த காலத்திற்குச் சென்று வருதல் என்பதிலும் வேறான பல அர்த்தங்களை உடையது என்கிற அளவிற்குப் பெரியார் இஸ்லாம் குறித்து அறிந்திராத போதிலும் ‘பிரத்தியட்சம்’சார்ந்த ஒரு விளக்கத்தை அதற்கு அளித்தார். பிறமதங்களில் யாத்திரை என்பது பாவங்களை ஒழிப்பதற்காக மேற்கொள்ளப்படுவது. எல்லாப் பாவங்களையும் செய்துவிட்டுப் புண்ணிய தீர்த்தமாடினால் பாவங்கள் நீங்கிவிடும் என்பது இந்து மத நம்பிக. அறம் சார்ந்த வாழ்வொன்றின் மூலமாகவே நல்ல கதி அடைதல் என்கிற புரிதல் உள்ள இஸ்லாத்தில் யாத்திரைக்கு அந்தப் பொருள் இல்லை என்பதைப் பெரியாரால் அடையாளம் காண முடிந்தது.

இவை யாவும் ஏதோ முஸ்லிம்களின் ஆதரவைப் பெறுவதற்காகச் சொல்லப்பட்டவை அன்று. ஏனெனில் இதே காலகட்டங்களில் முஸ்லிம் சமூகம் மற்றும் இஸ்லாம் குறித்த தனது விமர்சனத்தைப் பெரியார் அவ்வப்போது முன் வைக்காதிருந்ததில்லை. “இஸ்லாம் மதக் கொள்கைகள் முழுவதையும் ஒப்புக்கொண்டதாகவோ அவைகள்க எல்லாம் சுயமரியாதைக் கொள்கைகள் என்பதாகவோ யாரும் தீர்மானித்துவிடாதீர்கள் என்கிற எச்சரிக்கையை அவர் செய்யத் தயங்கியதில்லை(‘குடிஅரசு’, ஆக.2, 1931). மதங்கள் சமூக அமைதியைக் கெடுப்பதைப் பற்றிச் சொல்ல வருகையில் 1926 தொடங்கி 1931வரை ஆண்டு வாரியாக ‘இந்து மூர்க்கர்கள்’ பலாத்காரமாகக் கற்பழித்த பெண்களின் எண்ணிக்கையைச் சொல்லும் அதே நேரத்தில் ‘முஸ்லிம் மூர்க்கர்கள்’ செய்ததையும் அவர் பட்டியலிட்டார் (பகுத்தறிவு, 1934, செப்டம்பர் 9. பார்க்க: ஆனைமுத்து, பக்.1420). கிறித்துவ மதத்தைப் போலவே இஸ்லாமும்கூட ஒரு பார்ப்பனீய மதமாகவே உள்ளது என்றும் ஓரிடத்தில்

குறிப்பிட்டார். முல்லாக்கள் புரோகிதர்கள் போலச் செயற்படுவதை அவர் விமர்சித்தார். விருதுநகர் மாநாட்டில் மத ஒழிப்புத் தீர்மானத்தை நிறைவேற்றியதோடு.

“இந்த நாட்டின் இன்றைய சுதந்திர ஆட்சிக்கு சகோதரத்துவத்திற்கு, சினேக தத்துவத்திற்கு மதங்களே அதாவது இந்து, முஸ்லிம், கிறிஸ்து முதலிய மதங்களே இடையூறாய் இருந்து கொண்டு உட்பகையையும் சாந்தியற்ற தன்மையையும் உண்டாக்கி வருவதை”

(வீரமணி, பக்.20)

அதற்குக் காரணமாகக் காட்டினார்.

1930 ஏப்ரல் 1 முதல் பால்ய விவாகத்தைத் தடை செய்யும் சாரதா சட்டம் அமுலுக்கு வரவிருந்ததை இந்து மதச்சனாதனிகளைப் போலவே முஸ்லிம்களில் சிலரும் அதை எதிர்த்தனர். இஸ்லாமுக்கு மதம் மாறுதலைத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்த பெரியார் இந்த விஷயத்தில் அவர்களைக் கடு¬மையாய் விமர்சித்தார். அக்டோபர் 27, 1929 ‘குடிஅரசு’ இதழில் முல்லாக்களுக்கு ஆபத்து என்கிற தலைப்பில் ‘பம்பாய் கிரானிக்கல்’ பத்திரிகை எழுதிய கட்டுரை ஒன்று தமிழில் பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது.

“இப்போது முல்லாக்களைச் சீர்திருத்தும் பொருட்டு ஒரு சங்கம் தோன்றியிருக்கிறது. முல்லாக்களெல்லாம் குறுகிய நோக்கமும் மூடப் பழக்கவழக்கங்களும், குருட்டு நம்பிக்கையும், மதவெறியும், பிடிவாதமும் உடையவர்களாக இருப்பதால் அவர்களைச் சீர்திருத்தும் பொருட்டு இச்சங்கம் தோற்றுவிக்கப்பட்டிருப்பதாக அந்தச் ஸ்தாபகர்கள் வெளியிட்டிருக்கும் விஞ்ஞாபனத்தில் பலர் இந்த முல்லாக்களைப் போலவே மதவெறியும் குருட்டு நம்பிக்கையும் உடையவர்களாகி முஸ்லிம் மதத்தைப் தப்பு வழியில் செலுத்தி வருவதினால் இந்தச் சங்கத்தார் அவர்களைச் சீர்திருத்தப் போவதாகத் தெரிகிறது.

இந்தச் சங்கத்தார் எல்லா முல்லாக்களையும் , மவ்லவிகளையும் வரைமுறையின்றித் தாக்கவில்லை. சீர்திருத்தத்திற்கு எதிராக இருக்கும் பிற்போக்கானவர்களான முல்லாக்களையும் மவ்லவிகளையுமே அவர்கள் கண்டிக்கி றார்கள். முல்லாக்களைச் சீர்திருத்தி அவர்களை உத்தம முஸ்லிம் மதபோதகராக்குவதற்காகச் செய்யப்படும் முயற்சி பாராட்டடத் தக்கதே.

முல்லாக்களை அடியோடு ஒழிப்பது தான் நல்ல சீர்திருத்தமாகும். ஏனென்றால் நபிகள் நாயகம் முல்லாக்களை ஆதரிக்கவில்லை. எனினும் இந்தச் சங்கத்தார் செய்யும் முயற்சி நன்முயற்சி என்றே கூறவேண்டும்" என்று கூறியதோடு நிற்காமல் சமய வெறியை எதிர்த்துக் சீர்திருத்தும் வேலையின் கஷ்டங்களையும் அக்கட்டுரை தொட்டுக் காட்டியது. தொடர்ந்து,

"பகுத்தறிவுக்கும் மனசாட்சிக்கும் பொருத்த மற்றதெல்லாம் சமய சம்பந்தமுடையதாகக் கருதக்கூடாது. உதாரணமாக பால்ய விவாதத்தை எடுத்துக் கொள்வோம். அது பகுத்தறிவுடன் பொருந்தாத கெட்ட பழக்கம் எனினும் அது சாஸ்திர சம்பந்தமானதென்று வாதிப்போரும் சிலர் இருக்கிறார்கள். இந்தத் தீய வழக்கத்தை இந்தச் சங்கத்தினர் ஆதரிக்கிறார்களா இல்லையா என்பது திட்டமாகத் தெரியவில்லை. இந்த சங்கத்தை ஆதரிக்கும் ஒரு முஸ்லிம் பத்திரிகை சாரதா மசோதாவைக் கண்டித்து எழுதுகிறது. வைதீக ஒத்துழையாதாரன மௌலானா முகமதலியும் அம்மசோதாவை ஆதரிக்கக் கூடாதென்று வைஸ்ராயிடம் விண்ணப்பம் செய்திருக்கிறார். அவர் பால்ய விவாகத்தை தாம் ஆதரிக்கவில்லையானாலும் கண்டிக்கவில்லை என்று வாதம் செய்கிறார். சின்ன வயதில் கல்யாணம் செய்ய வேண்டுமென்று இஸ்லாம் வரையறுத்துக் கூறாததற்கு காரணமில்லாமலுமில்லை. பகுத்தறிவுக்குப் பொருந்தாத ஆதாரங்களை இஸ்லாம் ஒப்புக்கொள்வதில்லை. எனவே பகுத்தறிவுடையவர்கள் பால்ய விவாகம் செய்யமாட்டார்கள் என்று நம்பி இஸ்லாம் சரியான வயதை வரையறுக்கவில்லை. ஆகவே முஸ்லிம் மதத்திற்கு ஆபத்து என்று அவர் பூச்சாண்டி காட்டவதில் அர்த்தமேயில்லை. அவருடைய முறைப்பாடு இஸ்லாம் மத தத்துவத்துக்கே முரணானது. எகிப்தில், துருக்கியில் சாரதாக மசோதாவை விடக் கடினமான சட்டம் வெகுகாலமாக அமுலில் இருந்த வருகிறது. அவ்விடத்திலே முஸ்லிம்கள் அதைப்பற்றிக் குறை கூறவும் இல்லை" என்று வாதிட்டது. சாரதா மசோதாவை ஆதரிக்கும் முஸ்லிம்கள் சில இடங்களில் ஜாதிப் பிரஷ்டம் செய்யப்படுவதைக் கண்டித்து,

"ஜாதி பிரஷ்டம் பேச்சுக் கிளம்பியதிலிருந்து 'இஸ்லாத்துக்கு ஆபத்து என்று கூக்குரலிடுவோருக்கு இஸ்லாம் மதஞானமே கிடையாதென்பது உறுதியாகிவிட்டது. பகுத்தறிவுப்படி நடப்பவனே உத்தம முஸ்லிம் என்று இஸ்லாம் மதபோதனை செய்கிறது. ஆகவே பகுத்தறிவுப்படி நடக்கும் முஸ்லிம்களுக்கு எதிரிடையாக எத்தகைய பத்துவாக்களைப் (யீணீஷ்ணீ) பிறப்பித்தாலும் அவர்கள் பயப்பட மாட்டார்கள்" என அக்கட்டுரை முடிந்தது.

இக்கட்டுரை வெளிவந்த அதே இதழில், திருப்பூரில் 41 ‘ தீண்டப்படாதவர்’ குடும்பம் கிறிஸ்தவரானது பற்றியும் திருவண்ணாமலையில் சுமார் 200 ஆதிதிராவிடர் முகமதிய ராவதற்குத் தயார் என்றும் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.(பூனாவில் நடக்கும் பார்வதி கோயில் சத்தியாக்கிரகத்திற்கு ஆதரவாக அக்.22,1929 அன்று சென்னை நேப்பியர் பார்க்கில் நடைபெற்றக்கூட்டம், அதில் டபிள்யூ.பி.ஏ. சவுந்தர பாண்டியன், சிவராஜ், முனுசாமிப்பிள்ளை, ஈ.வெ.ரா. ஆகியோர் பேசிய பேச்சுக்களும் அவ்விதழில் இடம் பெற்றிருந்தன.).

சீலையம்பட்டி மதமாற்றத்தை ஆதரித்து பெரியார் ஆற்றிய புகழ் பெற்ற உரையை அவரது தொகுப்புகளில் காணலாம். ஈரோட்டில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் பெரியார் பேசி அமர்ந்ததும் திருமதி. லட்சுமி அம்மாள் என்பவர் முகமதிய மதத்தில் பெண்களின் பெருமையயும் சுதந்திரத்தையயும் பாராட்டிப் பேசினார். அப்போது ‘கோஷா முறை பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன’ என்று ஒருவர் சீட்டு அனுப்பினார். இந்தக் கேள்விக்குத் தான் பதிலளிப்பதாக எழுந்த ஈரொ, “கோஷா முறையை நான் ஒத்துக் கொள்வதில்லை, சில படித்தவர்கள் குர்ஆனில் கோஷா முறை பற்றி ஒன்றுமில்லை என்பார்கள்” என்று தொடங்கிப் பேசினார். எனினும் குர்ஆனில் எழுதியுள்ளது பற்றித் தனக்குத் தெரியாது என்றும் எனவே தான் அதைப் பற்றிப் பேச வரவில்லை என்று கூறி,

“இந்த நாட்டில் கோஷா இல்லாத பெண்கள் பலர் இருக்கிறார்கள். மலையாளத்தில் 100க்கு 75 முகமதயப் பெண்களுக்கு கோஷா இல்லை”

என்றார். தஞ்சை திருச்சி போன்ற இடங்களிலும் கூட இந்த வழக்கம் பெரிய அளவில் இல்லை என்பதாகவும் பதிலு ரைத்தார்(‘குடிஅரசு’) அக்.20, 1929).

1500 ஆண்டுகளுக்கு முந்தைய உலக நிலையைப் புரிந்து கொண்டவர்களுக்கு முகம்மது நபி எத்தகைய புரட்சிகரமானவர் என்பது விளங்கும் எனக் கூறிய பெரியார், இஸ்லாம் மட்டும் இன்னும் கொஞ்சம் தாராளமாய் இருந்திருந்தால் உலகிலுள்ள மொத்த மக்களுக்குமான மதமாக மாறியிருக்கும் என்றார்.

“ஆனால் இயற்கைக்கும், பகுத்தறிவுக்கும் பொருந்தாத ஒரு அபிப்ராயத்தைப் புகுத்தி அதை கட்டுப்படுத்திவிட்டதால் போதிய வளர்ச்சியில்லாமல் போய்விட்டது. அதாவது ‘1500 வருஷத்திற்கு முன் சொன்னது எதுவோ அதுதான் இன்னமும், இலட்சத்து அய்ம்பதினாயிரம் வருஷம் பொறுத்தும் இருக்க வேண்டியதாகுமே ஒழிய, அதில் ஒரு சிறுமாறுதல் கூடச்செய்யமுடியாது

என்பதோடு, செய்ய இடம் கொடுக்கப்படவும் மாட்டாது' என்றும் சொல்லி வருகின்ற முரட்டுப் பிடிவாதமே மக்களை அதன் பெருமையை உணர முடியாமல் செய்துவிட்டது"(பெ.க) என்பதே இஸ்லாம் மீது பெரியார் வைத்து மிகக் கடுமையானதும் சிந்திக்க வேண்டிய விமர்சனமாகவும் இருந்தது.

இப்படிப் பல எடுத்துக் காட்டுக்களைச் சொல்ல இயலும், சுருக்கம் கருதி இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன். தனது கொள்கைகளையும் அரசியலையும் விட்டுக் கொடுக்காமலும் சமரசம் செய்து கொள்ளாமலுமே அவர் இஸ்லாத்தை ஆதரித்தார்.

மதம் ஒழிய வேண்டும். உலகமெல்லாம் ஒரே மார்க்கமாக வேண்டும் என்பதே அவரது லட்சியமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது ('குடிஅரசு' அக்.23,1931). மதம் பொதுவில் பகுத்தறிவுக்கு விரோதமனது. மோட்சம், நரகம் முதலியவற்றை நம்புவது. மாற்றங்களுக்கு எதிரானது.

"சாதி,மதம், தெய்வம், தனம் என்கிற நான்கு தத்துவமும் அழிந்ததாக வேண்டும். அவை அழியாமல் மனித சமூகத்துக்கும் சாந்தியும், திருப்தியும், சுகமும் கிடையாது. அந்த நிலை அடைந்து தான் ஆக வேண்டும். அதுவே என் கொள்கை.

மதம் மக்களுக்கு அபினி (மது) என்றார் ஒரு பெரியவர். ஆனால், நான் மதம் மக்களுக்கு விஷம் என்கின்றேன். மதக்காரனுக்கு சுயமரியதையும், சுய அறிவும் இல்லை. மனிதனின் முற்போக்கையும் ஒற்றுமையையும் தடுத்து நிற்பது மதம். மனிதனுக்கு மற்ற ஜீவன்களைவிட அதிக புத்தி இருந்தும் மனிதன் அடிமையாய் இருப்பதற்குக் காரணம் மதம்.

ஆகையால் நான் எந்த மதத்திற்கும் விரோதிதான்: மதங்கள் அழிய வேண்டும் என்கின்ற கருத்துடையவன்தான்" ('குடி அரசு' , மே 31, 1936) என்று அழுத்தம் திருத்தமாக விளம்பினார். மேற்குறித்த பேச்சு கேரளத்தில் தீண்டத்தகாதவர்ளாகக் கருதப்படும் ஈழவர்களை நோக்கிப்பேசியது. அதே பேச்சில் அவர்,

"ஒரு மத வேஷம் பூண்டால் தான் தீண்டாமையும், தெருவில் நடக்காமையும் ஒழிகிறது, பள்ளிக்கூடங்களில் சேர்த்துக் கொள்ளப்படுகிறது. அதுவும் எல்லாம் மத வேஷத்துக்கு ஆவதில்லை. இஸ்லாம் மதத வேஷத்துக்குத்தான் இன்று இந்திய நாட்டில் தெருவும், பள்ளிக்கூடமும் திறந்து விடப்படுகிறது. கிறிஸ்தவ

மதத்தில் தீண்டாமை இருக்கிறது. சீக்கிய மதம் எனக்குத் தெரியாது. இந்த நாட்டில் அதன் செல்வாக்கு எவ்வளவு இருக்கமுடியும்? பவுத்த மதம் தீண்டாமையை ஒழித்துவிடவில்லை. ஆதலால் ஏதாவது ஒரு மதம் வேண்டமானால், அடியோடு தீண்டாமை ஒழிய வேண்டுமானால் இஸ்லாம் மத வேஷம் போட்டுக் கொள்ளுவது மேல் என்று கருதுகிறேன்"

என்றும் கூறியது கவனிக்கத்தக்கது. அம்பேத்கர் அவர்கள் மூஞ்சே போன்ற இந்துத்துவவாதிகளின் கெடுபிடிகளுக்கு மத்தியில் சீக்கிய மதத்திற்கு மாறுவது என்கிற நிலைபாட்டை எடுத்த ஒரு கால கட்டத்தில் பெரியார் இத்தகைய கருத்து கொண்டிருந்தார். (பெ.க. 4.96-101 பக்கங்களில் உள்ள அம்பேத்கரும் இந்து மதமும் கட்டுரையையும் நீலீகூீவீstஷீஜீலீமீகூஷீ ழீணீய்யீமீகூஷீமீறீஷீt ன் நூலையும் காண்க)

விருதுநகர் மாநாட்டு மத ஒழிப்பு தீர்மானத்தை விளக்கி,

"அன்றியும், இந்த நாட்டின் இன்றைய சுதந்திர ஆட்சிக்கு, சகோதரத்திற்கு சிநேக தத்துவத்திற்கு மதங்களே இடை யூறாய் இருந்து கொண்டு உட்பகையையும் சாந்தியற்ற தன்மையையும் உண்டாக்கி வருவதை நாம் நேரிலேயே தினமும் பார்த்தும் கேட்டும் வருகின்றதோ மாதலால் விருதுநகர் மாமநாட்டில், 'மக்களுக்குள் எவ்வித மத உணர்ச்சியும் இருக்கக்கூடாது என்று தீர்மானிக்க வேண்டியதாயிற்று"

எனத் தலையங்கம் வெளிவந்த (குடிஅரசு' அக். 23, 1931) அதே இதழில்தான் கோயமுத்தூரில் நடைபெற்ற மிலாது நபி விழாவில் அவர் ஆற்றிய உரையும் வெளிவந்தது. உலகமெல்லாம் ஒரே மார்க்கமாக வேண்டும் என அங்கு பேசிய பெரியார் மத ஒழிப்பு குறித்த தனது பார்வையை ரத்தினச் சுருக்கமாக,

"'மதங்கள் ஒழிந்த பிறகுதான் உலக சமாதானமும், ஒற்றுமையும், சாந்தியும் ஏற்பட முடியும், என்பது அநேக அறிஞர்களது அபிப்ராயமானாலும் அதற்கு விரோதமாக ஏதாவது ஒரு மதம் இருக்கும்போத 'உலக சமாதானம் ஏற்பட்டுவிட்டது.' சாந்தி ஏற்பட்டு விட்டது. என்று சொல்லப்படுமானால் அது இஸ்லாம் கொள்கைகளாகத் தான் இருக்கக்கூடும் என்று கருதுகின்றேன். ஏனெனில் அத சமூக ஒற்றுமை, சமூக சமத்துவம் ஆகிய காரியங்களில் மற்றெல்லோரைக் காட்டிலும் அதிகமான கவலை எடுத்து வருகின்றது

('குடிஅரசு', ஆக.23,1931)

என்றார். ‘மதங்கள் ஒழிய வேண்டும்’ என்பதையும் ‘மதமாற்றம்’ என்பதையும் இணையாகவே அவர் சொல்லி வந்தததன் பொருள் இதுவே.

தொலைநோக்குடன் ஒரு கொள்கையைச் சொல்லும் இந்த நேரத்தில் உடனடிச் சாத்தியங்களைக் கணக்கில் கொண்டு செயல்படக் கூடியவராகவே பெரியாரை நாம் பலவேறு அம்சங்களிலும் பார்க்கிறோம். ‘இந்து மதத்தை ஒழிப்பது’ என்பது அவரது லட்சியமாக இருந்தபோதிலும் அதுவரை சூத்திரர்களும் தாழ்த்தப்பட்டவர்களும் காத்திருக்க முடியாது என்பதையும் அவர் உணர்ந்திருந்தார்.

1943 ஜூன் 20 அன்று சென்னையில் நடைபெற்ற ‘தீண்டாமை ஒழிப்பு நாள்’ கூட்டத்தில் பேசும்போது, “இந்து மதத்தை விட்டு நீங்கள் ஒழியுங்கள்... அப்படி ஒழிந்துவிட்டால் இந்து மதம் ஒழிந்துவிடுமா, தீண்டாமை ஒழிந்துவிடுமா என்று கேட்பீர்கள். நீங்கள் அதிலிருந்து ஒழிந்த பின்பு அது இருந்தால் என்ன, ஒழிந்தால் என்ன? அதில் தீண்டாமை இருந்ததால் என்ன, தொலைந்தால் என்ன? உங்களுக்கு ஏன் அந்தக் கவலை என்று கேட்கிறேன். இந்து மதத்திலிருந்து விலகிவிட்டால் தீண்டாமை போய்விடுமா என்று கேட்பீர்கள். அதற்கு எனது பதில். எந்த மதத்தில் தீண்டாமை இல்லையோ அந்த மதத்தில் சேர்ந்துவிட்டதாகச் சொல்லுங்கள். அப்புறம் எவன் உங்க்ளைத் தீண்டாதவன் என்று சொல்லுவான்? மதம் இல்லாதவனுக்குத் தீண்டாமை உண்டு .வேறு மதத்தில் சேர்ந்தவனுக்குத்தான் தீண்டாமை இல்லை. அவ்வளவு சுலபத்தில் தீண்டாமை ஒழிப்பு இருக்கத் தீண்டாமை ஒழிய இந்து மதத்தை ஒழிக்க வேண்டும் என்றால் யோசனை அற்றதும் முடியாத காரியமும் ஆகும். இந்து மதம் என்று ஒன்று இல்லை. இருப்பதாகக் காட்டிக் கொள்வதைச் சுலபத்தில் ஒழிக்க முடியாது” (பெ.க.4: 142) என்றார். மதம் பற்றிய சுயமரியாதை இயக்கக் கொள்கைகள் பற்றிச் சொல்ல வரும்போது அதில் ஆஸ்திகர்களும் இருக்கலாம் என்று சொல்லும் பெரியார், ‘இந்து மதத்தை விட்டுவிடுங்கள். மதமில்லாமலும் நாஸ்திகர்களாகவும் தான் இருக்க வேண்டு மென்பதில்லை என்பார். வேறு சிறிதாவது அதைவிட மேலானதும், சீர்திருத்தமானதும், மூடநம்பிக்கைகள் குறைவானதுமான மதத்தை’ அனுசரிக்கலாம் என்பார்.

(‘குடிஅரசு’, நவம்பர் 17,1935,பார்க்க பெ.க.4.102)

அப்படியான மதமாக அவர் முகமதிய மதத்தையே திரும்பத் திரும்ப அடையாளம் காட்டினார் என்பதில் யாருக்கும் அய்யமிருக்க இயலாது. மேற்குறிப்பிட்ட அதே கட்டுரையில், “வெளிப்படையாய் நாம் பேசுவதானால்

அம்பேத்கரும் அவரைப் பின்பற்றுவோறும் நாஸ்திகர்களாவதற்கும் மதமில்லாதவர்கள் ஆவதற்கும் இஷ்டமில்லாமல் அவர்கள் மீது இருக்கும் தீண்டாமை மாத்திரம் ஒழிய வேண்டும் என்று ஆசைப்பட்டு முகமதியராகி விடலாம் என்ற அவர்கள் கருதினால் அதில் நமக்கு இருக்கும் ஆட்சேபனை என்ன என்று கேட்கிறோம் என்பார்.

முகமதிய மதத்தில் கோஷா முறை, மதச்சின்னம், கடவுள் போன்ற 'பல கெடுதிகள்' இருக்கலாம். அப்படியாயினும் கூட நாத்திகர்களுக்கும் பெண்ணுரிமைவாதிகளுக்கும் வேண்டுமானால் முகமதிய மதம் வேண்டாததாய் இருக்கலாம். ஆனால் தீயர்கள், புலையர்கள், பறையர்கள், நாடோடிகள், என நாயிலும், மலத்திலும், புழுத்த மலக்கிருமிகளிலும் கேவலமாக இந்து மதத்தால் கருதப்படும் மக்களுக்கு அதில் என்ன குறை காண முடியும் என்கிறார். கிறிஸ்தவப் பறையன், கிறிஸ்தவச் சக்கிலி' என்கிற இழிவு தொடரும், எங்காவது பறத்துலுக்கன் என்றோ சக்கிலிய முகம்மதியன் என்றோ தீய முஸ்லிம் என்றோ அழைக்கப்பவதுண்டோ என்று வினவினார்.

தீண்டாமையை ஒழிக்க அன்றைய சமூக சீர்திருத்தவாதிகள் இரண்டு வழிகளையே சொல்லிக் கொண்டிருந்தனர். அவை1) சட்டம் செய்வது பெரியார் மூன்றாவது வழியொன்றைச் சொன்னார். " இஸ்லாம் கொள்கைகளைத் தழுவுவது என்பதும் ஒரு வழி என்றே சொல்லுகிறேன்" என்றார். அம்பேத்கர் கூட அன்று (1931) மதமாற்றம் குறித்து வெளிப்படையாகப் பேசத் தொடங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது."சட்டம் செய்வது கஷ்டம்; செய்தாலும் அமலில் வருவது கஷ்டம். சத்தியாகிரகம் செய்வதும் கஷ்டம்; செய்தாலும் வெற்றி பெறுவதும் சந்தேகம். இவற்றால் துன்பமும், தோல்வியும் கிடைக்கலாம். ஆனால் ஆதிதிராவிடர்களுக்கு இஸ்லாம் கொள்கையை ஏற்றுக் கொண்டேன் என்று சொல்வதில் என்ன கஷ்டம்? அதில் தோல்வியோ துன்பமோ ஏதாவது உண்டா?"

('குடிஅரசு' ஆகஸ்டு 2, 1931) என வினவினார்.

மொத்தத்தில் பெரியாரது மத ஒழிப்பு மற்றும் மதமாற்றம் தொடர்பான பார்வைகளை இப்படித் தொகுத்துக் கொள்ளலாம்.

1. மதங்கள் கேடானவை. அவை ஒழிக்கப்பட வேண்டும். எல்லாவற்றையும்விட மதம் மிகக் கேடானது.

2. இருக்கிற மதங்களில் மூடநம்பிக்கைகள் குறைவானதும், சமத்துவம் மிக்கதுமான மதம் இஸ்லாமே.

3. உலகில் மதங்கள் ஒழிக்கப்படும்போது இஸ்லாமும் ஒழியும் (பெ.க.பக்.4.11). அதுவரை ஏதேனும் ஒரு மதம் தான் இருக்க வேண்டுமானால் அது இஸ்லாமே. (பெ.க.பக்.4.33)

4. உலகில் மதங்கள் ஒழிந்து மதங்கள் ஒழிந்து அனைவரும் ஒரே மார்க்கமாக ஆகும் போது அதற்கான பின்பற்றத்தக்க மாதிரியாக இஸ்லாமே இருக்கும்.

1938 தொடங்கிப் பெரியாரின் கோரிக்கையும் அரசியலும் திராவிட நாடு பிரிவினையை ஒட்டியதாக இருந்தது. 1944வரை இது டொமினியன் அந்தஸ்துக்குட்பட்டதாகவும் பின்னர் அது பூரண சுயாட்சிக் கோரிக்கையாகவும் மாறியது என்றும் எஸ்.வி.ராஜதுரை குறிப்பிடுவார். இக்காலகட்டத்தில் பெரியாரின் அரசியலை அவர் விரிவாக ஆராய்ந்துள்ளார் (பெரியார்–ஆகஸ்டு 15, விடியல் பதிப்பகம், 1948) பார்ப்பன– இந்து மத இறுக்கம் வட இந்தியாவில் அதிகம் என்பதையும், இந்த ஆதிக்கத்திற்கு எதிரான உணர்வும் அங்கு சூத்திரர்கள் மத்தியில் இல்லை என்பதையும் உணர்ந்திருந்த பெரியார் திராவிட நாட்டைத் தனியாகத் துண்டித்துவிட்டால் இங்கே அந்த ஆதிக்கத்தை எளிதில் அழித்துவிட முடியும் என நம்பினார்.

சுதந்திரத்திற்குப் பிந்தியி சென்னை மாகாணம் நிச்சயமாக இந்தியாவிற்குள் இருக்காது, பாகிஸ்தானைப் போல, திராவிடஸ்தான் உருவானது உறுதி என நம்பிய பெரியார் அப்படி உருவாகப் போகிற திராவிடஸ்தான் குறித்து மிகுந்த கற்பனாவா£தத் தன்மையுடன் கூடிய பார்வையைக் கொண்டிருந்தார். கிட்டத்தட்ட கம்யூனிஸ்டுகள் கற்பிதம் செய்த சோஷலிசச் சமுதாயம் போன்றதாக அது இருந்தது. சாதி மற்றும்ம பொருளாதார ஏற்றத்தாழ்வுளும் இந்துமத ஆதிக்கமும் இல்லாத ஒரு அமைப்பாக இருக்கும் என அவரது கனவு விரிந்தது. திராவிட நாட்டில் ஒரே ஜாதியில் திருமணம் செய்து கொள்பவர்களுக்குச் சொத்து கிடையாது என விடுதலை தலையங்கள் எழுதியது (மே22, 1947). திராவிட நாடு கிடைக்குமானால் ஆதி திராவிடர் களுக்கு நஷ்டம் தானென்றும் அதாவது ‘ஆதி’ என்ற சொல் மறைந்து அவர்களும் திராவிடராகி விடவார்கள் என்று திருவாரூரிலும் (1940) சென்னையிலும் (1946) மாநாட்டிலும் பொதுக்கூட்டத்திலும் பெரியார் பேசினார்(பார்க்க: எஸ்.வி.ஆர்.பக்.544).

திராவிட நாட்டில் வேலை இல்லாத் திண்டாட்டம் ஒழியும். “நமது மக்கள் வேலை தேடி அன்னிய நாடு சென்று மானமிழந்து தவிப்பதைத் தடுத்து அவர்களுக்கு இங்கேயே வேவலை கொடுக்க முடியும்” எனச் சேலத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசினார்(விடுதலை’ ஜூலை 7, 1940). “திராவிட நாடு பிரிந்தால் பஞ்சம் ஏது?” என்பது ஜூன் 14, 1946 தேதியிட்ட விடுதலை இதழில் வெளிவந்த ஒரு தலையங்கக் கட்டுரையின் தலைப்பு. எல்லாவற்றிற்கும் உச்சமாக “எவ்விதத்திலும் இனி திராவிடத்தில் வகுப்புப் போராட்டத்திற்கு இடமில்லை” என்றார் (விடுதலை’ செப்டம்பர் 13,1946)

1947 ஏப்ரல் 17 தேதியிட்ட விடுதலை இதழின் தலையங்கத்தில் திராவிட அரசில் எந்த ஒரு மதத்திற்கும் தனி நபருக்கும் சிறப்பு உரிமைகள் அளிக்கப்படாது என்பதைத் தெளிவுபடுத்தினார். முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் திராவிட நண்பர்களாகக் கருதப்படுவர். முஸ்லிம்கள் திராவிடர்கள் என்பதால் அவர்கள் தமிழ்நாட்டில் இருக்க உரிமையுடையவர்கள். மதம் என்கிற ஒரு சிறிய தறையைத் தவிர மற்றெல்லா அம்சங்களிலம் அவர்கள் திராவிடர்களுடன் இணைந்திருப்பர். திராவிட அரசில் இந்துமதம் எந்த விதத்திலும் ஆதிக்கம் செலுத்த இயலாது. தமது சைவ, வைணவ அடையாளங்களையெல்லாம் அவர்கள் வீட்டுக்குள்ளேயே வைத்துக் கொள்ள வேண்டும். திராவிட அரசில் முஸ்லிமல்லாத திராவிடர்களும் ஒருவரிலிருந்து ஒருவர் பிரிக்க இயலாதவர்களாகி விடுவார்கள் சமூகம் மதத்தினடிப்படையிலில்லாமல் மனிதாபிமானத்தின் அடிப்படையில் சீரமைக்கப்படும் என்றெல்லாம் வாக்குறுதி அளித்தார். எனவே திராவிட நாட்டுக்கு முஸ்லிம்கள் ஆதரவளிக்க வேண்டும் என்கிற வேண்டுகோளுடன் அத் தலையங்கம் முடிந்தது.

முன்னதாகச் சென்னையில் நடைபெற்ற
தொடர்சொற்பொழிவொன்றில், “முஸ்லிம்கள், ஆதி திராவிடர்கள், கிறிஸ்தவர்கள், பவுத்தர்கள் ஆகியவர்கள் அவர்களும் திராவிடர்களே ஆனதால் அவரவர்கள் சமயம், ஆத்மார்த்தம் என்பவற்றின் உணர்ச்சி இன்றுள்ளது போலவே அவரவர்கள் இஷ்டப்படி இருக்கும்”( குடிஅரசு டிசம்பர் 2, 1944) என்றும் கூறியதும் குறிப்பிடத்தக்கது.

இந்தக் சூழ்நிலையில்தான் தாருல் இஸ்லாம் (அக்டோபர் 1, 1947) திராவிட நாட்டில் முஸ்லிம்களுக்கு இரட்டை வாக்குரிமை அளிக்கப்படும் என்கிற உத்தரவாதத்தைக் கோரி நிபந்தனை விதித்தது. பெரியார் இதனை ஏற்கவேயில்லை என மோர் எழுதியுள்ளதை முன்பே குறிப்பிட்டேன். எந்த

ஆதாரத்தின் அடிப்படையில் அவர் இதைக் கூறுகிறார் என்பதை நூலில் குறிக்கவில்லை (பார்க்க: பக்.175)ஆனால் 1945ல் குடி அரசில் எழுதிய தலையங்கம் ஒன்றில் (அக்டோபர் 6, 1945, பார்க்க ஆனைமுத்து தொகுப்பு,பக்.705)

திருச்சி மாநாட்டில் (1945) தமது கட்சி லட்சியம் திருத்தப்பட்டது குறித்துச் சொல்லும்போது, "திராவிட நாட்டு மக்களிடத்தில் சமயம், சமயாசாரம், பழக்க வழக்கம் என்பவைகளின் பேரால் இருந்து வரும் பேத உணர்ச்சி, மூடநம்பிக்கை ஆகிய இவைகள் மறையச் செய்து, மக்களைத் தாராள நோக்கமும் நல்ல அறிவு வளர்ச்சியும் பெற்ற ஒன்றுபட்ட சமுதாயமாகச் செய்யவேண்டும் என்றும். இவைகள் வெற்றி பெறுகிறவரை சாதி, சமயம், வகுப்பு, பேதம் ஆகியவை உள்ள மக்களுக்கு நம்மிடம் முழு நம்பிக்கையும் நல்லெண்ணமும் ஏற்பட்டு மேற்கண்ட முயற்சிகளுக்கு நம்மோடு களங்கமற்று ஒத்துழைக்க வேண்டிய அவசியத்திற்காக அவர்களுக்கு எண்ணிக்கை அவசியம் ஆகியவைகளுக்குத் தக்கபடி முக்கியமான துறைகளில் எல்லாம் பிரதிநிதித்துவம் கிடைக்கும்படி செய்ய வேண்டும் என்றும் திருத்தப் பட்டது"என்று கூறுகிறார்.

இரட்டை வாக்குரிமை என நேரடியாகச் சொல்லா விட்டாலும்தாழ்த்தப்பட்டவர்களுக்கும்சிறுபான்மை யினருக்கும் சிறப்புச் சலுகைகள் அளிக்கப்படும் என்பதே இதன் பொருளாகிறது. இது குறித்து எழுதவந்த பெரியார் ஆய்வாளர் எஸ்.வி.ஆர் இது தனி வாக்காளர் தொகுதியையும் உள்ளடக் கியதே எனக் குறிப்பிடுவது (பக்.544) சிந்திக்கத்தக்கது. திராவிட நாடு குறித்த இத்தகைய கற்பனாதீத மனநிலையில் தான் அவர் திராவிட சமயம் குறித்துப் பேசியதும்,திராவிடர்களின் நெறி நூலாகக் குறலைச் சுட்டிக்காட்டுவதும். "குறள், இந்து மதக் கண்டனப் புத்தகம் என்பதையும், அது சர்வ மதத்திலுள்ள சத்துக்களை சேர்த்து எழுதப் பட்டுள்ள மனித தர்ம நூல் என்பதையும் எல்லோரும் உணர வேண்டும். ஒவ்வொருவனும், 'நான் இந்துவல்ல, திராவிடனே-திருக்குறள் விரும்பியே' என்று கூறிக் கொள்வதில் பெருமை அடைய வேண்டும்- விபூதியையும், நாமத்தையும் விட்டு ஒழிக்க வேண்டும்; புராணங்களைப் படிக்கக்கூடாது. நீ என்ன மதம்' என்றால் 'குறள் மதம்', 'மனித தர்ம மதம்' என்று சொல்லப்பழக வேண்டும்" என ஈரோட்டில் நடந்த கூட்ட மொன்றில் (அக்.23,24,1948, பார்க்க: ஆனைமுத்து தொகுப்பு, பக்.1463) பேசினார்.

திராவிட நாட்டில் திருக்குறள் அடிப்படை நூலாகிவிடுமோ என தாவூத் ஷா போன்றோர் அய்யப்பட்டதில் உள்ள நியாயத்தை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. எனினும் சம காலத்தில் அவர் பேசிய எல்லாவற்றையும் தொகுத்துப் பார்க்கும்போது தாவூத் ஷா அசப்பட்டது போல குர்ஆனை நீக்கி அவ்விடத்தில் குறளை வைத்துவிடும் நோக்கோ, முஸ்லிம் அடையாளத்தை அழிக்கும் எண்ணமோ பெரியாருக்குக் கிஞ்சித்தும் இலலை என்பதை யாரும் எளிதில் விளங்கிக் கொள்ள முடியும். மேற்குறித்த ஈரோட்டுப் பேச்சிலும் கூட அவர் இந்து மத நீக்கத்தையும் இந்து மதப் புராண ஒழிப்பையும் மட்டுமே பேசுகிறார் என்பதைத் தோழர்கள் கவனிக்க வேண்டும்.

திராவிட சமயம் குறித்த அவரது பேச்சுக்களைக் கூர்மையாக ஆராய்ந்து பார்த்தால் அவற்றிலும் கூட இஸ்லாத்தை நீக்கி அவ்விடத்தில் திராவிட மதத்தை வைத்துவிடும் முனைப்பு எதையும் நாம் கற்பனையில் வரித்துக் கொண்ட கருத்தாக்கம் அவர் போற்றிய நபிகளின் கருத்தாககத்தைக் காட்டிலும் ‘ஒரு படி சீர்திருத்தம்’ கொண்டது என்கிற கருத்தை ஓரிடத்தில் வெளிப்படுத்தி அவர் ஒரு தலையங்கம் தீட்டியிருந்த போதிலும் (‘குடி அரசு’, பிப்ரவரி 24, 1935) திராவிடர்களுக்கு பொருத்தமான மதம் இஸ்லாம் என்பதே அக்கட்டுரையின் இறுதிச் செய்தியாக உள்ளது.

‘குடிஅரசு’ பதிப்பகம் சார்பாக 1947ல் வெளியிடப்பட்ட குறுநூல் ஒன்றில், இஸ்லாம் என்பது நபிகளின் மதம் என்றோ இங்குள்ள முஸ்லிம்களின் மதம் என்றோ நினைக்க வேண்டியதில்லை. அது திராவிடர்களின் மதம்: நபிகளுக்கும் புத்தருக்கும், கிறிஸ்துவுக்கும் எல்லா ஆரியக்கடவுளுக்கும் முந்திய திராவிடர்களுக்கு இருந்த மதம் என்றார்.

தொடர்ந்து, “இஸ்லாம் என்பது சாந்தி, பணிவு, பக்தி என்ற பொருள்படும் அரபுச்சொல். இஸ்லாம் என்பது சகோதரத்தன்மை என்பது. இவ்வளவு தான் 100, 200 வருடங்களுக்கு முற்பட்ட அகராதிகளைப் பாருங்கள். அரபு வார்த்தையில் சொல்லாமல் தமிழில்– ஒரு கடவுள், உருவமற்ற கடவுள் வழிபாடு, சாந்தி, ஒற்றுமை, பரஸ்பர பணிவு, பிரீதி, உடன் பிறப்பு என்ற தன்மைகள் கொண்ட மதம் என்றால் போதும். கடவுள் என்பது திராவிட மொழி.ரீஷீபீ என்பது ஆங்கில மொழி. அல்லா என்பது அரபு மொழி என்பதல்லாமல் திராவிடர்களுக்கு மாறுபட்ட கடவுள் அல்ல– கொள்கை அல்ல என்பேன். மதங்களை விபூதிப் பூச்சு நாமம், உச்சிக் குடுமிகளைக் கொண்டு நிர்ணயிப்பது போல், இஸ்லாத்தை தலை மொட்டை. தாடி, லுங்கி முதலியதைகளைக் கொண்டு நிர்ணயிக்காதீர்கள்.

இஸ்லாத்துக்கு எஜமானர் இந்நாட்டு முஸ்லிம்களல்லர். இவர்கள் இஸ்லாத்தில் ஒரு பகுதியினர்; மலையாள மாப்பிள்ளையார் மற்றொரு பகுதியினர்–ஈஜிப்டார் மற்றொரு பகுதியினர்; ஜப்பான், ஜெர்மன் இஸ்லாமியர்கள் மற்றொரு பகுதியினர், ஆப்ரிக்கர், நீக்ரோவர், அபிசீனியர் ஆகிய இஸ்லாமியர்.

இவர்கள் அத்தனை பேருக்கும் ஒரு கடவுள். அதுவும் உருவம், பெண்டு, பிள்ளை, சோறு, சாறு வேண்டாததும் அற்றதுமாகும். உடன்பிறப்பு, சம உரிமை, கட்டுப்பாடு இவைதான் பொது; மற்றவையெல்லாம் காலதேச வர்த்தமானங்களைப் பொறுத்தது. இவை எந்தப் பாகத்தில் இருந்தாலும் உடன்பிறப்பாய் இருக்கிறார்கள். இவர்களுக்கு உலகம் நடுங்குகிறது" (ஆனைமுத்து தொகுப்பு,பக்.32) எனக் குறிப்பிட்டார். இக்குறுநூலுக்கு அவர் இட்ட தலைப்பு, 'இனஇழிவு ஒழிய இஸ்லாமே நன் மருந்து' என்பது. இந்து மதத்தை விட்ட வெளியேறி இஸ்லாமாகுதலே அந்நூலில் அவர் சூத்திரர் மற்றும் தாழ்த்தப்பட்டோரை நோக்கி வைத்த தீர்வு.

இறுதியாக, "நாம் இந்த நாட்டை இந்து நாடாக-இந்துஸ்தானாக ஆக்கு வதை விட, திராவிடஸ்தானாக–அதாவது அந்தப் பெயரைப் பார்ப்பனர் சகிக்கவில்லையானால் திராவிட நாடு கொள்கையையே பாகிஸ்தான் என்ற வேறு பெயரில் மாற்றிக் கொள்வதில் தப்பு என்ன? என்றும் விளங்கினார்.

தொடர்ந்தும் அவர் இஸ்லாத்தைப் புகழ்ந்தும், மதமாற்றத்தை ஆதரித்துப் பேசிக்கொன்டே இருந்தார். 1953ல் சென்னையில் அவர் ஆற்றிய உரையே முன்பே மேற்கோள் காட்டியுள்ளேன் (பார்க்க: பெ.க., 4:194-202). அவரது இறுதிச் சாசனம் எனப்படும் சென்னை–தியாகராய நகா உரையிலும் (டிசம்பர்19) கூட, "உலகத்திலே தமிழர் இருக்கிறதைப் போல எத்தனையோ பங்கு முஸ்லிம் இருக்கிறான். அவர்களுக்குள் தேவடியாள் மகனே கிடையாது. ஈன சாதியே கிடையாது. எல்லோரும் சகோதரர்கள், ஒருவனுக்கொருவன் தொட்டுக் கொள்ளுவான். ஒருவன் சாப்பிட்டதை இன்னொருவன் சாப்பிடுவான். எச்சில் கூடப்பார்க்மாட்டான். அதாவது என்ன? அவ்வளவு சகோதரத்துவம் அந்த மதத்தின் தன்மை" (ஆனைமுத்து தொகுப்பு, பக். 2064) என்று இஸ்லாத்தைப் புகழ்ந்தார்.

தாவூத் ஷாவும் அவரது ஆதரவாளர்களும் சற்றுக் கூடுதலாகவே பெரியார் மீது தேவையற்ற அய்யமும் கொண்டிருந்தனர் என்றே தோன்றுகிறது. மன்னார்குடியில் நடைபெற்ற 'இரண்டாம் சுயமரியாதை மாநாட்டில்' இஸ்லாத்தை அழிக்க வேண்டுமென பெரியார் ஈ.வெ.ரா. தீர்மானம்

இயற்றியதாக அழிக்க வேண்டுமென பெரியார் ஈ.வெ.ரா. தீர்மானம் இயற்றியதாக ஜூன் 26,1932 ‘குடி அரசு’ இதழை மேற்கோள் காட்டி தாலுள் இஸ்லாம் இதழ் எழுதியதையும் அதை அப்படியே ஏற்று பார்க்க, ‘குடிஅரசு’, ஜூன் 26, 1932 என மோர் குறிப்பிடுவதையும் ஏற்கனவே சுட்டிக் காட்டியுள்ளேன்.

இதில் சில தவறுகள் உள்ளன. ஜூன் 17, 1932ல் மன்னார்குடியில் நடைபெற்ற சுயமரியாதை மாநாடு பற்றி ஜூன் 26, ‘குடிஅரசு’ இதழில் செய்தி வந்துள்ளது உண்மை. ஆனால் இது மாநில மாநாடு அன்று. மாநில மாநாடு என்பது போல அதைக் குறிப்பிட்டுள்ளது தவறு. அது தஞ்சை மாவட்டத்தில் நடந்த இரண்டாவது மாநாடு. மூன்று மாநில மாநாடுகளையே சுய மரியதை இயக்கம் நடத்தியது. முதல் மாநாடு செங்கல்பட்டிலும் (1929) இரண்டாம் மாநாடு ஈரோட்டில் (1930), மூன்றாவது மாநாடு விருதுநகரிலும் (1931) நடைபெற்றது.

இரண்டாவது தவறு: அந்த ‘குடி அரசு’ இதழில் மன்னார்குடி மாநாட்டுத் தீர்மானம் ஏதுமில்லை. தலைமை தாங்கிய குஞ்சிதம் அம்மையார் முதலியோரின் பேச்சுகள் மட்டுமே வெளி வந்துள்ளன. தலையங்கம் ஒன்றும் எழுதப்பட்டுள்ளது.

மூன்றாவது தவறு: பெரியார், ஈ.வெ.ரா. இஸ்லாத்தை ஒழிப்பது என்று தீர்மானம் இயற்றியதாகச் சொல்வதும் தவறு. ஏனெனில் அந்த மாநாட்டில் பெரியார் கலந்து கொள்ளவே இல்லை. அச்சமயம் அவர் வெளிநாட்டுப் பயணத்தில் இருந்தார்.

குஞ்சிதம் அவர்களின் தலைமையுரையில், “காங்கிரஸ் என்பது பார்ப்பனீயமாகிய இந்து மதத்தை வளர்ப்பதற்காக ஏற்பட்டிருக்கும் ஒரு ஸ்தாபனமாகும். ஆனால் நமது இயக்கமோ அதை அழிப்பதற்காகவே ஏற்பட்டிருக்கும் ஸ்தாபனமாகும். காங்கிரஸில் ஏகப் பிரதிநிதியாகிய திரு. காந்தியோ இந்துமதம், முஸ்லிம் மதம்,கிறிஸ்தவ மதம் ஆகிய மதங்களை அப்படியே வைத்துக் கொண்டு இந்து–முஸ்லிம்–கிறிஸ்தவ ஒற்றுமை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்கிறார். இம்மூன்று மதங்களும் அழிந்தாலொழிய இந்திய மக்கள் ஒற்றுமையாக முடியாது என்கிற முடிவுக்கு வந்துவிட்டோம்”

என்று குறிப்பிட்டுள்ளார். விருதுநகர் மாநில மாநாட்டில் (1931) இயற்றப்பட்டதையொட்டி இங்கும் ‘மத ஒழிப்பு’ தீர்மானம் இயற்றப்பட்டிருக்கலாம். அப்படியாயினும் அது ஒரு பொதுவான தீர்மானமாகாத் (‘மக்களுக்குள் எந்தவித மத உணர்ச்சியுடன் இருக்கக் கூடாது’) தான்

இருந்திருக்குமேயொழிய இஸ்லாத்தை மட்டும் ஒழிப்பது என்பதாக இருந்திருக்காது.

எத்தகைய பொருளில் இந்த மத ஒழிப்புத் தீர்மானம் இயற்றப்பட்டது என்பதை முன்பே விரிவாக விளக்கியுள்ளேன்.

மதம், மத ஒழிப்பு, மதமாற்றம் ஆகியவை குறித்து பெரியாருடைய சிந்தனையில் ஒரு தொடர்ச்சி இருந்ததையே நாம் பார்க்கிறோம். இஸ்லாம் குறித்து அவருக்கு நல்ல புரிதலும், மரியாதையும் இருந்தது. அதற்காக அதன் மீது தான் கொண்ட விமர்சனங்களை அவர் எந்நாளிலும், எந்த நோக்கத்துடனும் மறைத்துவிடவில்லை. எல்லாவற்றைப் போலவே இந்த அம்சத்திலும் அவர் கச்சவாவாக, வெளிப்படையா இருந்தார். இஸ்லாமில் கலந்து போன சடங்காசாரங்கள், மூடநம்பிக்கைகள் குறித்த அவரது விமர்சனங்களை இன்று முஸ்லிம்கள் யாரும் மறுக்கமாட்டார்கள். முஸ்லிம் சமுக முன்னேற்றம் கருதி உழைக்கும் இயக்கங்கள் அனைத்தும் இந்த விமர்சனங்களை வைக்கவே செய்கின்றனர். எங்களுக்கு மட்டும் அதிகாரம் இருந்தால் இங்குள்ள தர்ஹாக்களை எல்லாம் நாங்கள் இடித்துத் தள்ளிவிடுவோம் என ஒரு முக்கிய முஸ்லிம் இயக்கத் தலைவர் ஒருவர் மேடையில் கூறியதை நான் நேரில் கேட்டுள்ளேன்.

இஸ்லாம் குறித்து பெரியார், வைக்கிற வேறுசில விமர்சனங்கள் விவாதத்திற்குரியவை. அவர் வைக்கும் விமர்சனங்களிலேயே மிகக் கடுமையானது 1500 ஆண்டுகட்கு முற்பட்ட கொள்கைகளே கால தேச வர்த்தமானம் கருதாது இன்றைக்கும் இங்கும் பொருத்தமாகக் கொள்ள முடியாது என்பதே. இதை முஸ்லிம்கள் பலரும ஏற்கமாட்டார்கள். திருக்குர்ஆனும், ஹதீஸ்களும் (நபி மொழிகள்) என்றென்றும் வழிகாட்டவல்லது என்பதே பொதுவான முஸ்லிம் கருத்து. எனினும் இதிலும் கூட முஸ்லிம் சமூகத்திற்குள் சில பார்வை மாற்றங்கள் உலகளவில் உருவாகி வருவதை நான் கவனித்து வருகிறேன். சென்ற ஆண்டு கராச்சியிலுள்ள(பாகிஸ்தான்) நீதிமன்றம் ஒன்று 1500 ஆண்டுகட்கு முந்திய நெறிகளின் அடிப்படையில் இன்றைய நீதி வழங்க சாத்தியமில்லை எனக்கூறியது பத்திரிகைகளில் வந்துள்ளது. இஸ்லாமுக்கு இன்று அமெரிக்க, அய்ரோப்பிய வல்லரசுகள் கொடுக்கும் நெருக்கடிகளைக் கடுமையாக எதிர்க்கும் பல முஸ்லிம் சிந்தனையாளர்களும் கூட இத்தகைய கருத்துக் கொண்டுள்ளது. அவ்வப்போது

வெளிவரும் அவர்களின் பேட்டிகளிலிருந்து தெரிகிறது. எனினும் பெரும்பாலான முஸ்லிம்களின் கருத்து அதுவல்ல என்பது உண்மைதான்.

முல்லாக்களின் ஆதிக்கம் குறித்த விமர்சனங்களும் மதிப்பிடுவது, அதன் 'கடவுள்' கொள்கையை மறுப்பது என்பதைப் பொறுத்த மட்டில் பெரியாரின் சிந்தனைகள் பெரிதும விவாதத்திற்குரியது. மதத்தைப் பகுத்தறிவு கொண்டு அளத்தல் சாத்தியமல்ல என்பதே என்கருத்து. சில ஆத்திக நண்பர்கள், முஸ்லிம் நண்பர்கள் உட்பட எங்கள் மதம் விஞ்ஞான பூர்வமானது எனச்சில விளக்கங்கள் அளிப்பது வழக்கம். அதிலும் எனக்கு உடன்பாடில்லை. விஞ்ஞானமும் மதமும் வேறு வேறுதுறைகள். ஒன்றில் அளவு கோல் இன்னொன்றை அளக்கப் பயன்படாது. ஒன்றின் அங்கீகாரமும் ஏற்பும் இன்னொன்றுக்கு வேண்டும் எனக் கருதுவதும் அவற்றிற்குப் பெருமையன்று.

மதம் என்று வந்தால் அதில் கடவுள் இருக்கவே செய்வார். கடவுள் இல்லாத மதம் ஏது? இறப்புக்குப் பிந்திய உலகைப்பற்றி பேசாத இறை நெறி ஏது? இந்த மதத்தில் கடவுள் இருக்கிறாரே என ஆதங்கப்படுவது என்ன நியாயம்? இஸ்லாம் பிற மதங்களிலிருந்து பல அம்சங்களில் வேறுபட்டது என்பதை நானும் பலமுறை வற்புறுத்தியுள்ளேன். மற்ற மதங்களைப்போல இறப்புக்குப் பிந்திய நீதி வழங்கால மட்டுமே வற்புறுத்தாமல் இவ்வுலக வாழ்விலேயே நீதியும் சமத்துவம் மிக்க ஒரு சமூகத்தை உருவாக்கும் அரசியல் திட்டம் உடைய ஒரு மதம் இஸ்லாம் என்பது அதன் சிறப்பு. பெரியார் இதனை நுனித்து அறிந்து வைத்திருந்தார். புனித யாத்திரை குறித்த பார்வையில் இஸ்லாம் வேறுபடுவதையும் அறம் சார்ந்த வாழ்வை அது வற்புறுத்துவதையும் அவர் சுட்டிக்காட்டுவதை ஏற்கனவே பார்த்தோம்.

இஸ்லாத்தின் மீது அவர் கொண்ட அன்பின் விளைவாக அதனிடம் பெரியார் அதிகமாகவே எதிர்பார்த்தார் என்பதே இவற்றிலிருந்து நமக்கு வெளிப்படுவது.

இறை நம்பிக்கை இல்லாத பலரும், இடதுசாரிகள் உட்பட அரசியல் நோக்கிலிருந்தும், சனநாயகப் பார்வையின் அடிப்படை யிலு இஸ்லாமையும் முஸ்லிம் சமூகத்தையும் ஆதரித்து வருவது கண்கூடு. இந்தக் கூட்டு இன்றைய பாசிசச் சூழலில் மிகவும் இன்றியமையாத ஒன்று. ஒவ்வொருவதும் பிறரது எல்லையை உணர்ந்து மற்றவர்களிடமிருந்து அவர்களது எல்லையை மீறி எதிர்பாராது இணைவதே சரியாக இருக்கும். பால்ய மணம் என்பதை எதிர்ப்பது சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று. கற்பு குறித்த மதங்களுக்கு எதிரான பார்வையைக் கொண்டிருத்தல் பெரியாரியலின்

அடிப்படைகளில் ஒன்று. இந்த விசயங்களில் ஒருவரை ஒருவர் ம றுத்துக் கொள்வது ஆரோக்கியமாக அமையவேண்டும். இவற்றுக்கு அப்பாற்பட்ட கொள்கை இணைவுகளைத் தீர்மானிப்பதாக இந்த அம்சங்கள் அமைந்து விடலாகாது.

இன்றும் கூட அத்தகைய பிரச்சினைகள் நமக்கும் ஏற்படத்தான் செய்கின்றன.கடுமையான இந்துத்துவ எதிர்ப்பாளர்களாக இந்திய அரசியலில் வெளிப்படும் இடதுசாரிகள் இன்று குஷ்பு பிரச்சினையிலும் அண்ணா பல்கலைக்கழகத்து துணைவேந்தர் அறிவித்திருக்கும் உடைக்கட்டுப்பாட்டை எதிர்ப்பதிலும் வேறுபட்டுள்ளனர். எல்லாவற்றிலும் முஸ்லிம்களுடன் நிற்கக் கூடிய மனித உரிமையாளர்களும் பெரியாரியர்களும் மரண தண்டனை எதிர்ப்பில் அவர்களுடன் வேறுபட்டுள்ளனர். இது தவிர்க்க இயலாதது. இரு தரப்பினரும் புரிந்து கொள்ள வேண்டியது.

**4. ஜிஹாத்**

'ரோமன் தியாக மரபியல்' எனும் நூல் கிறிஸ்துமஸ் நாள் பற்றிச் சொல்ல வரும் போது 'உலகமெங்கும் அமைதியிலாழ்ந்திருந்த போது' கிறிஸ்து பிறந்தார் என்று கூறும். நபிகளுக்கு இத்தகைய பேறு வாய்க்கவில்லை என்றே கூறவேண்டும். குழப்பமும், போரும், அமைதியின்மையும், அறியாமையும் ('ஜாஹிலியா') தலைவிரித்தாடிய போதில் பிறந்தவர் நபிகள். அவரது தொடக்க காலச் செயற்பாடுகளிலும் பிரச்சாரங்களிலும் அரசதிகாரம் நோக்கிய குறிப்புகள் ஏதும் தென்படுவதில்லை. சமூக நீதி, சமநிலைச் சமுதாயம் ஒன்றைச் சமைத்தல் என்தைத் தாண்டி அவர் எதையும் பேசவில்லை. எனினும் மதீனாவிற்குப் புலம் பெயர்ந்தபின் எதிர்கொண்ட நிகழ்வுகள் அரசியலதிகாரத்தை நோக்கி அவரை இட்டுச் சென்றன.

இனக்குழுக்கள் தமக்கிடையே சதா போரிட்டுக் கொண்டிருக்கும் தகைமையற்ற ஒரு சமநிலைச் சமூகம் என்பது அவர் மக்காவிலேயே கண்ட கனவுதான் என்ற போதிலும், அதற்கான அரசியல் தீர்வு குறித்த சிந்தனை மதீனா வாழ்விலேயே உருப்பெற்றது. முழுமையான நில மானியச் சமூகமாகக் கூட உருப்பெற்றிராத அன்றைய சூழலில் இந்த அரசியல் தீர்வு தவிர்க்க இயலாதவாறு மதவழிப்பட்டதாகவே இருந்தது.

எனினும் 'ஹிஜ்ரத்'தைத் தொடங்கியபோது இதுகுறித்த தீர்மானகரமான பார்வையோ, தெளிவானத் திட்டமோ முஹம்மதிடம் கிடையாது. எந்தப் பெரும்

அரசியல் திட்டங்களுடனும் அவர் களத்தில் இறங்கவில்லை. அவர் எதிர்கொண்ட நிகழ்வுகளின் எதிர் விளைவாகவே அவரது செயற்பாடுகள் படிப்படியாக விரிந்தன. சிதைந்து வீழ்ந்து கொண்டிருக்கும் பழைய ஒழுங்கிற்கு மாற்றான புதிய உலகு குறித்துத் தீர்க்கமான சிந்தனைகள் விரைவில் உருப்பெற்றன. எல்லாச் செயற்பாடுகளிலும் ஏக இறைவனே அவரது முதல் முன்னுரிமையாக அமைந்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மதீனாவிற்குப் புலம் பெயர்ந்ததற்குப் பின் நபிகளின் செயற்பாடுகள் அரசியல் தன்மை பெறத்தொடங்கியதற்கு இணையாகத் திருக்குர்ஆனின் தொனியும் மாறத் தொடங்குகிறது. கவிதைகளுக்கே உரித்தான ஒருமையின்மை, வார்த்தைகளுக்கு வயப்படாத உண்மைகளை உரைநடைக்குரிய சரளமற்று வெளிப்படுத்தல் என்கிற தன்மைகளெல்லாம் போய் மிகவும் நடைமுறை சார்ந்த உரைநடையாய், தெளிவான சட்ட வரைவுகளாய், அரசியல் நிகழ்வுகள் மீதான கூரிய விமர்சனக் கூற்றுகளாய்த் திருக்குர்ஆன் வெளிப்படத் தொடங்குகிறது. இதன் பொருள் குர்ஆனின் இறையியற் கூறுகள் குறையத் தொடங்குகின்றன என்பதல்ல. புனித குர்ஆனின் எந்த ஒரு இறை வசனத்தின் அடிநாதமாகவும் இறையியலே அமைந்துள்ளது என்று உறுதிபடச் சொல்ல இயலும். ஏக இறைவனையும் அவன் மீதான நம்பிக்கையையும் மய்யமாகக் கொண்டு திருக்குர்ஆன் நகர்ந்து செல்கிறது.

புனிதப் போரில் (ஜிஹாத்) இறங்குமாறு மதீனாவிலுள்ள முஸ்லிம்களைத் திருக்குர்ஆன் வற்புறுத்துவது உண்மைதான். ‘ஜிஹாத்’ என்பது போரையும், கொலையையும், ரத்தப் பெருக்கையும் உள்ளடக்கியதுதான். ஆனால் ‘ஜ்ஹ்த்’ எனப்படும் (ழீலீபீ) அரபு வேர்ச் சொல்லின் பொருள் வெறும் ‘புனிதப்போர்’ என்பதைக் காட்டிலும் ஆழமான அர்த்தங்களைக் கொண்டது. ஆயுதமேந்திய மோதல்களைச் சுட்டுவதற்கு ஏராளமான சொற்கள் அரபு மொழியில் உண்டு. ‘ஹார்ப்’ (யுத்தம்), ‘சிர்ஆஆ’ (சண்டை), ‘மஅராக்கா’ (பொருதல்), ‘கிடால்’ (கொல்லுதல்) முதலியன அவற்றில் சில.

வெறும் போரைக் குறிப்பிடுவதுதான் திருக்குர்ஆனின் நோக்கம் எனில் மேற்குறித்த சொற்களில் ஏதேனும் ஒன்றைத் தேர்வு செய்திருக்கக்கூடும். ஆனால் தெளிவற்ற அதே சமயத்தில் பல்வேறு வளமான அர்த்த சாத்தியங்களுள்ள ‘ஜிஹாத்’ எனும் சொல் தேர்வு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. ‘ஜிஹாத்’ என்பது இஸ்லாத்தில் அய்ந்து தூண்களில் ஒன்று அல்ல. இஸ்லாமிய மதவியலின் மையக்கூறும் ‘ஜிஹாத்’ அல்ல.

ஆனால் மேலைத் தேயத்திலும் கீழைத் தேயத்திலுமுள்ள இஸ்லாமிய வெறுப்பாளர்கள் 'ஜிஹாத்' குறித்த நேர்மாறான கருத்தையே தமது மூளைகளில் நிரப்பியுள்ளனர். 'இஸ்லாமின் வெறி' (___), 'இஸ்லாமின் வாள்' (___), 'பரிசுத்த வெறி' (___), 'புனித பயங்கரம்' (___) என்றெல்லாம் அவர்களின் தொலைக்காட்சி மற்றும் திரைப்படச் சொல்லாடல்கள் விரிவதை நாம் அறிவோம். நேரடியான இத்தகைய சொற் பிரயோகங்கள் இல்லை எனினும் மணிரத்னம், அர்ஜுன், விஜயகாந்த் முதலியோர் பங்குபெறும் தமிழ்த் திரைப்படங்களில் இத்தகைய தொனி ஒலிப்பதை நாம் உணர முடியும். 'இஸ்லாமியத் தீவிரவாதிகள்' (ஜிஹாதிகள்) குழந்தைகள் செல்கிற பேருந்து ஒன்றை வெடி வைத்துத் தகர்ப்பது போன்ற காட்சிகளைத் தமிழ் திரைப்படங்களில் நாம் பார்த்துள்ளோம். இஸ்லாம் குறித்த வக்கிரமான புரிதலின் விளைவே இது.

இஸ்லாத்தைப் பொருத்தமட்டில் அறவியல், இறையியல், அரசியல் எனச் சகல தளங்களிலும் ஒரு நல்ல முஸ்லிம் போராட

வேண்டியவனாகவுள்ளான். ஏழைகளும், பலவீனமானவர்களும் சுரண்டப்படாத, கடவுள் எவ்வாறு மனிதர்கள் வாழ வேண்டும் என நினைத்தானோ அது போலவே மனிதர்கள் வாழ்கிற, நீதியும் சமத்துவமும் நிலவுகிற ஒரு சமநிலைச் சமுதாயத்தை இம் மண்ணில் படைப்பதற்காக ஒரு முஸ்லிம் இவ்வாறு சகல களங்களிலும் போராட வேண்டியவனாக உள்ளான். போரொன்று முடிந்துத் திரும்பி வரும்போது சின்ன "'ஜிஹாத்'தில் இருந்து பெரிய 'ஜிஹாத்'திற்குத் திரும்பியுள்ளோம்" என நபிகள் கூறினர் என ஒரு ஹதீஸ் உரைப்பதை முஸ்லிம்கள் அறிவர். இன்னும் தந்திரமான, வெல்வதற்குக் கடினமான எதிரி நம் ஒவ்வொருவருள்ளும், நம் ஒவ்வொரு சமூகத்திற்குள்ளும் உள்ளனர். அவர்களை வெல்வது இன்னும் பெரிய காரியம், இன்னும் பெரிய ஜிஹாத் அதற்குத் தேவையாக உள்ளது என்பதே அக்கூற்றின் பொருளள்.

**5. அவர் (நபிகள் நாயகம்)**

முஸ்லிம்களின் இறுதி வெற்றியை அவர் ஈட்டித் தந்திருந்த போதும் எதிர்காலம் குறித்தோ தனக்குப் பிந்திய வாரிசு குறித்தோ முஹம்மது எதையும் செய்திருக்கவில்லை. தளிர்விடத் தொடங்கியிருந்த முஸ்லிம் அரசுக்கும் நபிகள் உருவாக்கிக்காத்த உம்மாவுக்கும் என்ன நேரும்? இறைவாக்குகளும் இனி இறங்கப் போவதில்லை. யார் அவர்களை வழிகாட்டப் போகிறார்கள்? முஹம்மது இருந்தபோதே முழு விசுவாசம் காட்டாத பெதோய்ன் குடியினர் இனிமேலும் கட்டுப்பட்டு இருப்பார்களா? செய்து கொண்ட ஒப்பந்தங்களை

அண்டை நாடுகள் மதிக்குமா? பழைய இனக்குழுப் பகைகளை அரபுச் சமூகம் புதுப்பித்துக் கொள்ளுமா?

நபிகள் மறைந்த செய்தி மதீனா முழுவதும் காட்டுத்தீயெனப் பரவியது. அலறி அடித்துக்கொண்டு அனைவரும் முஹம்மதின் இல்லத்தை நோக்கியும் பள்ளிவாசலை நோக்கியும் திரண்டனர். உசாமா படையெடுப்பை முடித்துக் கொண்டு வீரர்களுடன் ஓடோடி வந்தார். அபூபக்ரும் ஓடிவந்தார். முஹம்மதின் முகத்தில் முத்தமிட்டார். விடை சொன்னார். பள்ளியை நோக்கி அகன்றார். அங்கே கூடியிருந்த மக்கள் முன் உமர் ஆவேசமாக உரையாற்றிக் கொண்டிருந்தார். நபிகள் சாகவில்லை என்று அவர் கூறிக் கொண்டிருந்தார். மோசஸ் சினாய் மலைக்குச் சென்றது போல முஹம்மது அல்லாஹ்விடம் சென்றுள்ளார். அவர் வந்துவிடுவார். முஹம்மது செத்ததாகச் செய்தி பரப்பிய பொய்யர்களின் கைகளையும் கால்களையும் வெட்டி எறிவார். அபூபக்ரால் உமரை அமைதிப்படுத்த இயலவில்லை. உமரைச் சற்றே ஒதுக்கிவிட்டு முன் சென்ற அபூபக்ர் உணர்ச்சி ததும்பும் முகத்துடன் அவர்கள் முன் கணீரென்று பேசத் தொடங்கினார்.

ஏகஇறைவனைத் தவிர வேறு யாரையும் வணங்கலாகாது என்பதை வாழ்நாளெல்லாம் கற்பித்தவரல்லவா முஹம்மது. இறைவனுக்கு அளிக்க வேண்டிய மகிமையை மனிதர்க்கு அளிக்கலாகாது எனத் திருக்குர்ஆன் எச்சரிக்கவில்லையா? எல்லோரையும் போலத் தானும் என்றாவது ஒருநாள் இறக்கக்கூடிய மனிதன்தான் என்பதை முஹம்மது திரும்பத் திரும்பச் சொல்லவில்லையா? கிறிஸ்தவர்கள் ஏசுவை வணங்குவது போல முஸ்லிம்கள் நம்மை வணங்கலாகாது என்பதை வற்புறுத்தவில்லையா? முஹம்மது சாகவில்லை என நம்புவது அவர் குறித்த அடிப்படை உண்மையொன்றையே மறுப்பதல்லவா. ஆனால் இறைவன் ஒருவனே வணக்கத்திற்குரியவன் என முஸ்லிம்கள் நம்பும் வரை முஹம்மதின் பெயர் வாழும். “அன்பார்ந்த மக்களே, முஹம்மதை யாரேனும் வணங்குவீர்களாயின் அவர் இதோ இறந்துவிட்டார். அல்லாஹ்வை வணங்கினீர்களானால் அவன் உயிருடனிருக்கிறான். அவன் மரணத்தை அறியாதவன்” என்று கூறிய அபூபக்ர் உஹத் போரில் முஹம்மது மரணமுற்றதாகப் பரவிய வதந்தியை அடுத்து இறக்கப்பட்ட திருக்குர்ஆன் வாசகங்களாகிய, “முஹம்மது ஒரு தூதர் மட்டுமே. நிச்சயமாக அவருக்கு முன்பும் தூதர்கள் பலர் வாழ்ந்து சென்றுள்ளனர். அவர் மரணமடைந்தால் முந்திய வாழ்க்கைக்கு நீங்கள் திரும்பிவிடுவீர்களா?”(3:144) என்பவற்றை ஓதியபோது சுற்றியிருந்தோர் அமைதியடைந்தனர்.

உமர் நொறுங்கிப் போனார். “யா அல்லாஹ்! அபூபக்ர் இதைச் சொன்ன போது நான் வாயடைத்துப் போனேன். இறைத்தூதர் உண்மையிலேயே இறந்துபோனார் என்பதை அறிந்தபோது என் கால்களால் என்னைச் சுமக்க இயலவில்லை. நான் தளர்ந்து வீழ்ந்தேன்” என்றார் பின்னர் உமர். முஹம்மதுக்குப் பின் உம்மாவின் தலைமையை ஏற்பது யார் என்பதை அவ்வளவு எளிதாக முடிவு செய்ய இயலவில்லை. புலம் பெயர்ந்து வந்த குறைஷிகளில் யாரும் இப்பொறுப்பை ஏற்பது மதீனாவாசிகளுக்கு குறிப்பாக கஸ்ரஜ் குலத்தினருக்குப் பிடிக்கவில்லை.

முஹம்மதின் முதல் பிரிதிநிதியாக, முதல் கலீபாவாக – அன்சாரிகளில் ஒருவரான ஸஅத் இசப்ன் உபாதாவையே தேர்வு செய்ய வேண்டும் என்கிற நிலைப்பாட்டை அவர்கள் எடுத்தனர். அதே நேரத்தில் புலம் பெயர்ந்திருந்த குறைஷிகளில் பெரும்பாலோர் அபூபக்ர் தான் அப்பொறுப்புக்கு ஏற்றவர் எனக் கருதினர். உமரும் கஸ்ரஜ் குலத்தவர்களிடம் என்றென்றும் பகை கொண்டிருந்த மதீனாவாசிகளான அவ்ஸ் குலத்தாரும் கூட அபூபக்ரை ஆதரித்தனர். முஹம்மதின் குடும்பதார்கள் அலீ, அப்பாஸ், வளர்ப்பு மகனின் மகனாகிய உஸாமா, உதவியாளருள் ஒருவரான ஷிக்ரான் ஆகியோருடைய விருப்பம் மட்டும் வேறுவிதமாக இருந்தது. அவர்கள் முஹம்மதின் மருமகன் அலீயை முதல் கலீபாவாக்க விரும்பினர். எனினும் அவர்களுக்குப் பெரிய அளவில் வெளி ஆதரவில்லை.

பந்தங்களைக் கொளுத்தி வைத்துக்கொண்டு இரவு முழுவதும் விவாதம் நடந்தது. மதீனா நகரெங்கம் மக்கள் மத்தியில் இதே பேச்சாக இருந்தது. நபிகளின் உடல் ஆயிஷாவின் வீட்டில் கிடந்தது. புலம் பெயர்ந்து வந்துள்ள குறைஷி ஒருவர், உதவியாளர்களில் ஒருவர் என இரட்டைத் தலைமை இருக்கலாமே என ஒரு மதீனாவாசி முன்மொழிந்தார். பல்வேறு இனக்குழுக்களும் தத்தம் தலைவர்களை (உலமா)த் தேர்வு செய்து கூட்டாட்சி அமைக்கலாம் என்கிற கருத்தும் கூட மொழியப்பட்டது. முஹம்மது உருவாக்கிய உம்மாவை அது பலவீனப்படுத்தி விடும் என கூறி அபூபக்ரும் உமரும் அதை மறுத்தனர். ஒன்றில் அனைவரும் உடன் பட்டிருந்தனர். கருத்து வேற்றுமையால் ஏற்படும் பிளவு எல்லோருக்குமே ஆபத்து என்பதுதான் அது. தேர்ந்தெடுக்கப்படுவர் எல்லோராலும் மதிக்கப்படக் கூடியவராக இருக்க வேண்டும். அன்சாரிகளில் எவரும் தேர்வு செய்யப்பட்டால் மதீனாவுக்கு வெளியே இருப்பவர்கள் அவரது ஆணையை ஏற்பார்களா என்பது அய்யம். தம் வேர்களை இழந்து நீண்ட நாளாய் புலம் பெயர்ந்து வந்த குறைஷி ஒருவரே பொருத்தமாக இருக்க இயலும். உமர் அல்லது அபூஉபைதா இருவரில்

ஒருவரைத் தேர்வு செய்யலாமே என்றார் அபூபக்ர். இறுக்கமானவராகவும் கடுமையானவராகவும் அறியப்பட்ட உமரின் பெயர் அவ்வளவு உற்சாகமாக ஏற்கப்பட வில்லை. உமரே அபூபக்ரை முன்மொழிந்தார். அபூபக்ரே நபிகளின் பிரதிநிதி (கலீபா) என இறுதியில் முடிவாயிற்று. அலீயும் உறவினர்களும் இம்முடிவை ஏற்பதைத் தவிர வேறு வழியில்லை என்றானது.

தேர்ந்தெடுக்கப்பட்ட அபூபக்ர் மக்கள் திரளை நோக்கிப் பேசலானார்:

"உங்கள் மீது எனக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. (இதன் பொருள்) உங்களிற் சிறந்தவன் நான் என்பதல்ல. நான் நல்லது செய்யும் போது எனக்கு உதவுங்கள். தீமைகள் செய்வேனாயின் திருத்துங்கள். விசுவசித்து ஒழுகுதலே சத்தியம். துரோகம் செய்வதே பொய்மை. உங்களில் பலம் குறைந்தவரே என் கண்ணில் பலம் வாய்ந்தவர். அல்லாஹ்வின் விருப்போடு நான் அவருக்கான உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கும் வரை (இது தொடரும்). உங்களில் பலம் மிகுந்தவர் என் கண்ணில் பலமற்றவராகவே தெரிவார். அல்லாஹ்வின் விருப்புடன் அவரிடமிருந்து பிறரின் உரிமைகளை நான் ஈட்டிக்காக்கும் வரை நான் அல்லாஹ்வையும் அவரது தூதரையும் பின்பற்றி நடக்கும் வரை நீங்கள் என்னைப் பணிந்து நடவுங்கள். நான் அல்லாஹ்வுக்கும் அவரது தூதருக்கும் பணிந்து நடக்காதபோது நீங்கள் என்னைப் பணிய வேண்டியதில்லை. தொழுகைக்கு எழுங்கள். அல்லாஹ் உங்கள் மீது கருணை காட்டட்டும்".

அனைவரும் எழுந்தனர். நபிகளின் உடல் அடக்கம் செய்யப்படுவது குறித்த நினைவு எழுந்தது.

நபிகளின் மூன்று புதல்வியரும் அவரது மகன் இப்ராஹீமும் அடக்கம் செய்யப்பட்டிருந்த பகீ அல்-கர்கத்தில் அவர்களின் உடலருகே அடக்கம் செய்யலாமெனச் சிலர் கூறினர். மக்காவில் அடக்கம் செய்யலாம் எனவும் பிற இறைத்தூதர்களைப் போல எருசலேமில் அடக்கம் செய்யலாம் எனவும் கூடச் சிலர் கூறினர். பள்ளிவாசலில் அடக்கம் செய்யலாம் என்பது சிலரின் கருத்தாக இருந்தது. இறைத்தூதர்களை அவர்கள் இறந்த இடத்திலேயே அடக்கம் செய்ய வேண்டுமென நபிகள் கூறியதாக அபூபக்ர் நினைவு கூர்ந்தார். அக்கருத்து ஏற்கப்பட்டது. அலீயும் உறவினர்களும் அவசர அவசரமாக இம்முடிவை மேற்கொண்டு ஆயிஷா கூட அறியாமல் அவரது வீட்டிற்குள் கப்ர் (அடக்கக் குழி) தோண்டப்பட்டது என்றொரு கருத்தும் உண்டு (மாக்ஸிம் ரோடின்சன்).

அலீயும் நெருங்கிய உறவினர்களும் முஹம்மதின் உடலைக் குளிப்பாட்டினர். எக்காரணம் கொண்டும் இறைத்தூதரின் உடல் வெளியே தெரியக்கூடாது என்பதால் அணிந்திருந்த ஆடையுடனேயே அவர் உடல் குளிப்பாட்டப்பட்டது. மூன்று துணிகளால் அவர் உடல் போர்த்தப்பட்டு கதவுகள் திறக்கப்பட்டன. மதீனத்து மக்களனைவரும் சாரிசாரியாய் வந்து நபிகளுக்கு இறுதி மரியாதை செய்தனர். சிறுசிறு குழுக்களாக 'ஜனாஸா' (இறுதி)த் தொழுகை செய்தனர். நபிகள் அணியக்கூடிய சிவப்பு நிற மேலாடை ஒன்றை கப்ருக்குள் விரித்தபின் அலீயும் உறவினர்களும் நபிகளின் உடலை இறக்கினர். குறைஷிகளிலேயே புகழ் பெற்றவரும் உலக வரலாற்றின் திசையை மாற்றியமைத்தவருமான முஹம்மது இப்ன் அப்தல்லாஹ்வின் உடல் சுடப்படாத பச்சைச் செங்கற்களைக் கொண்டு நல்லடக்கம் செய்யப்பட்டது.

அபூபக்ரின் தலைமையை (632-634) முதலில் அலீ ஏற்காதபோதும் விரைவில் அவர் சமாதானமாக வேண்டிய நிலை ஏற்பட்டது. இரண்டே ஆண்டுகளில் அபூபக்ர் மறைந்தார். அடுத்த கலீபா உமர் (634-644). பின்னர் உத்மான் (644-656) கலீபா ஆனார். இறுதியில் 656ம் ஆண்டு நான்காவது கலீபாவாக அலீ பொறுப்பேற்றார். இவர்கள் நால்வரின் ஆட்சிக் காலத்தை முன்மாதிரியான பொற்காலமென முஸ்லிம்கள் மதிக்கின்றனர். முஹம்மதின் கொள்கைகளிலிருந்து இம்மியும் வழுவாமல் 'சரியாக வழி நடத்தப்பட்ட கலீபாக்கள்' ('ரஷிதூன்') என இவர்கள் அழைக்கப் படுகின்றனர். ஒரு முஸ்லிம் ஆட்சியாளர் கொடூரமானவராக இருக்காலாது என்பதை அலீ அதிகம் வற்புறுத்தினார். ஒரு முஸ்லிம் அரசர் இறைவனுக்குக் கீழ்ப்படிந்தவர். தனது மக்களுக்குச் சமமாகக் கருதப்படுபவர். ஏழைகளுக்கும் அனாதைகளுக்கும் எப்போதும் செவி சாய்ப்பவர். ஆடம்பரத்தின் அடிப்படையிலோ வேறு எந்த வகையிலுமோ ஒரு ஆட்சியாளர் தன்னை மக்களிடமிருந்து பிரித்து நிறுத்திக் கொள்ளகூடாது. எப்போதும் மக்களின் குறைகளைக் கேட்க அவர் தயாராயிருக்க வேண்டும்.

எல்லா முஸ்லிம் அரசர்களும் அப்படியிருந்தனர் என்றோ இன்றைய முஸ்லிம் அரசுகள் இக்கொள்கைகளைப் பின்பற்றிப் செயல்படுகின்றன என்றோ இதற்குப் பொருளல்ல.

எனினும் அவ்வப்போது முஸ்லிம் அரசர்கள் தாம் இஸ்லாமிய வழியிலேயே ஆட்சி செய்வதாக நிறுவ வேண்டிய அவசியமும் இருந்தது. சிலுவைப் போர்களின் காலத்திய முஸ்லிம் மன்னர்களாகிய நூர் அத்–தின், சலாதின்

முதலியோர் ஏழைகளுக்கு வாரி வழங்கியதும், இஸ்லாமியக் கோட்பாட்டின்படி வரிச் சீர்திருத்தம் செய்ததும், மக்கள் எளிதில் அணுகக் கூடியதாக இருந்ததும் குறிப்பிடத்தக்கன. இஸ்லாமிய வழியில் ஆட்சி இல்லை எனக்கூறி மக்கள் அரசுகளைத் தூக்கி எறிவதற்கும் இக்கொள்கைகள் நியாயம் கற்பித்தன. நம் காலத்திய ஈரானிய மன்னர் ஷா தூக்கி எறியப்பட்டது இதற்கொரு எடுத்துக்காட்டு.

முஹம்மது தன் தோழர்களுக்கு மிகச் சிறந்த ஆளுமையையும், பயிற்சிகளையும் அளித்திருந்தார். முதல் நான்கு கலீபாக்களும் தத்தம் அளவில் சிறப்புக்குரியவர்களாகவும் உம்மாவைக் கட்டிக் காத்தவர்களாகவும் இஸ்லாமிய அரசை விரிவாக்கியவர்களாகவும் இருந்தனர். நபிகள் மறைந்த இரு வாரங்களுக்குப் பின் ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி உசாமாவின் தலைமையில் சிரிய நாட்டு எல்லையை நோக்கிப் படைகள் புறப்பட்டன. படையெடுப்பைக் கைவிடவோ தலைமையை மாற்றவோ அபூபக்ர் அனுமதிக்கவில்லை. அதே ஆண்டு செப்டம்பரில் காலித் தலைமையில் சென்ற படை அரேபிய எதிர்ப்பு ஒன்றை அடக்கி வந்தது. உம்மாவிலிருந்து பிரிய எத்தனித்த பல்வேறு குழுக்கள் மீது அப்போது தொடுக்கப்பட்ட போர்கள் 'ரித்தா' எனப்படும். பலர் தம்மைப் புதிய இறைத்தூதர்கள் என அறிவித்துக் கலகம் செய்யத் துவங்கியபோது முஸ்லிம்கள் அவர்களை வென்றனர். அரபு முழுவதும் இஸ்லாமிய ஆட்சியை அபூபக்ர் உறுதிப்படுத்தினார். உமரின் ஆட்சிக்காலத்தில் முஸ்லிம் படைகள் ஈராக், சிரியா, எகிப்து வரை வெற்றி கொண்டன. கடீஸ்சியா போரில் (637) பாரசீகப் படையையும் அவர்கள் வெற்றி கொண்டனர். மதீனா நகரப் பள்ளிவாசலில் பாரசீகப் போர்க் கைதி ஒருவனால் உமர் சாய்த்து வீழ்த்தப்பட்ட (644) பின்னர் உத்மான் இப்ன் அஃபன் கலீபா ஆனார். பைசாண்டைன்களிடமிருந்து சைப்ரஸ் கைப்பற்றப்பட்டது இவரது காலத்தில்தான். வட ஆப்ரிக்காவில் திரிபோலி (லிபியா) வரை முஸ்லிம் படைகள் சென்றன.

எனினும் சில எதிர்ப்புகளின் விளைவாக உம்மாவுக்குள் ஏற்பட்ட கலகத்தில் அரபு வீரர்கள் சிலர் உத்மானின் எளிய இல்லத்தை முற்றுகையிட்டு அவரைக் கொன்றனர். கலகக்காரர்கள் அலீயைப் புதிய கலீபாவாக்கினர். முஹம்மதுக்குப் பிந்தைய நூறாண்டுகளில் இஸ்லாமியப் பேரரசு இமயம் முதல் பைரனீஸ் வரை பரவியது. எனினும் தாம் வெற்றிகொண்ட நாடுகளில் இஸ்லாத்தைத் திணிப்பது அவர்களின் நோக்கமாக இல்லை. 700 ம் ஆண்டு வாக்கில் இஸ்லாமுக்கு மாறுவது சில ஆண்டுகள் தடை செய்யப்பட்டிருந்தது கூட

உண்டு. எனினும் பரப்புதற்குரிய மதம் என்பதால் கலீபாக்கள் தடையை விரைவில் ரத்து செய்தனர். இஸ்லாமுக்கு அழைப்பு விடுத்தனர். எண்ணற்ற மக்கள் இஸ்லாமாயினர். மத்திய கிழக்கு மற்றும் வட ஆப்ரிக்க மக்களின் தேவைகளைத் திருக்குர்ஆன் நிறைவேற்றியது.

தொடர்ந்த வெற்றிகள், இந்தியா, இந்தோனேசியா, ஆப்ரிக்கா என வேறுபட்ட பல்வேறு கலாச்சாரங்களுக்கு இஸ்லாத்தைக் கொண்டு செல்லுதல். அந்தக் கலாச்சாரங்களிலிருந்து பலவற்றைப் பெற்றுக் கொள்ளுதல் என்பதாக இஸ்லாம் தொடர்ந்து வரலாற்றுடனும் புவிப்பரப்புகளுடனும் ஒரு உரையாடலை நிகழ்த்திக்கொண்டே இருந்தது, இருந்து கொண்டிருக்கிறது. சுன்னா, ஷியா, சூஃபி எனப் பல உள் மரபுகள் உருவான போதும் இவை எதுவும் உம்மா என்னும் கருத்தாக்கத்திலிருந்து பிறழவில்லை. உம்மாவினூடாகவே முஸ்லிம் இறையியல்கள் அனைத்தும் அமைந்தன. கிறிஸ்தவ, புத்தத் துறவிகளைப் போலல்லாது இவர்களில் எவருமே உலகியலிலிருந்து, எதார்த்தத்திலிருந்து விலகி நிற்கவில்லை. மனித வாழ்விலிருந்து ஒதுங்கவில்லை. உலகையும் வாழ்வையுமே இறைத் தேடலின் களமாக அவர்கள் ஏற்றுச் செயல்பட்டனர்.

இந்த இறைநெறிக்கு எடுத்துக்காட்டாக அவர்கள் முன் நபிகளின் வாழ்வு இருந்து வழிகாட்டியது. நான் அடிக்கடி இந்நூலினூடாக கூறி வருவதைப் போல அவர் சாதாரண ஒரு மானுடராக, மானுடத்தின் அனைத்து ஆசாபாசங்கள், நிறைகள், குற்றங்கள் மகத்தான பண்புகள் ஆகியவற்றோடு வாழ்ந்தார். வரலாற்றிலிருந்து ஒதுங்காமல் அதில் தலையிட்டார். நெறிமிக்க ஒரு வாழ்வை வாழ்ந்து காட்டினார். அறம் நிறைந்த ஒரு அரசியலைச் செயல்படுத்தினார். மாதிரியான இஸ்லாமிய ஆட்சி ஒன்றை நிறுவிக் காட்டினார். இறைத்தூதர் முஹம்மதின் மீதுள்ள அன்பினூடாகவும் முஸ்லிம்களிடையே சகோரத்துவம் நிலைநாட்டப் படுகிறது. சாதாரணர்களிலும் சாதாரணராக அவர் வாழ்ந்திருந்த போதும் அவர் வெறும் சாதாரணர் அல்லர். அவர் ஒரு முன்மாதிரி. தெய்வாம்சம் பொருந்தியவராக அவரைக் கருதாத போதும் முஸ்லிம்கள் அவரை ஒரு முழுமையான மனிதனாக (___) நேசிக்கின்றனர். மதிக்கின்றனர். அவர் வாழ்ந்த காலத்தில் தேனீர், காபி முதலியவற்றைப் பருகியவரல்ல என்பதால் தாங்களும் அவற்றைப் பருகாத முஸ்லிம்கள் உண்டு.

முஹம்மதின் பெயரை உச்சரிக்கும் போதெல்லாம் ‘அல்லாஹ்வின் ஆசியும் அமைதியும் அவர் மீது கவியட்டும் (சல்...)’ என்று சேர்த்துச் சொல்கிற வழக்கத்தை அவர்கள் கடைபிடிக்கின்றனர். (இந்நூலில் இம்முறை கடைபிடிக்கப்

படாமைக்காக முஸ்லிம் தோழர்கள் என்னை மன்னிக்கட்டும்) இறைவனுக்கு முழுமையான திறப்புடைய ஒரு மனிதம் அவருடையது. இறையுலகிற்கு முழுமையான திறப்புடையவர் அவர் என்பதாலேயே அவர் எழுதப் படிக்க அறியாத உம்மி நபியாகக் கருதப்படுகிறார். ‘கல்வி என்னும் பல்கடல் பிழைத்தும்’ என்கிற மாணிக்கவாசகம்தான் இங்கு நினைவுக்கு வருகிறது. எனவே ஒவ்வொரு முஸ்லிமுக்கும் முஹம்மதைப் போலவும் அவர் விதித்த நெறிகளுக்கு ஏற்பவும் வாழ்வதென்பது இறைவனுக்கு அருகாமையிற் செல்வதே. எனவேதான் எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் முஸ்லிம் அறிஞர்கள் இஸ்லாமியப் பேரரசு முழுவதிலும் அலைந்து திரிந்து முஹம்மது வாழ்ந்ததையும் பேசியதையும் குறித்த அதிகாரபூர்வமான தகவல்களைத் திரட்டித் தொகுத்தனர் (ஹதீஸ்). திருக்குர்ஆனும் ஹதீஸ்களுமே பின்னாளைய இஸ்லாமியச் சட்டத்திற்கு (ஷரியத்) அடிப்படைகள் ஆயின.

ஒரு குறிப்பான காலத்தில் வாழ்ந்து அன்றைய அநீதிகளையும், ஒடுக்குமுறைகளையும் எதிர்த்துப் போராடியவர் அந்த எளிய மனிதர். ஒரு சாதாரண ஒட்டக மேய்ப்பராக வாழ்வைத் தொடங்கி உலகை மாற்றியவர். அவர் வழி இறங்கிய திருக்குர் ஆன் இன்றைக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அநீதியை எதிர்த்துப் போராடும் உத்வேகத்தை அளிக்கும் செய்திகளைத் தாங்கி இதோ நம்முன் விரிந்து கிடக்கிறது. அநீதிகள் எதன் பெயரிலானாலும் அதை எதிர்ப்பதே ஒரு முஸ்லிமின் கடமை. இறை வழியிலிருந்து விலகிச் சென்றால் தன்னையே தூக்கி எறியத் தயங்கலாகாது என முதல் கலீபா அபூபக்ர் சொன்னது வெறும் வார்த்தைகளன்று.

அதோ மதீனாவில் அண்ணல் அடக்கம் செய்யப்பட்ட அந்த எளிய குடில் இன்று அலங்கரிக்கப்பட்ட ஒரு மசூதியாக ஒளி வீசி நிற்கிறது. முஸ்லிம் அரசர்கள் அதற்கு வாரி வழங்கி அழகுபடுத்தியுள்ளனர். அருகில் அபூபக்ரும் உமரும் துயில் கொள்கின்றனர். ஏசுவுக்கும் கூட அங்கே ஒரு இடம் ஒதுக்கப்பட்டிருப்பதாக ஒரு நம்பிக்கை. ஹஜ் செல்லும் யாத்ரீகர்கள் மதீனாவுக்குச் சென்று நபிகளின் அடக்கத் தலத்தைத் தரிசிப்பது வழக்கம். ஆனாலும் அவர்கள் அங்கே விழுந்து வணங்குவதில்லை. சாகும் தறுவாயில் கூட தனக்குப் பின் தனது கல்லறை வணக்கத் தலமாக மாறிவிடக் கூடாது என உறுதியாகச் சொல்லிச் சென்றவரல்லவா நபிகள்.

ஆனாலும் அவர் அடக்கமாயிருக்கும் பள்ளியைத் தரிசிக்காமல் பெரும்பாலோர் வருவதில்லை. நான் இறந்த பின்பு யார் ஒருவர் என்னை வந்து பார்த்தாலும்

அது நான் உயிருடன் இருந்தபோது வந்து பார்த்ததற்குச் சமம்” என்றல்லவா முஹம்மது சொல்லியுள்ளார்.

முஹம்மதை அறிந்த யாருக்கும் அந்த ஆசை இருக்கவே செய்யும். எனக்கும் கூடத்தான். இன்ஷா அல்லாஹ்.